


# கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்

எஸ். முத்துமீரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்

எஸ். முத்துமீரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KILAKILANKAI NADDUPURA MUSLIMKALIN POORVEEGAMUM VALVUM VALVATHARANKALUM (S)

by S. Muthumeeran

First Edision : 2013 January - (Pages 142)

Published by Meeraumma Publications

No 77, 2nd Cross Street,

Nintavur - 12.

Phone : 0672250042, 0672250512

Price : Rs. 275/-

Printed at : Abna Print, Maruthamunai.

◆ ◆ ◆

கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்

எஸ். முத்துமீரான்

முதல் பதிப்பு : 2013 ஜனவரி (பக்கம் 142)

வெளியீடு : மீரா உம்மா வெளியீட்டகம்

இல 77, 2ம் குறுக்குத்தெரு,

நிந்தவூர்-12.

தொ.பே : 0672250042, 0672250512

விலை : ரூபா. 275/-

அச்சு : அப்னா பிறின்ட், மருதமுனை.

ISBN : 978-955-8281-06-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்காகவே உழைத்துழைத்து

தங்களுக்கென வாழ மறந்து மறைந்த

என் வாப்பாவுக்கும், உம்மாவுக்கும்

சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணக்கும் மண்வாசனை

சட்டத்தரணி முத்துமீரான் ஒரு சகலகலா வல்லவர். தொட்ட துறைகளையெல்லாம் துலங்கவைத்து வித்தக விரல்களில் முத்திரை மோதிரங்களைத் தரித்திருப்பவர்! அனைத்திற்கும் மேலாக மனதைத் தொடும் மண்வாசனைக் கதைகளை அலைந்து திரிந்து சேகரித்து மக்கள் இதயங்களில் பத்திரப்படுத்தும் பணியினை அயராது தொடர்ந்து செய்பவர்!

நாட்டுப்புற மக்கள் கள்ளம் கபடு அறியாதவர்! உள்ளொன்று வைத்தும் புறமொன்று பேசும் கலை தெரியாதவர்கள்! வழக்காறுகள், கதைகள், கதைப்பாடல்கள் வாயிலாக வெட்டவெளி மைதானமாகத் திறந்து கிடக்கும் தம் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி வெளிச்சப்படுத்திக் காட்டுபவர்கள்!

நாட்டுப்புறவியல் கள ஆய்வாளனுக்குத் தேவையான பொறுமையும், பொறுப்புணர்வும், சகிப்புத் தன்மையும், சாமர்த்தியமும், மக்களோடு மக்களாகக் கலந்து நிற்கும் மனப்பக்குவமும் ஒருங்கே அமையப் பெற்றவர், நண்பர் முத்துமீரான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி பட்டம் பெற்று சமூகத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்தாலும் தன்னையொரு நாட்டுப்புறத்தான் என அறிமுகம் செய்து கொள்வதில் சிறிதும் வெட்கப்படாதவர்.

எனவேதான் அவரால் காட்டில் காய்ந்த நிலவாகக் கிடந்த இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகளை அள்ளித் தர முடிந்தது.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்களின் நயங்களை எடுத்துரைக்க முடிந்தது.

கிழக்கிலங்கை முஸ்லிம் அன்னையர் தம் பிள்ளைகளைக் கொஞ்சி மகிழ்ந்து பாடிய தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்துத்தர முடிந்தது.

இலங்கை கிராமிய இலக்கியப் பிதாமகனாகத் திகழும் முத்துமீரானின் மற்றுமொரு வெற்றிகரமான ஆக்கமாய்த் திகழும் கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரமும் என்னும் இந்நூல் இலங்கை கிராமிய இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாய்த் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இலங்கை நாட்டுப்புறவியல் துறையில் இதுவரை யாருமே தொட்டுப்-பார்க்காத பகுதிகளிலெல்லாம் கால்பதித்துப் பல நூல்களை எழுதித் தலைநிமிர்ந்து நிற்கின்ற சிறந்த நாட்டுப்புறவியலாளர்.

மண்ணின் மதிப்புமிகு மைந்தராய்த் திகழும் நண்பர் முத்துமீரான் இன்னும் பல ஆக்கங்களை இத்துறையில் வாரி வழங்க வல்ல இறைவன் நல்லருள் புரிய வாழ்த்தி மகிழ்கிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்

**முனைவர் ஹ.மு.நத்தர்சா**
தலைவர், தமிழ்த்துறை,
புதுக்கல்லூரி, சென்னை-14.
அலைபேசி: 09449444776646



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

உலகில் மனித வாழ்வு, நிலம், அதன் தட்பவெப்பம் ஆகியவற்றின் தன்மைக்கேற்ப அமைகிறது. எல்லா நிலங்களிலும் மனிதன் வாழ முடியும் என்றாலும், ஒரு நாடு வளமிக்க நாடாக இருக்கும்போதுதான் அந்நாடு எல்லோராலும் பேசப்படுகிறது. அந்நாட்டில்தான் மக்கள் சமூகம் உயிர்த்துடிப்போடு வாழ்கின்றன. அவ்வகையில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்; என்னும் இந்நூல் இங்கு வாழ்ந்த முஸ்லிம்-களையும் அவர்களின் வாழ்க்கை முறையினை-யும், பண்பாட்டினையும், பழக்க வழக்கங்-களையும், நம்பிக்கைகளையும், மரபுகளையும், கலைகளையும், இலக்கியங்களையும் எடுத்துக் கூறுவதைக் காணலாம். கிழக்கே வங்காள விரிகுடாவையும், மேற்கே செழிப்பான வயல் நிலங்களையும், மலைகளையும், ஆறுகளையும் காடுகளையும் கொண்டு பொலிவோடும், நிறைவோடும், மிளிரும் இந்நிலம், இலங்கையின் தனிச்சிறப்புமிக்க பகுதியாகக் கொள்ளப் படுகிறது. பேசப்படுகிறது.

இந்நிலப்பரப்பின் சிறப்பினையும் இங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்களின் வாழ்வியலையும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களோடு இந்நூல் ஆய்வு செய்வதைப் பார்க்கலாம். இந்நிலப்பரப்பையும் இங்கு கிடைக்கப்பெற்ற பல நூல்களையும் எடுகோள்களையும் கள ஆய்வின் மூலம் ஆய்வு செய்து இந்நூலைப் பூர்த்தியாக்கியுள்ளேன்.

இந்நூல் ஒரு முழுமையான ஆய்வென்று கொள்ள முடியாது. கிழக்கிலங்கையையும், இம்மண்ணில் வாழ்ந்து அழிந்து விட்ட முஸ்லிம் மக்களையும் ஆய்வு செய்ய மற்றவர்களுக்கு இது ஒரு திறவுகோலென்றே கருதல் வேண்டும். இங்குள்ள கிராமங்களையும், இக்கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் வாழ்வியலையும், ஓரளவேனும் தொட்டுப்பார்க்க வேண்டுமென்ற, என் நீண்ட கால அவாவின் முயற்சியே இது. இந்நூலை ஒரு கொழுகொம்பாகக் கொண்டு அழிந்து சிதைந்து விட்ட என் மூதாதையர்களின் எச்சங்களையாவது, வருங்கால சமூகம் அறிந்து, ஆய்வு செய்ய முன்வரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஒரு சமூகம் தலைநிமிர்ந்து வாழ அச்சமூகத்தின் வரலாறு, ஆவணப்படுத்தப்படல் வேண்டும். கிழக்கு மண், நான் பிறந்து வளர்ந்து எனக்கு பேர் தந்த செழிப்பான மண். இம் மண்ணுக்கு நான் செய்யும் நன்றிதான் இந்நூல்.

**எஸ்.முத்துமீரான்.**
*03-05-2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்

கிழக்கே இல்லையென்று சொல்லாமல் அள்ளிக் கொடுக்கும் வங்களா விரிகுடாக் கடலையும், மேற்கே வாரிக் கொடுக்கும் வயல் நிலங்களையும், நிறைவாகக் கொண்ட நீர் வளத்தையும் கொண்டு கனிந்து நிறைந்துள்ள கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் கி.மு.6ம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்து வருகின்றனர். கிழக்கிலங்கை வரலாற்று ரீதியில் மகிமை பெற்ற மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தையும், அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தையும் உள்ளடக்கி உள்ளது. இம்மாவட்டங்களில் உள்ள ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, மருதமுனை, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று. இறக்காமம், வரிபத்தாஞ்சேனை, பொத்துவில் ஆகிய கிராமங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். இக் கிராமங்கள் எல்லாம் தமிழ்க் கிராமங்களை அண்டிய கிராமங்களாக இருப்பதால், இம்மக்களிடையே ஓரளவு தமிழ் மக்களின் கலாச்சாரம் பண்பாடுகள் இவர்களின் சுகவாழ்வியலிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துள்ளதைக் காணலாம். முக்கியமாக முஸ்லிம்களிடையே இடம்பெறும் திருமணங்களில் தமிழர்களின் கலாசார நிகழ்வுகளின் செல்வாக்கு நிறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புவியியல் பின்னணி

ஒரு சமுதாயத்தின் தோற்றமும் எழுச்சியும் அச்சமுதாயத்தின் சமூக வரலாற்று காரணிகளோடு, பௌதீக வளங்களைக் கொண்டும் நிர்ணயிக்கப்படுகின்றன. மனித சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களும் கலாசார விடயங்களும் கட்டியெழுப்பப்படுவதிலும் கூட அவை செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த வகையில் இவ்வாய்வுக்குட்பட்ட பிரதேசங்களின், வரலாற்றை அதன் புவியியல் அமைவுடன் தொடர்புபடுத்தி ஆராயவேண்டியுள்ளது.

இப்பிரதேசங்கள் வடகீழ்ப் பருவக் காற்று, உகைப்பு, சூறாவளி மூலம் மழையைப் பெறுகின்றன. குறிப்பாக, ஒக்டோபர் முதல் ஜனவரி வரையிலான காலப் பகுதியில் வடகீழ் பருவக் காற்று மூலம் கூடிய மழையைப் பெற்றுக்கொள்கின்றன.

இப்பிரதேசங்கள் தாழ் நாட்டு உலர் வலயத்தில் அமைந்திருப்பதால் வெப்பநிலையும் உயர்வாகக் காணப்படுகின்றது. இதனால் இப்பிரதேசங்கள் மிகக்குறைந்த ஆழத்திலேயே தரைக்கீழ் நீரைக் கொண்டுள்ளன. மேலும் சமதரையான நில அமைப்பையும் கொண்டுள்ளன. இங்கு தென்னை, பனை, பூவரசு, முருங்கை, வேம்பு, கிண்ணை, கமுகு, மா, பலா, முருங்கை, கிளிசறியா, வாழை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களே இப்பிரதேசங்களில் பௌதீக காலநிலைத் தன்மைக்கேற்ப பிரதானமாக வளர்கின்றன.

## பூர்வீகம்

இங்குள்ள முஸ்லிம்களின் வரலாறு தென்கிழக்கு முஸ்லிம்களின் வரலாற்றுடன் தொடர்புபட்டது. மட்டக்களப்புத் துறைமுகம் வர்த்தகத்துக்குப் பிரசித்தி பெற்ற காலத்திலிருந்தே முஸ்லிம்களின் குடியேற்றம் அங்கு சிறிது சிறிதாக இருந்து வந்துள்ளது. திமிலர்கள் எனப்படும் ஒரு குலத்தினரே இப்பகுதிகளில் ஆரம்பக் குடிகளாக வாழ்ந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 'முக்குவர்' எனப்படும் ஒரு குலத்தினர் வாழ்ந்து வந்தனர். 'கலிங்க சக்கரவர்த்தி' முத்துக் குளிப்பதற்காக இவர்களை ஆரிய நாட்டிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்து, யாழ்ப்பாணக்குடா நாட்டிற் குடியேற்றினான். பின்னர் இவர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் வலையிறவிலும், மண்முனைப் பற்றிலுள்ள பாணமையிலும் குடியேறினார்கள். இவர்களைத் தொடர்ந்து, ஏழு குடிகள் அல்லது குலமரபினர் கொண்ட மற்றுமொரு முக்குவக் கோஷ்டி இங்கு வந்து குடியேறியது.

மட்டக்களப்பில் வாழ்ந்த திமிலர்களின் சுதந்திரத்துக்கு முக்குவர்கள் ஒரு சவாலாக அமைந்தபடியால், அங்கு முக்குவர்கள் வாழ்வதைத் திமிலர்கள் விரும்பவில்லை. இதனால், இம்மாவட்டத்தில் வசித்து வந்த ஆரம்பக் குடிகளான திமிலர்கள், முக்குவர்களை எதிர்த்துப் போராடியதோடு மட்டுமல்லாமல், முக்குவப் பிரதேசத்தில் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் உடமைகளைச் சூறையாடியும், கன்னியர்களைச் சிறைப் பிடித்தும் வதை செய்தனர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஆபத்து காலங்களில் இவர்களுக்கு கைகொடுத்துதவ வந்தவர்கள்தான் முஸ்லிம் இனத்தவர்களான 'பட்டாணியர்' என்ற ஒரு வகுப்பினர். பொட்டணி வியாபாரிகளாக இப்பகுதிகளுக்குள் பிரவேசித்த இந்தப் பட்டாணியர் சிவந்த நிறமும், பருத்த தோற்றமுமுள்ள பலசாலிகளாகவும் திடகாத்திரமான தோற்றத்தை உடையவர்களாகவும் இருந்தனர்.

## பட்டாணியர்

இந்தப் பட்டாணியர் எங்கிருந்து வந்தவர்கள் என்பது ஆராயப்பட வேண்டியதாகும். நீண்டகாலமாக வங்காள விரிகுடாக் கடல் 'அரேபியர்களின் வாவி' என்ற பெயரைப் பெற்றுத் திகழ்ந்தது. அந்தளவுக்கு அரேபியரின் வியாபாரக் கப்பல்கள் இக்கடலிலே வந்துபோய் கொண்டிருந்தன. இவ்வாறு, ஒருநாள் வங்காள விரிகுடாக் கடலிற் சென்று கொண்டிருந்த ஒரு வியாபாரக் கப்பல் கடுமையான புயலிலும், கடற் கொந்தளிப்பிலும் சிக்கி மட்டக்களப்புக்குத் தெற்கே மூன்று மைல்களுக்கப்பாலுள்ள 'பூநொச்சிமுனை' என்னுமிடத்தில் கரைசேர்ந்தது. கரையிலிருந்து சிறிய தூரத்தில் எழுந்த புகை மூலம் அவர்கள் ஒரு குடியிருப்பைக் கண்டனர். இக்குடியிருப்பு வனப்பும் வளமும் கொண்டமைந்திருந்ததனால் கப்பலில் வந்தவர்கள் இங்கு வந்து குடியேறினர். இதுவே காத்தான்குடி என்னும் குடியிருப்பாகும். மட்டக்களப்பிலிருந்து மூன்றுமைல் தொலைவிலுள்ள இவ்விடம் இன்று, இலங்கையில் அதிக சனத்தொகைச் செறிவுள்ள முஸ்லிம் கிராமமாக விளங்குகின்றது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் குடிகளின் வழித்தோன்றல்களே மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்கள் எனக் கருதப்படுகிறது.

பட்டாணியர் ஆப்கானிஸ்தானிலிருந்து அல்லது வட இந்தியாவிலிருந்து வந்த வியாபாரக் குழுவினர் எனக் கருதவும் இடமுண்டு. ஏனெனில், பட்டாணியர் எனப்படுவோர் இந்தியாவில் உருதுமொழியே பேசுபவர்களாவர். இந்தியாவின் எல்லைப்புற மாகாணங்களிலும், ஆப்கானிஸ்தான் பகுதியிலும் வாழ்ந்த மக்களைப் பட்டாணியர்கள் என அழைப்பதுண்டு.

இந்தப் பட்டாணியர் வியாபாரத்திற்காக முக்குவப் பிரதேசத்திற்குள் வந்தபோது, திமிலர்களால் வதைக்கப்பட்ட முக்குவர்கள் இவர்களிடம் உதவி கோரி, இரந்து நின்றனர். இவ்வாறு ஒருநாள் வியாபாரத்திற்காக முக்குவப் பிரதேசத்துக்குள் சென்ற பட்டாணியர் இருக்கையில், வழமைபோல் அங்கு கொள்ளையிட வந்த திமிலர்களைப் பட்டாணியரும் முக்குவரும் இணைந்து புறமுதுகிட்டோட விரட்டியடித்தனர். இவ்வாறு விரட்டிச் சென்ற இவர்கள் திமிலர்களின் தலைவனைச் சிறைப்பிடித்துக் கொலை செய்தனர். இவன் கொலை செய்யப்பட்ட இடமே இன்று 'சத்துருக்கொன்றான்' என அழைக்கப்படுகிறது. 'பனிச்சங்கேணி' வரையும் இவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இந்த இரண்டாவது படைக்குழுவினர், முதலிற் சென்ற குழுவினரைத் தேடிச் சென்றிருக்கலாமெனக் கருத இடமுண்டு. இரண்டாவது படை சென்றுகொண்டிருக்கையில், முதலாவது படையிற் சென்ற முக்குவர்களும், பட்டாணியர்களும் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகையோடு திரும்பி வந்துகொண்டிருந்தனர். இவ்விரு குழுவினரும் சந்தித்துக் கொண்ட இடமே இன்று 'சந்திவெளி' என அழைக்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வருகையில் ஓர் இடத்தில் உட்கார்ந்து களைப்பாறினர். இவ்விடமே 'வந்து ஆறிய மூலை' என அழைக்கப்பட்டு, இன்று 'வந்தாறுமூலை' என வழங்கப்படுகின்றது.

பட்டாணியரான முஸ்லிம்கள் தங்களுக்குச் செய்த உதவிக்குப் பகரமாக முக்குவர்கள், அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகி அவர்களிடம் பொன், மண், பெண் ஆகியவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கூறியபோது, பட்டாணியரோ இரத்தத் தொடர்பால் ஏற்படும் பிணைப்பின் அருமையை உணர்ந்து, பெண்ணைத் தேர்ந்தெடுத்தனர். எனவே, அவர்களுக்கு ஏழு முக்குவக் குடிகளும் தங்களது குழுவிலிருந்து ஒவ்வொரு அழகான பெண்ணைத் தேரந்தெடுத்து பட்டாணியத் தலைவர்களில் ஏழு பேருக்கு மணமுடித்துக் கொடுத்தனர். இவ்வாறு மணம் முடித்துக் கொடுக்கப்பட்டவர்கள் இன்று கிழக்கிலங்கையில் பரவி உள்ளனர்.

இக்காலத்தில் முக்குவகுல குறுநில மன்னனாக மணிவண்ணன் என்னும் மன்னன் இப்பகுதியை ஆட்சி செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

## முக்குவரும் இஸ்லாமும்

இதனைத் தொடர்ந்து முக்குவ குலத்தினரிடையே இஸ்லாம் பரவியதுடன் பிறநாட்டு முஸ்லிம்களது தொடர்பும் அதிகரிக்கலாயிற்று. தமிழர்களான முக்குவ மக்களினதும், ஏனைய தமிழ்க்குலங்களைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்குவ மக்களினதும், பாதுகாப்புக் கருதி, தமிழ்க் குடியிருப்புக்களை அடுத்தடுத்து முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டார்கள்.

பட்டாணியர்களை முக்குவர்கள் எவ்வாறு மதித்தார்கள் என்பதற்கு இப்பகுதித் தமிழ் கோயில்களில் 'மடை' வைக்கும்போது 'பட்டாணி மடை' வைக்கப்படுவதும், வருடந்தோறும் குருக்கள்மடம், 'கொக்கட்டிச்சோலை' கோவில்களில் நடைபெறும் குடிமுறைத் தேர்த்திருவிழாவில் முஸ்லிம் ஒருவரும் தேர் பிடித்து இழுப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதும் மேலும் துலுக்குச்சாமிக்கு மடை வைப்பதும் இதற்கு ஆதாரங்களாக அமைகின்றன.

## கண்டி அரசனும் முஸ்லிம்களும்

போர்த்துக்கேயர் இலங்கையில் ஆட்சி செய்த காலப்பகுதியில் இப்பகுதிகள் கண்டி மன்னனின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாகவே இருந்தது. கோட்டை இராசதானியிலிருந்து கி.பி.1626ல் போர்த்துக்கேயர்களால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களைக் கண்டி மன்னன் செனரதன் அப்போது வரவேற்று, அவர்களை இப்பகுதியில் குறியேற்றினான். மட்டக்களப்பில் இவர்கள் தொழில் செய்வதற்காக விவசாய நிலங்களையும் கண்டி மன்னன் வழங்கினான். எனினும், இக்குடியேற்றம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே முஸ்லிம்கள் குடியேறியதன் பின்னரே நிகழ்ந்துள்ளது.

அக்காலப் பகுதியில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் சிறந்த படைவீரர்களாக இருந்து, சிங்கள மன்னர்களுக்கு உதவியிருக்கிறார்கள். எனவே, தனது ஆளுகையின் கீழிருந்த மட்டக்களப்பைத் தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதன் மூலமே தனது எதிரியின் மீது படையெடுத்து வெற்றி பெறமுடியும் எனக் கருதிய செனரதன் மன்னன் கண்டியில் தஞ்சமடைந்த முஸ்லிம்களை இதற்குப் பயன்படுத்த எண்ணினான். இதனாற்றான் அவன் அவர்களுள் பலசாலியானவர்களை மாத்திரம் இப்பகுதிக்கு குடியேற அனுப்பினான். வெளியூர்களிலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கும், பிறநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், கண்டி மன்னனுக்கு மட்டக்களப்புத் துறைமுகம் அவசியமாயிற்று. அப்போது சிங்கள மக்கள் இம்முயற்சியில் பங்குகொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். வெளிநாடுகளுக்குச் செல்லும் ஆற்றல், திறன், அந்நிய மொழியறிவு, கடலிற் பயணம் செய்வதற்கான பயிற்சி என்பன அவர்களுக்கு இருக்கவில்லை. எனவே, மட்டக்களப்புத்துறைமுகப் பகுதியில் முஸ்லிம்கள் செல்வாக்கோடு இருந்ததால், அவர்களைக் கடல் சார்ந்த யுத்தத்தில் பயன்படுத்துவதோடு, பல்வேறு இராசதந்திர கடமைகளையும், உளவுவேலைகளையும் அவர்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் எனக்கருதியே செனரத் மன்னன் மட்டகளப்பில் முஸ்லிம்களைக் குடியேற்றினான்.

## முஸ்லிம்கள் தென்கிழக்குப் பகுதிக்கு குடியேறல்

தென்கிழக்குப் பிராந்தியங்களில் சிங்கள மக்களுக்கிடையேயும், முஸ்லிம் மக்களுக்கிடையேயும் நல்லுறவு சிறப்பாக இருந்தது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில், இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர்களான சேபிய அராபியர்களும், ஃபினிஸிய அரேபியர்களும் (Ibneeshia) வர்த்தகர்களாக வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந்தொட்டு இவ்வுறவு நீடித்து வந்துள்ளது. இவர்கள் தங்கள் வியாபாரங்களை, மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து, தென்கிழக்குப் பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தினர். அரேபிய பட்டாணிய வர்த்தகர்கள் தென்கிழக்கில் அக்கரைப்பற்று, பட்டியடிப்பிட்டி என்னும் ஊரின் படுவானில் வாழ்ந்து வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

இலங்கையின் நெற்களஞ்சியமான கிழக்குக் கரையோரப் பகுதியில் விளைந்த நெல்லை இப்பகுதியில் அக்காலத்தில் இருந்த துறைமுகங்களிலிருந்து அரேபியர் ஏற்றிச் சென்றதாக தொலமியின் வரைபடமும், (கி.பி.140) குறிப்புகளும் கூறுகின்றன. மேலும் அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரம் ஒரு பாய்மரக் கப்பற்துறைமுகமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் வரலாற்று ஆய்வுகளில் இராஜராஜ சோழன் இராஜேந்திரனின் படையெடுப்பின்போது தென்கிழக்குப் பகுதிகளில் முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தோடு, இன்று இலங்கையில் பரந்ததொரு நிலப்பரப்பை தமதாக்கி பெரும்பான்மை சமூகம்போல் முஸ்லிம்கள் வாழும் ஒரேயொரு மாவட்டம் தென்கிழக்கில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டமேயாகும். அக்காலத்தில் இப்பகுதியில் இருந்த சம்மாந்துறையும் பிரசித்தி பெற்ற வர்த்தகத்துறைமுகமாகவும் இருந்தது.

கி.பி. 17ம் நூற்றாண்டில் மன்னன் செனரத் சுமார் நாலாயிரம் முஸ்லிம் மக்களை அவனுடைய இராச்சியத்தின் கிழக்குப் பகுதியில் குடியேற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முஸ்லிம்கள் வெல்லஸ்ஸ, கொட்டபோவ, பங்கறகம போன்ற பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்.

இங்கு குடியேறி பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த முஸ்லிம்களிடையே குடி மரபு முறையும், போடியார் வழிமுறையும் சிறப்பாகப் பேணப்பட்டு வந்தன. குடி மரபில் ஒரு குடியின் தலைவர் மரைக்காயர் என அழைக்கப்பட்டார். இக்குடிமுறை முக்குவர் சமூகத்திலிருந்து பெண் எடுத்து, திருமணம் முடித்த அரேபியர்களின் வழித்தோன்றல்களின் வழியாகவே வருகின்றது. இக்குடிமுறை மரபு தாய்வழியிலிருந்தே தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதிகளில் இன்று வாழும் நாட்டுப்புற முஸ்லிம்களின் மூதாதையர்கள் அழிந்து மண்ணோடு மண்ணாகிப் போய் விட்டார்கள். ஆனால் இவர்களின் வாழ்வியல் எச்சங்கள் எல்லாம் இன்று எங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கும் போதெல்லாம், அவர்கள் இன்றும் எங்கள் மத்தியில் உயிர்த்துடிப்போடு வாழ்வதாக நாங்கள் உணர்கின்றோம். அவர்களின் வாழ்வும், வாழ்வியலும் எங்களை சீவனுள்ள மனிதர்களாக வழிநடாத்திக் கொண்டிருக்கின்றன. நாகரீகம் செவ்வாய்க் கிரகத்தை தாண்டிப் போனாலும், இம்மக்களின் பாரம்பரியம் பண்பாடு, ஒழுக்கம் எதையும் அழித்து விடவும் முடியாது. இதுதான் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை.

**உறைவிடம்:**

அக்காலத்தில் இக்கிராமங்களில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் அதிகமாகத் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளைக் களிமண்ணைக் கொண்டே கட்டி வாழ்ந்தனர். இவ்வீடுகள் பெரும்பாலும் குடிசைகளாகவே இருந்தன. இக் குடிசைகளுக்கு காட்டிலிருந்து சமுளை, விண்ணாங்கு, உலுமுந்தை, காசான் போன்ற மரக் கம்புகளை வெட்டி வந்து, அவைகளின் தோல்களைச் சீவியெடுத்து பின், காட்டில் வளர்ந்திருந்த நவ்வாக்கொடி, பால்கொடிகளை வெட்டி வந்து கம்புகளை இறுக்கமாகச் சேர்த்து வரிச்சிகளையும் கட்டி அவைகளில் களிமண்களைத் துவைத்து வைத்து சுவர்கள் அமைத்தார்கள். இவர்களின் வீடுகளுக்கு கூரைகளாக, மேற்சொன்ன கம்புகளினால் வரிச்சிக்கட்டி அவைகளின் மேல் இலுக்கு புற்களைக் கொண்டு மழை வெய்யில் படாமல் வேய்ந்தார்கள்.

இவ்வீடுகள் உள்வீடு, ஆலவீடு, மஞ்சி அல்லது சாப்பு போன்ற அறைகளை உடையதாக இருக்கும். இத்தோடு திண்ணையும் சேர்த்து அமைத்திருப்பார்கள். இதில் இவர்களின் வீட்டிலுள்ள பெண்கள் உள்வீட்டிற்குள் படுப்பார்கள். ஆண்கள் இங்குள்ள ஆலவீடு, மஞ்சி அல்லது சாப்பு ஆகிய அறைகளில் உறங்குவார்கள். இவ்வீடுகளில் அமைந்துள்ள திண்ணையில் வீட்டிலுள்ள எல்லோரும் சமைத்த உணவுகளை வைத்து மகிழ்ச்சியாக உண்பார்கள். மேலும், இவர்களின் வீட்டிற்கு வரும் உறவினர்கள் நண்பர்கள் எல்லோரையும் வரவேற்று இத்திண்ணையில் அமரச் செய்து உபசரிப்பார்கள். இன்றும், சில கிராமங்களில் திண்ணை வைத்துக் கட்டிய வீடுகள் இப்பகுதிகளில் இருப்பதைக் காணலாம். நாகரீகம் எவ்வளவுதான் வளர்ந்தாலும், இந்நாட்டுப்புற மக்கள் தங்கள் மூதாதையர்களின் பழக்க வழக்கங்களிலும் பண்பாடுகளிலும் இன்றும் ஒன்றித்தவர்களாக இருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் காணலாம். இவர்களின் வாழ்க்கை கூட்டுக் குடும்பமாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீடுகளின் அமைப்பு:

வீடுகளின் அடித்தளம் நன்கு உயர்த்தப்பட்டு, களி மண்ணினால் நன்கு மெழுகப்பட்டிருந்தன. சுவர்கள் காவி கலந்த களிமண்ணால் ஒப்புரவாகப் பூசப்பட்டிருந்தன. இவ்வாறு பூசுவதற்குச் சிரட்டை அல்லது காட்டுத்தேங்காய் பாவிப்பர். கதவுகளும் பூட்டுக்களும் உறுதியானவையாக அமைந்திருந்தன. இப்பூட்டுக்களுக்குச் சுமார் 5 அங்குல நீளமான இரும்புத் திறப்புகள் பாவிக்கப்பட்டன. கூரைகள் தென்னங் கிடுகுகளால் வேயப்பட்டிருந்தன. வீட்டையும், வீட்டுக் காணியையும் சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. பணக்காரவீட்டு மக்களின் வேலிகள் சாங்குலங்கம்புகள் நடப்பட்டு, கிடுகுகள் தொடுக்கப்பட்டிருக்கும். இக்கிடுகுகளை அடைத்து மேலும் ஒரு படைக்கிடுகுகள் கட்டப்பட்டிருந்தன. இதற்கு வரிச்சை பிடித்துக் கட்டினர். இதனைச் சாத்திக் கட்டுதல் என்பர்.

இதைத்தவிர, வீட்டையும், வீட்டின்முன், பின்புறங்களை அடக்கிக்கட்டிய வேலிக்கு ‘புறவளவு’ வேலி எனப்படும். வீட்டு முற்றத்திற்கு வெளியேயுள்ள காணியையும் அடைத்து வேலிகட்டி ‘இரட்டை கிராதி’ என்ற வாயிற்கதவு அமைத்திருப்பர். வண்டில் மாடுகளின் குடில்கள் வைக்கோற்போர் போன்றவை இப்புறவளவிலே அமைந்திருக்கும். இதுதவிர உள்வளவுக்கும் நுழைவாயில் ஒன்றை அமைத்திருந்தனர். இதனைத் தலைவாயில் என அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடும், வீடு சார்ந்தவைகளும்

1. வீட்டின் பின்புறம் (கோடி அல்லது புறக்கடை)
2. கிணறு (கொட்டு கிணறு அல்லது கற்கிணறு)
3. முற்றம்
4. சாப்பு
5. உள்வீடு
6. ஆலவீடு
7. திண்ணை
8. குசினி
9. புறவளவு
10. நுழைவாயில் (இரட்டை கிராதி இடப்பட்டது)
11. தலைவாயில்
12. குடத்தடி (நீர் நிரம்பிய மட்பானை வைக்கும் இடம்)
13. அட்டாளை, பட்டறை (நெல் சேமிக்கும் இடம்)
14. ஓலை வேலி

## வீட்டுப் பாவனைப் பொருட்கள்

நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்களின் வீடுகளில் உணவுகள் சமைப்பதற்கு மண்ணால் செய்த பாத்திரங்களையே உபயோகித்தார்கள். இவர்கள் சோறு சமைப்பதற்கு மண் பானைகளையும் கறி சமைப்பதற்கு சட்டிகளையும் பாவித்தார்கள். இவர்கள் தங்கள் உணவுக்குத் தேவையான நெல், குரக்கன், சாமை போன்ற தானியங்களை இடித்து மாவாக்கி எடுப்பதற்கு மரத்தால் செய்யப்பட்ட உரல், உலக்கைகளையும், கொச்சிக்காய், மல்லி, வெள்ளைப்பூடு, இஞ்சி போன்றவைகளைச் சேர்த்து மைபோல் அரைத்து எடுத்து கறிகள் சமைப்பதற்கு கருங்கல்லினால் உருவாக்கப்பட்ட அம்மிக் கல்லையும் வீடுகளில் வைத்திருந்தார்கள். இத்தோடு தேங்காய் திருவுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிலை, மீன் இறைச்சிகளை அரிந்து எடுப்பதற்கு அரிவமனை, நெல், அரிசி போன்றவைகளைப் புடைத்து துப்புரவு செய்வதற்கு சுளகு, தட்டுகளையும், வயல், சேனைகளிலிருந்து கொண்டு வரும் உணவுப் பொருட்களையும் பிற சாமான்களையும் சேர்த்து கட்டி பாதுகாத்து வீடுகளில் வைப்பதற்கு பன்புற்களினால் செய்த உமல்களையும் பனையோலையினால் செய்த பெரிய சிறிய பெட்டிகளையும் வைத்திருந்தார்கள்.

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் இவர்கள் வீடு கட்டி வாழ்ந்த இடங்களைத் தனித்தனியாகப் பிரித்து உரிமையிட்டு இவ்வளவுகளை காட்டுக் கம்புகளை வெட்டி வந்து சுற்றிவர வேலிகளை அமைத்தார்கள். இவ்வேலிகளைத் தட்டுவேலி, முள்வேலி, கம்பு வேலி என்று அழைத்தார்கள். இவ்வேலிகளைக் கட்டி, இவர்கள் வீடுகளிலிருந்து போவதற்கும் வருவதற்கும் ஏற்றாற்போல் வழிகளையும் வைத்திருந்தார்கள். இவ்வழிகளுக்குத் திறந்து மூடுவதற்கு கதவு போல் தட்டிகளையும், ஏறு கடப்புகளையும், படலைக் கடப்புகளையும், கிறுகு கடப்புகளையும், உடலைக் கடப்புகளையும் வைத்திருந்தார்கள்.

இவர்கள் தங்கள் வீடுகளில் படுத்துறங்கு-வதற்கும், உட்கார்ந்து பேசுவதற்கும், நெல், குரக்கன், சோளன், சாமை போன்ற தானியங்களை வெய்யிலில் காயவைப்பதற்கும் பன்புல்லால் இழைத்த பாய்களையும் உபயோகித்து வந்தார்கள். அவர்களின் வேலி பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் சிலதை இங்கு நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலிகள்

1. சுத்திவர வேலி
சூழலவர முள்வேலி
எங்கும் ஒரே வேலி - நான்
எதால புள்ள வாறதுகா?

2. காவல் அரணோ
கள்ளனுக்கு முள்ளரணோ
வேலி அரணோ - மச்சான்
வேணுமென்ட கள்ளனுக்கு?

3. ஆமணக்க வேலியோரம்
அண்டு வந்து போன கிளி
பூமணத்தக் கண்டா - இப்ப
பொறத்த வரக் காணஇல்ல.

அண்டு - அன்றைக்கு
பொறத்த - வெளியே

## குடிநீர் / பூவல் - கிணறு

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற மக்கள் தங்களின் தண்ணீர்த் தேவைகளை ஆறு, குளங்களிலிருந்தும், கிணறுகளிலிருந்தும் பெற்றுப் பூர்த்தி செய்தனர். ஆரம்ப காலத்தில் கிணறுகள் இருக்கவில்லை. ஆறு, குளங்கள் இவர்களின் குடியிருப்புகளுக்கு தூரத்தில் இருந்ததினால், இங்கிருந்து இவர்கள் குடங்களிலும் முட்டிகளிலும் நீரை அள்ளி வருவது, இவர்களுக்கு பெரும் கஷ்டமாகவே இருந்தது. இதனால் இவர்கள் வாழ்ந்து வந்த குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களில் பூவல்களைத் தோண்டி அவைகளிலிருந்து நீரைப் பெற்றுக் கொண்டனர். இப்பூவல்கள் அதிகமாக இவர்கள் வாழ்ந்த வளவுகளுக்குள்ளயே தோண்டப் பட்டன. பொதுவாக இப்பூவல்கள், சிறிதாகவும், ஆழமாகவும் தோண்டப்பட்டன.

காலம் செல்லச் செல்ல இப்பூவல்கள் மாற்றமடைந்து பின்னர் கிணறுகளாக மாறின. இவர்கள் பூவல்கள் அமைத்திருந்த இடங்களில் அவைகளுக்குள் காட்டில் பட்டுப்போய் விழுந்து கிடந்த போர் மரங்களை எடுத்து வந்து, அவைகளை ஐந்து அல்லது ஆறடித் துண்டுகளாக வெட்டிச் செப்பனிட்டு பூவல்களில் அசிங்கங்கள் சேரா வண்ணம் பாதுகாப்பாக வைத்தனர். இப்படிப் போர் மரங்களினால், பூவல்களுக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட கிணறுகளை இவர்கள் கொட்டுக் கிணறு என்று அழைத்தனர். இந்தக் கொட்டுக் கிணறு பற்றிய சுவையான கதையொன்றும், இப்பகுதியில் உயிர்த்துடிப்போடு, இம்மக்களால் பேசப்பட்டு வருவதைக் காணலாம்.

அந்தக் காலத்தில் நாட்டுப்புற முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு அடிக்கடி இலங்கையின் பல இடங்களிலிருந்து உணவுப் பொருட்களையும் உடுபிடவை மளிகைச் சாமான்களையெல்லாம் வியாபாரிகள் எடுத்துக் கொண்டு வியாபாரத்திற்காக வந்து போவது வழக்கம். இப்படி இலங்கையின் வடபுலத்தைச் சேர்ந்த புகையிலை வியாபாரி ஒருவர் புகையிலை சுப்பங்களோடு இப்பகுதிக்கு வியாபாரத்திற்கு வந்திருந்தார். இவர் இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் இக்கொட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி எடுப்பதைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியமாக 'அடேயப்பா!, உவங்கள் பெரிய ஆக்களப்பா... மரத்தை துளைத்தல்லோ சலத்தை எடுக்கினம்' என்று அதிசயமாகக் கூறியதாக இன்றும் இங்கு வாழும் மக்கள் கூறுவார்கள்.

இப்பொழுது பூவல், கிணறு பற்றிய இம்மக்களின் நாட்டார், பாடல்கள் சிலதைப் பார்ப்போம்.

1. பூவலைக் கிண்டி
புதுக்குடத்தை கிட்ட வெச்சி
ஆரமுழுந்த கிளி - இப்ப
அள்ளுதுகா நல்ல தண்ணி

2. ஓடயில போற தண்ணி
தூசி உளும் தும்பி விளும்
ஊட்டவா ராசா - ஒனக்கு
குளுந்த தண்ணி நான் தாறன்.

3. கல்கெணறு கட்டி
கலகலன பட்ட உட்டு - நீ
தண்ணி அள்ளி வாத்த
தடுமலாகா இப்ப தும்முறது

பட்ட - வாளி

**உணவு வகைகள்**

கிழக்குப் பிராந்தியத்தில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் அதிகமாகத் தங்கள் உணவுக்காக நெல்லையும், சேனைப் பயிர்களையும் வயல்களிலும், சேனைகளிலும் செய்து வந்தார்கள். காடுகளை வெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்புரவு செய்து இந்நிலங்களில் நெல்லை விதைத்து வந்தார்கள். மூன்று நாலு மாதங்கள் சென்ற பின்னர், இதை அறுவடை செய்து, உணவிற்காக எடுப்பார்கள். இவர்கள் நொறுங்கன், கறுப்பன், சீனட்டி, பெருநெல், குருவி நெல், பச்சைப்பெருமாள் ஆகிய இன நெல்லைத் தங்கள் வயல்களில் விதைத்து வந்தார்கள். தற்பொழுது இந்நெல் யாவும் வழக்கொழிந்து போய்விட்டன. வயல்களில் விதைத்து விளைந்து வரும் நெல்லை, பெண்கள் உரல்களில் போட்டு குற்றி, உமி வேறாக்கிப் பின்னர் புடைத்து எடுத்து சோறு சமைப்பார்கள். நெல்லைக் குற்றி, புடைத்து எடுத்த அரிசை, உரல்களில் போட்டு இடித்து மாவாக்கி, அதிலிருந்து அப்பம், இடியப்பம், பிட்டு போன்ற உணவுகளையும் செய்வார்கள்.

## சேனைப் பயிர்கள்

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் காடுகளை வெட்டித் துப்புரவு செய்து, அந்நிலங்களில் தங்கள் உணவுத் தேவைகளுக்காக சேனைப் பயிர்களையும் செய்து வந்தார்கள். இவர்கள் சேனைகளில் சோளன், குரக்கன், மரவள்ளி போன்ற உப உணவுப் பயிர்களைத் தாராளமாக உண்டு பண்ணினார்கள். இச்சேனைப் பயிர்களைச் செய்து அவைகள் பயன்தரும் காலம் வரை, இவர்கள் குடும்பத்தோடு சேனைகளில் தங்கி இருந்து குரங்கு, பன்றி, காட்டு மாடுகளின் அழிவிலிருந்து பயிர்களைக் காத்து வருவார்கள். இச்சேனைகளில் விளைந்து வரும் குரக்கனை வறுத்து திருகுக் கல்லில் அரைத்து மா எடுத்து அம்மாவினால் களி, பிட்டு, கூழ் செய்வார்கள். இதைப் போன்று சோளத்தையும், உரித்தெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரல்களில் போட்டு குற்றியெடுத்து அதிலிருந்து களிக்கெல்லியும் கூழ் காய்ச்சியும் சாப்பிடுவார்கள்.

இம்மக்கள் காடு, குளங்களில் விளையும் மரக்கறிகளையே கூடுதலாக சமைத்து உண்பார்கள். நீர்க் கரையோரங்களில் தனாக வளரும் சுக்கொட்டி, தும்புக் கிழங்குகளைத் தோண்டியெடுத்து அவைகளைப் பானையில் போட்டு அவித்து உண்பதோடு, இவைகளில் கறியும் சமைப்பார்கள். இத்தோடு வள்ளல், வல்லாரை, பொன்னாங்கண்ணி போன்ற கீரைகளையும் பறித்து வந்து கறிகள் சமைத்து உண்பார்கள்.

இதைப்போன்று காடுகளிலிந்து முல்லை, முசுட்டை, முசுமுருங்கை, காரை, கானாந்தி, முடிதும்பை, ஆற்றுக்கீரை, தகரை, திராய், பசளி, குமிட்டி, மணலி, எருமைநக்கி, பிரண்டை போன்ற மரக்கறிகளையும், இவர்கள் ஆய்ந்து வந்து, இவைகளிலிருந்தும் கறிசமைத்து உண்பார்கள். இயற்கையிலேயே பலநோய்களுக்கு மருந்தாக உபயோகிக்கப்படும் இவைகள், இவர்கள் வாழ்விற்கு உறுதுணையாகவும், நோய் எதிர்ப்பு சக்தியாவும் இருந்தன.

## பழங்கள்

இங்கு வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் வாழை, பலா, மா போன்ற மரங்களைத் தங்கள் பழத்தேவைகளுக்காக சேனைகளிலும், வளவுகளிலும் உற்பத்தியாக்கினார்கள், இத்தோடு காடுகளில் விளையும் விளாமரத்திலிருந்து விளாம்பழம், கூளாம்பழம், புளியம்பழம் நாவற்பழம், பனிச்சம்பழம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைப்பழம், வீரைப்பழம், கிளாப்பழம். தண்ணிச்சோத்துப் பழம், கிண்ணம்பழம், ஆகிய பழங்களையும் விரும்பி உண்பார்கள். இவர்கள் விளாம்பழத்தையும், கிண்ணம் பழத்தையும் சோற்றில் போட்டுக் கரைத்துக் குடித்தார்கள். இப்பழங்கள், ருசியும் மணமுள்ளதாகவும் இருப்பதால் கரைத்துக் குடித்தார்கள். கிண்ணை மரங்கள் கடற்கரையை அண்டிய களப்போர சதுப்பு நிலங்களிலும், கண்டல் நிலங்களிலும் அதிகமாக வளர்ந்தன.

## இறைச்சி / மீன்கள்

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் அதிகமாக மாட்டு இறைச்சி, ஆட்டிறைச்சியை விரும்பி உண்டு வந்தார்கள். சிலர் காடுகளுக்கு சென்று மான், மரை, முயல், காட்டு மாடுகளை வேட்டையாடிக் கொண்டு வந்தும் சாப்பிட்டார்கள். மான், மரை, இறைச்சிகளைக் காயவைத்து காடுகளிலிருந்து எடுக்கும் தேனில் துவட்டியும் சாப்பிடுவார்கள். இத்தோடு காடுகளிலும், வயல்வெளிகளிலும் வாழும் கொக்கு, வக்கா, கானான், நாரை, தாரா, ஆட்காட்டி, கீச்சான், புள்ளு, காடை, ஆடசமான் போன்ற பறவைகளை கண்ணி வைத்து பிடித்தும், சுட்டும் அவைகளின் இறைச்சிகளைச் சாப்பிட்டார்கள்.

இப்பொழுது இவர்களின் உணவுகளோடு சம்பந்தப்பட்ட நாட்டுப்புற பாடல்கள் சிலதைப் பார்ப்போம்.

1. சம்புக்களப்பில்
தளச்ச வள்ளல் பிச்சிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறியாக்கித் திண்டு நாங்க - எங்கிட
களை தீர்த்தோம் வன்னிமையே

2. சீனட்டி நெல்லும்
செல்ல இறால் ஆணமும்
பொத்துவில் ஊரும் - இப்ப
பொருந்தினதோ வன்னிமைக்கு.

3. அப்பம் சுடும் காத்தாங்குடி
அவல் இடிக்கும் காரதீவு
முட்டி தூக்கும் சம்மாந்துறை - நாங்க
முகப்பழக்கம் நிந்தவூரு

4. பட்டியடிப் புட்டி
பால் தயிரு கனத்த இடம்
நெய்யுருக்கி ஊத்துறாங்க - என்ர
நேசக்கிளி போயிருக்கு.

5. மான் மரயிம் சுட்டு
மரைக்கார்ர புரயடியில்
பங்குபோட்டு வெச்சிரிக்காம் - நமக்கு
பகுத்து தரப் போறத்திக்கு

6. வாழைப்பழமும்
வடிதயிரும் சக்கரையிம்
சீனியும் போட்டு - நான்
திண்டரசம், ஒன்னக்கண்டா

7. வாழைக்காய் ஆக்கிரிக்கி
வழுதிலங்காய் சுண்டிரிக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர கடஞ்சிரிக்கி - மச்சான்
கெதியா வந்து சாப்பிடுங்க

8. மணல மீனாக்கி
மணக்கச் சின பொரிச்சி
புளியாணம் காச்சிரிக்கேன் - நீங்க
பொழுதுபட வந்திரிங்கோ

9. கீச்சான் பொரிச்சிரிக்கி
கிளி இறைச்சி ஆக்கிரிக்கி
எள்ளும் பொரிச்சிரிக்கி - எங்கிட
எளய மச்சான் திண்ணையில..

10. மாட்டிறைச்சி காயவெச்சி
மதுரத்தேன் சுரையிலூற்றி
விளாம்பழச் சாக்கோட - மச்சான்
வாறாருகா வண்டிலிலே

## தொழில்கள்

கிழக்கிலங்கையில் வாழும் நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் ஜீவாதாரத் தொழில்களாக விவசாயத்தையும் மீன்பிடித்தலையும், பாய், பெட்டி, உமல் இழைத்தலையுமே பிரதான தொழில்களாகச் செய்து வந்தனர். இயற்கையோடு ஒன்றித்து அதன் இனிய தாலாட்டுக்கு இயைந்த அமைதியான வாழ்க்கையை அனுபவித்து வந்த இம்மக்கள் தாங்கள் செய்து வந்த தொழில்களை மிகவும் கண்ணியமாக மதித்து வாழ்ந்தனர். நீரும், நிலமும், வயலும், வனமும், வானும், கடலும் இவற்றில் வாழும் சீவராசிகளும், பட்சிகளும் இவர்களுடைய இயற்கை வாழ்விற்கு சதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைபுரிந்து கொண்டிருந்தன. இத்தொழில்களை இவர்கள் தங்களுடைய வாழ்வியலுக்காகவே செய்தனர். அன்று இவர்கள் வர்த்தக நோக்கில், இத் தொழில்களைச் செய்யவில்லை. எளிமையும், இரசனையும், எழிலார்ந்த பண்பாட்டுக் கூறுகளும் உள்ள தொழில்களாகவே இவைகள் இருந்தன. இத்தொழில்கள் தங்களை வாழவைக்கும் இறைவனின் நன்கொடைகளாகவே கருதினர். இதனால் இத்தொழில்களை ஆரம்பிக்குமுன் இறையில்லங்க-ளுக்குள் காலடி எடுத்து வைக்கும் பயபக்தியுடனேயே வயல் வெளிகளுக்கும், கடலுக்கும் செல்வார்கள். இவர்களுக்கு தங்கள் தொழில்கள் மேல் அளவு கடந்த மரியாதையும், பக்தியும் இருந்தமையே இதற்கு காரணமாகும்.

## 1. விவசாயம்

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்களின் விவசாயச் செய்முறைகள் எல்லா இடங்களிலும் ஒத்த தன்மை உடையனதாகவே இருந்தன. உழவுதல், வரம்பு கட்டுதல், விதைத்தல், வேலி அடைத்தல், வேளாண்மை வெட்டுதல், சூடடித்தல் ஆகிய முறைகள்தான் இங்கிருந்த எல்லா விவசாயிகளிடமும் இருந்தன.

விவசாயம் செய்யும் காணி அல்லது வயல் 'வட்டை' என்னும் பெயராலேயே பொதுவாக அழைக்கப்பட்டது. இப்பகுதியில் சேனைக்காட்டு வட்டை, சோலை வட்டை, அலியாண்ட வட்டை, கரைவாகு வட்டை, வளைந்த வட்டை, காத்தாண்ட வட்டை, செட்டியா வட்டை, அலிக்கம்ப வட்டை எனப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டைகள் இருந்தன. சுமார் 30-40 ஏக்கர்களைக் கொண்ட ஒருமித்த காணித்துண்டு 'வெளி' எனப்படும். சில நூற்றுக் கணக்கான ஏக்கர்களைக் கொண்ட பிரதேசம் 'கண்டம்' எனப்படும்.

இன்னும் இப்பகுதிகளில் சில வட்டைகள் தாவரங்கள், பறவைகள், மிருகங்கள், மனிதர்களின் பெயர்களைக் கொண்டும் அழைக்கப்பட்டன. உதாரணமாக பூலாக்காடு, அல்லிமூலை, குரக்கன்சேனை, வம்மிச் சோலை, இலுக்குச் சேனை, அரசையடி, காஞ்சிரங்குடா, பன்றித்தீவு, மாட்டுப்பளை, வக்காத்தீவு, கயற்றயடி, சங்கத்தாம் பள்ளம், மானாம்வட்டை ஆகிய வட்டைகளைக் கொள்ளலாம்.

மேலும் தென்கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் மக்களால் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த விவசாயப் பூமிகளை மேட்டுவெளி, பள்ளவெளி, புரன்வெளி, சாதாளவெளி, சம்புக்களப்பு, உகாமுனை, துவரங்குடாமுனை, கடுக்காமுனை, குடாக்கரை, வள்ளக்குண்டு, அவரிப்பிட்டி, குளக்கட்டுப் பள்ளம், சாட்டுவான்மூலை, ஏத்தாலை, முனை ஏத்தாலை, மண்தண்டை சங்கடிவத்து போன்ற அழகிய பெயர்களாலும் அழைக்கப்பட்டன.

இப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் தங்களின் விவசாயப் பூமிகளை இரு போகங்களாகச் செய்து வந்தார்கள். மழையை நம்பிச் செய்யும் பூமிகளை மானாவாரிப்போகமென்றும், ஆறு குளங்களிருந்து நீரைப் பெற்றுச் செய்யும் பூமிகளை மாரிப்போகமென்றும் அழைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தங்கள் வயல்களுக்கு, நீர் தேங்கி நிற்பதற்கு ஏற்றவாறு வரம்புகள் கட்டுவார்கள். வரம்புகளை எளிதாகக் கட்டுவதற்கு வயல்களை வரவைகளாகப் பிரித்துக் கொள்வார்கள். இவ்வரவைகளில் விசாலமான வரவைகளை 'போட்டா' வரவையென்றும், மிகச் சிறிய வரவைகளை 'கனட்டி' என்றும் நீளமான வரவைகளை 'நெடுங்கண்ணி' வரவையென்றும் அழைப்பார்கள். இவர்கள் செய்த வேளாண்மைகளை அறுவடை செய்து அவ்வேளாண்மைகளை சூடுகளாகக் குவித்துவைக்கும் வரவையை 'சூட்டடி வரவை' அல்லது 'களவெட்டி வரவை' என்று சொல்வார்கள். வேளாண்மை செய்வதற்கு முன் இந்நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வயல்களிலிருக்கும் புற்கள் எல்லாம் தண்ணீரால் அவிஞ்ச பின்னர், வயல்களை விதைப்புக்கு தயார் படுத்துவார்கள். இவர்கள் தங்கள் வயல்களை எருமை மாடுகளால் மிதித்துப் பண்படுத்துவார்கள். எருமை மாடுகளைப் பிணையல்களாகப் பிணைத்தெடுத்து வயல்களில் விட்டு மிதிப்பார்கள். இதனால் வயலிலுள்ள புற்களெல்லாம் அழிந்து வயல் விதைப்புக்கு ஏற்றவாறு ஆகிவிடும். நான்கு சோடி எருமை மாட்டு பிணையல்களை ஒரு 'தொடுவை' என்று கூறுவார்கள்.

இவர்கள் தங்கள் வயல்களுக்கு நொறுங்கன், சீனட்டி, வெள்ளைப் பெருநெல், இளங்கலையன். பச்சைப்பெருநெல், பறவைகலையன், முருங்கைக்-காயன், குருவிநெல் ஆகிய இன நெல்களையே செய்தார்கள். இவைகளில் சில இனம் மூன்று மாதமும், நான்கு மாதமும் கொண்டதாக இருக்கும். இந்நெற்களில் நொறுங்கன், சீனட்டி ஆகிய நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கள் சோற்றுக்கு மிகச் சுவையான நெல்லினமென்று எல்லாரும் கூறுவார்கள். இவர்களினால் வயல்களில் பக்குவமாகச் செய்யப்பட்ட வேளாண்மைகள் வெட்டும் காலம் இப்பகுதிகளிலுள்ள வயல்களெல்லாம் கலியாண வீடுகள் போன்றுதான் இருக்கும். வட்டைகளில் விளைந்துள்ள வேளாண்மைகளை வெட்டுவதற்கு முன்னர் இவர்கள் கூடி கந்தூரி, நிய்யத்து முதலான சமயச் சடங்குகளை சிறப்பாக செய்து விட்டே வேலைகளைத் தொடங்குவார்கள். வேளாண்மை வெட்டும் காலத்தை இவர்கள் வெட்டுக்குத்துக் காலம் என்று சொல்வார்கள்.

வேளாண்மைகள் வெட்டி களவெட்டி வரவைகளில் சூடு வைப்பார்கள். இச்சூடுகளை எருமை மாடுகளைக் கொண்டு, வயல்களில் வைக்கப்பட்ட சூடுகளை மீண்டும் பிரித்தெடுத்து, செருக்கி துப்பரவு செய்யப்பட்ட களவெட்டிகளில் போட்டு மிதிப்பார்கள். மிதிக்கப்பட்ட கதிர்களை வேலைக்காரன் கம்புகளினால், வேலை செய்யும் ஆட்கள் நெல்லையும் வைக்கோலையும் வெவ்வேறாகப் பிரித்தெடுப்பார்கள். சூடுபோடும் காலங்களில் வயல்களில் பெண்கள், 'புளிச்சப் பணியாரம் சுடுவார்கள். இப்பணியாரங்களை இரவையில் சூடுபோடும் வேலையாட்கள் வாங்கி, அவைகளை எருமைப்பாலில் ஊறவைத்து சாப்பிடுவார்கள்.

வேலையாட்கள் வேளாண்மைச் செய்யும் காலங்களில் இங்குள்ள வட்டைகளில் பல நாட்கள் தங்கிருந்தே வேலைகளைச் செய்வார்கள். இதற்காக வயல்களில் புரை, அட்டாளைப் பறன், ஒத்தாப்பு, காவற்பறன் என்று வித்தியாசம், வித்தியாசமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறன்களைக் கட்டி இருப்பார்கள். இதில் 'புரை' என்பது ஒரு சிறு குடில் போல் அறுக்கையாகக் கட்டப்பட்டு, இவர்கள் தங்கிப் படுப்பதற்கு ஏற்றவாறு தட்டிகள் கட்டி அத்தட்டிகளை களிமண்ணால் பூசி மெழுகி வைத்திருப்பார்கள். பொதுவாக வயல்வேலைகள் தொடங்கி விட்டால், இவர்கள் வயல் வேலைகள் முடியும் வரை இப் புரைகளிலே தங்கிருப்பார்கள். இவர்கள் தங்கி இருக்கும் காலங்களில் இப்புரைகளை வளைத்து சூரைச்செடி, நாடஞ்செடி, கொச்சி, வழுதிலை, பீக்கை, பயிற்றை, வெண்டி, சீரக்கொச்சிக்காய் போன்ற மரக்கறிகளை நாட்டி இருப்பார்கள்.

இன்று, இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் எம்மிடையே இல்லாவிட்டாலும், இவர்களின் விவசாயச் செய்கைகளின் எச்சங்கள், எங்கள் பகுதிகளில் இன்றும் அழியாது வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எண்ணற்ற கஷ்டங்களையும், நஷ்டங்களையும், துன்பங்களையும், துயரங்களையும், விசாரங்களையும், வேதனைகளையும் தங்களின் வாழ்வியலூடே அனுபவித்து, அவைகளை மனோ வலிமையுடன் எதிர்த்துப் போராடி வெற்றி கண்டு, இயற்கையின் எழிலோடு ஒன்றித்து வாழ்ந்த இந்நாட்டுப்புற முஸ்லிம்களின் வாழ்வியல் புனிதமானது. சதா விடாமுயற்சியே துணையாகக் கொண்டு, திறந்த மேனியராய், 'சிறுவால்' என்னும் உடுப்போடு. வயல்களிலும், சேனைகளிலும், வாழ்ந்து திரிந்த இம்மக்களின் பண்பு மகத்தானது. தகிக்கும் வெய்யிலையும், கொட்டும் மழையையும் வாழ்க்கையில் மன உறுதியோடு எதிர்த்துத் தாங்கி, இவ்விவசாயத் தொழிலை உயிரினும் மேலாக மதித்து வந்த இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட நேசமுள்ளவர்களாக இருந்தார்கள். இத்தொழிலில் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் பண்புள்ள மனிதர்களாக இருந்தார்கள்.

இவர்கள் தங்கள் விவசாய செய்கையின்போது வயல்களிலும் சூடடிக்கும் களவெட்டியினுள்ளும் அவர்கள் பாவிக்கும் பொருட்களின் இயற்பெயர்களைச் சொல்லமாட்டார்கள். இப்பொருட்களுக்கு இவர்கள் இவைகளுடைய காரணத்தினடிப்படையில் அமைந்த குழூஉக்குறியீட்டுப் பெயர்களையே சொல்லி அழைப்பார்கள். அப்படிப்பட்ட பொருட்களின் காரணப் பெயர்களையும் அவைகளின் இயற்பெயர்களையும் பார்க்கலாம்.

| காரணப் பெயர் | | இயற் பெயர் |
|---|---|---|
| வாரிக்காலன் | - | களவெட்டியில் சூடு மிதிக்கும் எருமை மாடு |
| அரக்கு | - | சூடு மிதிக்கும் மாடுகளில் உட்புறமாகவுள்ள மாடு |
| வாட்டி | - | களத்தின் வெளிப்புறமாக சூடு மிதிக்கும் மாடு |
| பிரிஞ்சான்/பொலிக்கொடி | - | வைக்கோல் |
| கணக்கன் | - | நெல் அளக்கும் மரைக்கால் |
| பெருவாயன் | - | பெரிய ஓலைப்பெட்டி |
| குஞ்சிவாயன் | - | சிறிய கைப்பெட்டி |
| வெட்டுவாயன் | - | மண்வெட்டி |
| கோல் | - | மாட்டுச்சாணம் |
| வாகராசன் | - | காற்று |
| பொலிமதித்தல் | - | நெல் அளத்தல் |
| கள்ளன் | - | பதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வக்கட | நீர் வெளியேறும் வழி |
| சுமந்திரம் | வட்டை அதிகாரியின் கூலி |
| கன்னட்டி | மிகச்சிறிய வரவை |
| பொலி | சூடுபோட்ட நெல் |
| அவரி | பொலி தூர்த்துவதற்கு களவெட்டியில் பாவிக்கப்படும் முக்காலி |
| மரக்குத்தி | குரங்கு |
| கொழுஞ்சான் | கறி |
| ஆடி | கச்சை |
| ஒட்டி | சிறுவால் |
| நெடுமுழவன் | கயிறு |
| கலங்கல் | தண்ணீர் |
| வலிச்சான் | உரொட்டி |
| வெண்சோடன் | தேங்காய் |
| மின்னி மின்னி கட்டுதல் | நித்திரை |
| நெடுமின்னி | மரணம் |
| வருணன் பேஞ்சான் | மழை |
| கூழைக்கையான் | பேய் பிசாசு |
| அடைக்கலஞ்சல்லி | பெண் |
| கடல்கரும்பு | மீன் |
| கைக்காச்சி பெருவெளிச்சம் | நெருப்பு |
| ஒட்டுவாயன் | சாக்கு/கோணி |
| போர் | கதிர்க்குவியல் |
| கரைச்சான் | வாழைப்பழம் |
| கூரைக்கோடு | வீடு |
| கருங்காய் | பாக்கு |
| புகைஞ்சான் | புகையிலை |
| பெருவெள்ளி | வெளிச்சம் |
| பத்தினி | விறகு |
| பூரணி | மங்கை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருமால் | - | யானை |
| செம்மாள் | - | வெற்றிலை |
| அதட்டி | - | பிரம்பு |
| சறுக்கால் | - | வண்டி |
| வாரிக்காலன் | - | சூடு மிதிக்கும் மாடு |

இதைப்போன்று இன்னும் பல குழூஉக்குறியீட்டுப் பெயர்கள் இருந்திருக்கலாம். ஆனால் என் கள ஆய்வின்போது எனக்கு கிடைத்த சொற்களை மட்டுமே இங்கு தந்துள்ளேன். மேலும் தேடுதல் செய்தால் பல பெயர்கள் கிடைக்கலாம்.

இப்பொழுது நாங்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட நாட்டுப்புறப் பாடல்களைப் பார்ப்போம்.

1. நடவாக் கிடாமாடும்
நானுமிந்தப் பாடுபட்டால்
காயாப் புழுங்கலுமென்
கண்மணியும் என்ன பாடோ?

2. மூலயில வெள்ளாம
முறுக விளஞ்சிரிக்கி
அள்ளித் துவையா கண்டார் - ஒனக்கு
அளந்துதர நான் வாறன்

3. ஆலயடி வரவ
அதக்கடுத்த நீள்வரவ
கதிர்விளஞ்சி நெல்விளைவு - நான்
காவலுக்கு போய் வாறன்

4. அலிக்கம்ப வட்டயில
அஞ்சேக்கர் செஞ்சிரிக்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலிக்கொடி வாங்க - என்ர
தங்கமயில் நாகூருக்கு

5. காவற் பறணில்
கண்ணுறங்கும் வேளயில
கண்ணான மச்சி வந்து - என்ர
காலூண்டக் கனாக் கண்டேன்.

6. சீனட்டி நெல்லும்
செல்ல இறால் ஆணமும்
பொத்துவில் ஊரும் - இப்ப
பொருந்தினதோ வன்னிமைக்கு

7. போட்டா வரம்பால
புறா நடந்து போறது போல்
நாட்டாருக்கெல்லாம் - இப்ப
நடவரம்போ என் சடலம்

8. கதிரு கொடல
காயடக்கம் வெள்ளாம
பண்டி நெருக்கம் - என்ர
பாடெல்லாம் போகுதுகா.

9. ஏத்தால வெள்ளாம
இளங்கொடல பூங்கதிரு
மாட்டால அழியுதென்டு - என்ர
மன்னவர்க்கு செல்லிருங்க

10. அத்தியடி வரவ
அதுக்கடுத்த நீள் வரவ
கதிர்பழுத்து நெல் வெளவு - நான்
காவலுக்கு போய்வாறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சூடுபோட்டு நெல்லளந்து
சொரிஞ்சி குமிச்சிரிக்கன்
ஆருக்காகத் தங்கம் - எல்லாம்
ஆசக்கிளி ஒனக்குத் தாங்கா

12. பொழுது கிளம்பி
பூமி இந்தச் சூடு சுட்டா
வெள்ளாம வெட்டுகிற - மச்சான்ட
மேனியெல்லாம் என்ன ஆகும்?

அக்காலத்தில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் வயல்களை எருமை மாடுகளைக் கொண்டு மிதித்து பண்படுத்தியே செய்தனர். இவர்கள் எருமை மாடுகளை 'கிடா மாடுகள்' என்றும் அழைத்தனர். வயல்களை மிதித்து பண்படுத்தும் போது விவசாயிகள் தங்களுடைய களைப்பினைப் போக்கிக் கொள்வதற்காக, பாடல்களைப் பாடிக்கொண்டே மாடுகளை சாய்த்துக் கொண்டிருப்பார்கள். இப்பாடல்கள் எல்லாம் கற்பனை வளம் மிக்கதாகவும், கருத்துச் செறிவுள்ளதாகவும் இருக்கும். இப்பாடல்களில் அதிகமாக இவர்களின் கஷ்டங்கள், சூழலின் தாக்கம், இறைநம்பிக்கை, சமயத்தின் உறுதி, என்பன இடம்பெற்றிருக்கும். அப்படியான ஒரு நாட்டுப்புறப் பாடலைப் பார்ப்போம்.

## வயல் மிதிக்கும் போதும் பாடும் பாடல்

ஓஹோ!... ஓ...! ஓ....!
ஓடி.... ஓடி... நடந்திருங்க...
என்ர சீதவிகாள் - நீங்க
உசாராக நடந்திருங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர சீதவிகள்...
சார்பாத்து நடந்திருங்க...
என்ர சீதவிகாள்... நீங்க...
சாரோடு போயிரணும் சீதவிகாள்...
ஓஹோ!... ஓ...! ஓ...!
அல்லா தொணயால சீதவிகாள்
நீங்க அவசரமா நடந்திரணும் சீதவிகாள்
அயாத்துநபி தொணயால சீதவிகாள்
நீங்க அசந்திரமா நடந்திரணும் சீதவிகாள்
கட்டிகள மிரிச்சிரிங்க சீதவிகாள் - நீங்க
என்ர கக்கிசத்த போக்கிருங்க சீதவிகாள்
புல்லுகள மிரிச்சிரிங்க சீதவிகாள் - நீங்க
நீங்க, பொறுமையோட நடந்திருங்க சீதவிகாள்
ஓஹோ...! ஓ...! ஓ...!
வெள்ளாம விளஞ்சிரணும் சீதவிகாள் - நீங்க
வெசயா நடந்திருங்க சீதவிகாள்
மய்யதீனாண்டவர்ர கந்திரிய நாங்க,
மறக்காமக் குடுத்திருவம் சீதவிகாள்
போட்ட மொள ஊட்டுக்குள்ள சீதவிகாள்
போடி வந்து ஏசுவாண்டா சீதவிகாள்
பணியாரமும் பாலுக்குள்ள சீதவிகாள்
நாங்க பசியாற வேணுமடா சீதவிகாள்
ஓஹோ...! ஓ...! ஓ...!
பொன்னாங்கண்ணி பிக்க வேணும் சீதவிகாள்
பொழுதும் ஏறிக் போகுதிரா சீதவிகாள்
போட்டி போட்டு நடந்திருங்க சீதவிகாள் - என்ர
பொடியனும் சவுத்திற்ராண்டா சீதவிகாள்
மீனும் வடிக்கணுன்ரா சீதவிகாள் - எங்களுக்கு
மிஞ்சினது கண்ணீர்தான் சீதவிகாள்
ஏழ மனம் சிரிச்சிரணும் சீதவிகாள் - நீங்க
எட்டிப்போட்டு நடங்கடா சீதவிகாள்
ஓஹோ!..... ஓ!...... ஓ!.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாடல் உதவி | : | மர்ஹூம் சிக்கந்தர் சின்னத்தம்பி (நூலாசிரியரின் தந்தை) |
| கல்வி | : | படிக்கவில்லை |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | இறக்கும்போது 85 |
| ஊர் | : | நிந்தவூர் |

இதைப்போன்று இந்நாட்டுப்புற முஸ்லிம்கள் சூடு போடும் போதும், பாடல்கள் பாடுவார்கள். அக்காலத்தில் வயல்களில் குவித்து வைக்கப்படும் சூடுகளை இரவில்தான் அடித்து நெல்லையும் வைக்கோலையும் பிரித்து எடுப்பார்கள். ஆறு ஏழுபேர் சேர்ந்து சூடடிப்பார்கள். இவர்கள் எருமை மாடுகளைக் கொண்டே சூடடிப்பார்கள். குவித்து வைக்கப்பட்டிருந்த சூட்டைப் பிரித்து, ஒழுங்குபடுத்தப்பட்ட களவெட்டியில் போடுவார்கள். இதன் பின்னர் நாலு புணையல் மாடுகளை அதன் மேல் ஏற்றி வளைத்து வளைத்து சாய்ப்பார்கள். இப்படி மாடுகளை சாய்ப்பவரே பாடல்கள் பாடுவார். இப்படிப்பட்ட பாடலொன்றைப் பார்ப்போம்.

### சூடு மிதிக்கும்போது பாடும் பாடல்

ஓ!.... ஓ!.... ஓஹோ....!
கடகத்திக்க மூணுடா....
கைப்பெட்டிக்க ரெண்டிடா....
ஆகப்போக அஞ்சிரா....
அவசரமா.... நடங்கடா...
ஓ!.... ஓ!.... ஓஹோ....!
வாரிக்காலா....
வளஞ்ச கொம்பா....
வைக்கலப் பெருக்கி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளஞ்சி நடடா....
ஓ!.... ஓ!.... ஓஹோ....!
களவெட்டியச் சுத்தி,
காவலிருக்கு,
பேய்கள் வராம
அவுலியா இரிக்காரு....
அரக்கச் சுத்தி வளஞ்சி வாங்கடா....
ஓ!.... ஓ!.... ஓஹோ....!
எறச்சிக் கறியோட சோத்துப் பொட்டிய
எலவான்ட செய்யது எடுத்திக்காராண்டா....
சோறும் திங்கணும், சோம்பலப் பாராம
சுறுக்கா நடங்கடா, களவெட்டி கனத்திட
ஓ!.... ஓ!.... ஓஹோ....!
சிக்கந்தர் அவுலியாவே, எங்கிட
சேகுசல்லி மவுலானாவே
அயாத்து நபி அப்பாவே
களவெட்டி நெறம்ப - கனக்கப்
பொலியப் பெருக்கித்தாங்க....
ஓ!.... ஓ!.... ஓஹோ....!
அல்லாட பேரால நாங்க
அடுத்தமுற கந்துரிய.
நல்லாக் குடுப்பம், பொலிய
நயமாகத் தந்திருங்க....
எட்டி நடங்கடா உசாராக....
ஏழட பொளப்பெல்லாம் பொலிஞ்சிர
வயக்காரன் வாறாண்டா களத்துக்குள்ள
வளஞ்சி நடங்கடா வாட்டியோட....
ஓ!.... ஓ!.... ஓஹோ....!
போடி படுக்காண்டா பறன்மேல
புசுக்கெண்டு வருவாண்டா களத்துக்குள்ள
ஓடி நடங்கடா.... தங்கங்களா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டாக எல்லாரும் வேகமாக
ஓ!.... ஓ!.... ஓஹோ....!

| | | |
|---|---|---|
| பாடல் உதவி | : | மர்ஹூம் முகையதீன்வாவா இவரின் பட்டப்பெயர் (டீஆறு) |
| கல்வி | : | முற்றாகப் படிக்கவில்லை |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 80 |
| ஊர் | : | நிந்தவூர் 01 |

**மீன்பிடித்தல்**

இப் பகுதிகளில் வாழ்ந்த அக்கால நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்காக ஆறு, குளம், கடலில் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்தனர். இவர்கள் தங்கள் வயல் சேனைகளுக்கு பக்கத்திலுள்ள ஆறு, குளம், கடலில் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்தனர். இவர்கள் தங்கள் வயல், சேனைகளுக்கு பக்கத்திலுள்ள ஆறு குளங்களில் போய் மீன்களைப் பிடித்து வந்து தங்களுடைய தேவையளவிற்கு எடுத்துக் கொண்டு, மிஞ்சியதை தங்கள் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்து வந்தனர். இவர்கள் வயல்களில் தங்கியிருந்து வேலை செய்யும்போதும், இரவில் சூடுபோடும் காலங்களிலும் குளங்களிலும் ஆறுகளிலும் தேவையான மீன்களைப் பிடித்து கறி சமைப்பார்கள். இம்மீன்கறிகள் ருசியாகவும் சுவையாகவும் இருப்பதற்காக, ஆற்றோரங்களில் வளர்ந்து நிற்கும் பிப்பிலியங்காய்களை அல்லது புளியங்காய்களைப் பறித்துவந்துபோட்டு கறிகளைச் சமைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்பிடியும் வலைகளும் (ஆறு, குளம்)

இவர்கள் ஆறு, குளங்களில் மீன்களைப் பிடிப்பதற்கு கீழ்வரும் மீன்பிடி வலைகளையும், பொறிகளையும் பாவித்து வந்தார்கள். வயல்களில் விவசாய வேலைகள் தொடங்கும் காலங்களில் இவர்கள் தங்கியிருக்கும், புரை, பறன், காலைகளில் இவைகளைத் தங்கள் கையோடு கொண்டு போய் வைத்திருப்பார்கள்.

1. அத்தாங்கு
2. கைவலை
3. இடியத்தாங்கு
4. கரப்புக்கூடை
5. பொறிக்கூடை

## அத்தாங்கு

இது நாலடி அல்லது ஐந்தடி நீளமான கம்பையெடுத்து, அதை நன்றாகச் சீவி வளைத்தெடுத்து, கூம்பு வடிவில் நூலால் பின்னியெடுத்த வலையை இதில் கட்டியெடுப்பார்கள். இந்த கூம்பு சுமார் ஐந்தடி உட்குவிந்து நீளமாக இருக்கும். இதனால் ஆறு குளங்களில் வாழும் மீன்களை வடித்து எடுப்பார்கள். முக்கியமாக விரால், குறட்டை, பனையான், கெழுத்தி, சுங்கான், ஆரல், செப்பலி, செத்தல், பொட்டியான், விலாங்கு, வாளை, கொக்கிசான், மணலை, கணையான், உழுவை, இறால் போன்ற மீனினங்கள் இப்பகுதிகளிலிருந்த ஆறு குளங்களில் நிறைவாக வாழ்ந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவலை

இது சுமார் பத்துப் பதினைந்தடி அகலமான நீர்ப்பரப்பில் எறிந்து மீன்பிடிக்கக் கூடியதாக அமைத்திருப்பார்கள். வலையை கூம்பு வடிவில் நூலினால் பின்னி, அதன் அடியில் பாரத்திற்காக ஈயத்தால் செய்த கட்டிகளைக் கட்டியிருப்பார்கள். மீன்பிடிக்க. இதை அஞ்சாறு பட்டுகளாக முன்னங்கையில் கொசுகியெடுத்து மீன்கள் வரும்போது அவைகள் மேல் தூக்கியெறிவார்கள். எறியப்பட்ட வலை மீன்களை மறித்து வைத்துக் கொண்டிருக்கும். பின்னால் எறிந்த வலையை மெதுவாக கரைக்கு இழுத்தெடுத்து மீன்களைப் பிடித்து, கூடையில் போடுவார்கள்.

## இடியத்தாங்கு

இது அத்தாங்கைப் பார்க்கிலும் ஐந்தாறு மடங்கு பெரிதாக இருக்கும். இதுவும் நூலினால் பின்னப்பட்டு, இதை பத்துப் பதினைந்தடி, நீளமான கம்பை வளைத்தெடுத்து, அதில் இறுக்கமாகச் சேர்த்து கட்டியிருப்பார்கள். இதுவும் ஓரளவு கூம்பு வடிவாகவே பின்னப்பட்டிருக்கும். இதை இவர்கள் ஆறு குளங்களில் கொண்டு போய் ஒரு இடத்தில் கெட்டியாகப் புதைத்து விட்டு, புதைத்த பகுதியிலுள்ள நீரில் கம்பினால் அடித்தடித்து மீன்களை புதைத்து வைத்த அத்தாங்கடிக்கு கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். அதிகமாக விரால் மீன்களை அந்த அத்தாங்கிலேயே பிடிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்புக்கூடை / பொறிக்கூடை

இவை இரண்டும் மூங்கில் தடிகளினால் அல்லது சிறு கம்புகளினால் உருளையாக கூம்பு வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். இவைகளைக் கொண்டு ஆறு குளங்களில் குத்திவிட்டு பின்னர் குத்திய இடத்திற்குள் கரப்புக்கூடை உள்ள இடங்களில் கைகளை உள்ளே விட்டு கைக்கரப்புப் பார்த்து மீன்களைப் பிடிப்பார்கள். பொறிக் கூடைகளை எப்பொழுதும் நீர் ஓடி வரும் திசையில் ஓடைகளை மறித்து சாய்த்துக் குத்தியிருப்பார்கள். ஓடையில் ஓடி வரும் மீன்கள் இதற்குள் போனால் வெளிவர முடியாமல் பொறி வைத்திருப்பார்கள். பொறிக்கூடைகளை இரவில் வைத்துவிட்டுப் போனால், காலையிலேயே பொறிக்கூடையில் பட்ட மீன்களை வந்து எடுப்பார்கள்.

## கடலில் மீன்பிடித்தல்

இப்பகுதிகளில் உள்ள கடலோரக் கிராமங்களில் வாழ்ந்து வந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் கடலில் தோணிகளில் போய் மீன்பிடித்து அம்மீன்களை பணத்திற்கு விற்று வாழ்க்கை நடாத்தினார்கள். இத்தொழிலிலும் இவர்களின் சீவியத்திற்கு முக்கிய தொழில்களில் ஒன்றாக இருந்தது. கடற்கரையிலிருந்து சுமார் 1000 யார் தூரத்திற்குள் தோணிகளில் சென்று மீன் பிடித்தார்கள். இவர்கள் இப்படிச் சென்று மீன் பிடித்தலை கரைவலை மீன்பிடித்தல் என்பார்கள். இவர்கள் கடலில் மீன்களை வளைந்து பிடிப்பதற்கு கயிற்றினாலும், முறுக்கு நூலினாலும் வலைகள் பின்னி வைத்திருப்பார்கள். வலைகளைத் தோணியில் ஏற்றிக் கொண்டு போய் கடலில் வரும் மீன்களை வளைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு, வலைக்கால்களை கரையில் நிற்கும் தொழிலாளர்களின் கையில் கொண்டு வந்து கொடுத்து வலையை இழுக்கச் சொல்லுவார்கள். கடலில் நிற்கும் தோணியிலிருக்கும் தண்டையலின் கையில் மீன் மடியின் சுருக்குக் கயிறு இருக்கும். வளைந்த மீன்கள் எல்லாம் மடிக்குள் வந்து சேர்ந்தவுடன் தண்டையல்மடியின் வாயைச் சுருக்கி விட்டு, தோணியிலிருந்து மடியைக் கழற்றி விடுவார்.

கரைவலையின் நீளத்தை கம்பான் என்ற சொல்லால் அழைப்பார்கள். ஒரு கம்பான் நூறு பாகங்களாகும். இதன்படி தோணியின் இரு வலைக்கால்களும் சுமார் ஆயிரம் பாகங்களாகும். ஒரு தோணியில் மீன்பிடிப்பதற்கு வசதியாக சுமார் நாற்பது அல்லது ஐம்பது தொழிலாளர்கள் இருப்பார்கள். ஒரு தோணியில் கூட்டாகத் தொழில் செய்பவர்களை 'தத்தி' என்று கூறுவார்கள். இவர்கள் கரைவலைத் தோணி மூலம் கடலில் கீரி, பாரை, சூரை, கிளவள்ளு. பாரைக்குட்டி, கும்புளா, ஒலைவாயன், வெளவால் பாரை, அறுக்குளா, தோரா, சீலா, கூடை, ஊலா, கணவா, காரல், நெத்தலி, சாளை போன்ற மீன்களைப் பிடிப்பார்கள்.

## கரைவலைத் தோணிலும் மீனவர்களும்

1. தண்டையல் (01) : இவர் தோணி கடலில் நிற்கும்போது சுங்கானைப் பிடித்து தோணியை வழிநடாத்தி செலுத்திக் கொண்டிருப்பார்.
2. தண்டுக்காரர்கள் (04) : ஒரு தோணியில் நாலு தண்டுக்காரர்கள் இருப்பார்கள். இவர்கள் தோணியின் தண்டுகளை வலித்து தோணியை ஓட்டிக் கொண்டிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மிதப்பர் (01) : தோணியிலிருந்து வலையைக் கடலுக்கு கலையாது விடுபவர்.

4. வலைக் காவலாளி : இவர்கள் இரண்டு பேர் இருப்பார்கள். இவர்கள் கடலில் தூக்கிப்போட்ட வலைகளைப் பாதுகாத்து வருவதோடு மீன்கள் வலைக்காலிலிருந்து வெளியில் போகாமலும் பாதுகாத்து வருவார்கள்.

5. தோணியின் அவசர வேலையாள் (01): இவர் சடுதியாகத் தோணியில் கடல்நீர் ஏறினால் அந்நீரை இறைப்பார்.

## கரைவலைத் தோணியும் உபகரணங்களும்

1. சுக்கான்
2. தண்டுகள்
3. கலம்பக் கயிறு - (சிறியது)
4. முப்பிலிக் கயிறு - (சிறியது)
5. தேடாக்கயிறு - பெரியது
6. சள்ளை - மீன்களை வளைந்து ஒன்றாகச் சேர்க்கும் வலை
7. சிலாமாய் - மிதப்புக்கட்டை
8. மடிதாங்கி - மீன்கள் கூடுதலாக மடியில் பட்டால், மடிவெடித்து விடாமல் பாதுகாக்க மடியில் போட்டு இழுக்க உதவும் வலை
9. நங்கூரம் - தோணியை ஒரு இடத்தில் நிறுத்தி வைக்க உதவும் கருவி.
10. கொல்லா - தோணியை நேராகத் தாங்கிப் பிடிக்கும் கம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைவலைத் தோணியைக் கடலில் தள்ளி, மீன்களை வலையினால் மறித்து வைத்துக் கொண்டு மீனவர்கள் கரையிலிருந்து வலைக்கால்களை இழுப்பார்கள். இப்படி இவர்கள் இரு வலைக்கால்களிலிருந்தும் கடலுக்குள் கிடக்கும் வலைகளை கரைக்கு இழுக்கும்போது தங்கள் வாய்க்கு வந்த வந்த மாதிரியெல்லாம் பாடல்களைப் பாடி இழுப்பார்கள்.

இப்பாடல்களை அம்பாப் பாடல்கள் என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட பாடல்களைப் பார்ப்போம்.

## அம்பாப் பாடல்கள்

(1.) ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்.... ஓவேலம்....
ஏலடி.... ஏலேம்....
ஏலச் சிலாமாய்....
கள்ளச் சிலாமாய்....
கலம்பக் கயிறு....
முப்பிலிக் கயிறு....
தேடாக் கயிறு....
தேடி இழுடா....
ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்.... ஓவேலம்
சாஞ்சி.... இழுடா....
சவியா.... இழுடா....
தாள மரத்தப் பாத்து இழுடா....
கிண்ண மரத்தக் கேட்டு இழுடா....
சின்னப் பொடியா....
சேந்து இழுடா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ண ஒதச்சி
மாஞ்சி இழுடா....
ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்.... ஓவேலம்
ஏலடி.... ஏலம்....
ஏலச் சிலாமாய்....
ஓவேலம்.... ஓவேலம்....
ஆழிக் கடலில்....
அல்லாஹ்வை நம்பி....
சள்ளையும் தள்ளி....
சவியா இழுடா....
ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்.... ஓவேலம்....
ஏலடி.... ஏலம்....
ஏலச் சிலாமாய்....
கள்ளச் சிலாமாய்....
கயித்த இழுடா....
அலியின் சவிய....
அல்லாஹ் தருவான்....
ஓடி இழுடா....
உசாரப் புடிடா....
ஏலேலம்....ஏலேலம்....
ஒவேலம்....ஓவேலம்....
கடலப்பார்ரா....
கறுப்படிக்கிது....
புள்ளப் பார்ரா....
அள்ளிப்போகிது....
அல்லாஹ்.... தருவான்
அணச்சி இழுடா
ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்.... ஓவேலம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலடி ஏலம்....
ஏலச் சிலாமாய்....
மருக் கொழுந்து....
மல்லிக முல்ல....
நேத்து வடிச்ச....
ஆத்துக் கெழுத்தி....
வளஞ்சி இழுடா....
வடிவா இழுடா....
ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்.... ஓவேலம்....
ஏலடி ஏலம்....
ஏலச் சிலாமாய்....
கள்ளச் சிலாமாய்....
கயித்த இழுடா....
ஏலேலம்.... ஏலேலம்....
ஓவேலம்... ஓவேலம்....

பாடல் உதவி : எம்.மீராலெவ்வை (கரைவரைத் தண்டயல்)
ஊர் : நிந்தவூர் - 12
கல்வி: 3ம் வகுப்பு
வயது: 58

(2.) ஏலேலோ.... வலை....
ஓவேலோ.... வலை....
ஐயோடா வலை
ஆடோடா வலை
நாகூர் சிறப்பையும்....
நல்ல ஒலியயிம்....
பள்ளி வடிவையும் ....
பாருங்க... மக்களே...!
தூணுக்கு தூணங்கே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கும் விளக்கையும்....
தங்கக் கொடத்தையும்....
வெள்ளிக் கொடத்தையும்....
பள்ளிக்குள்ள நல்லாப்
பாருங்க.... மக்களே
ஏலேலோ.... வலை....
ஓவேலோ.... வலை....
ஐயோடா.... வலை....
ஆடோடா.... வலை....
ஓடாத.... ஓடாத கோழிக்குஞ்சே,
ஓட்டங்கள் காட்டாத கோழிக்குஞ்சே,
எட்டுப் பணம் வித்த காலத்தில
கட்டி வளத்தேனே கோழிக்குஞ்சே
ஏலேலோ.... வலை....
ஓவலோ.... வலை....
ஐயோட.... வலை....
ஆடோடா... வலை....
எங்கிட ஊரில் பஞ்சமாம்
ஏழச் சனங்களும் மிச்சமாம்
சந்திக்கு சந்தியில் கூட்டமாம்
சாகிற கிழவியும் ஓட்டமாம்
ஏலேலோ.... வலை....
ஓவேலோ.... வலை....
ஐயோடா.... வலை....
ஆடோடா.... வலை....
கொட்டிக் கெழங்கிக்கு போறேங்கா....
கோவித்துக் கொண்டாரு பண்டாரம்....
அவிச்சி உரிச்சி தட்டில போட்டதும்....
சிரிச்சிக்கி திண்டாரம் பண்டாரம்....
ஏலேலோ.... வலை....
ஓவேலோ.... வலை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோடா.... வலை....
ஆடோடா.... வலை....
சாலுவ காட்றான் தண்டயல்....
சள்ளயிம் தள்ளிற்ரான் தண்டயல்....
அள்ளி இழுங்கடா தம்பிகாள்....
அல்லாவும் தந்திற்ரான் ஏழைக்கு....
புள்ளுமடிக்கிது பாருடா....
பொத்தி இழுங்கடா சள்ளய....
வெள்ளி தெரியிது பாருடா....
வெற்றி நமக்கினு அள்ளுடா....
சூடல் கொதிக்கிது.... பாருடா....
சுறுக்கா இழுங்கடா சள்ளய....
மடிதாங்கி கொண்டாடா மம்மதோ....
மலபோல வருகிது மீன்மடி....
ஏலேலோ வலை....
ஓவேலோ.... வலை....
ஆடாடோட.... வலை....

பாடல் உதவி : மீ.இஸ்மாவெல்வை (கரைத்தண்டயல்)
கல்வி : 4ம் வகுப்பு
ஊர் / வயது : நிந்தவூர் - 01
வயது : 72

## பாய், உமல், தட்டு இழைத்தல்

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் ஆண்கள் தங்களின் வாழ்வாதாரங்களுக்கு, வயல்களிலும், சேனைகளிலும், கடலிலும் உழைத்துவந்தபோது, பெண்கள் வீடுகளிலிருந்து பாய், உமல், தட்டு இழைத்து இவர்களின் பொருளாதாரத்திற்கு உறுதுணை செய்தார்கள். களப்பு, அல்லை, ஆற்றுப் படுக்கைகளை அண்டிய சதுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களில், அக்காலத்தில் பலவிதப்பட்ட பன்கள் செழிப்பாக வளர்ந்தன. இப்பன்கள் புல் இனங்களைச் சேர்ந்ததாகும். இப் பன்கள் பெரியதாக நீண்டு வளர்ந்து வரும் தன்மை கொண்டவையினால் இவைகள் பாய், தட்டு, உமல்கள் இழைப்பதற்கு வசதியாக இருந்தன. இம்மக்கள் இப்பன்கள் வளர்ந்து செழிப்பாக நிற்கும் இடங்களுக்கு சென்று இப்பன்களை இவர்கள் பிடிங்கி வந்து. அவைகளை வெய்யிலில் காயவைத்து எடுப்பார்கள். பன்கள் வெய்யிலில் நன்றாகக் காய்ந்த பின்னர், அவைகளைத் தரம் பிரித்து கழிவுகளை அகற்றி விட்டு, நல்லவைகளை தங்கள் தொழிலுக்கு எடுப்பார்கள். இப்பன்கள் ஐந்து வகைப்படும். அவைகள் கற்பன், வேடப்பன், கிராம்பன், புற்பன், சாப்பைப் பன் என்று கூறுவார்கள். இப்பன்களை இவர்கள் 'பருத்திமனை' என்னும் பன்களைப் பதப்படுத்தி எடுக்கும் பொறியின் மூலமாக சீர்படுத்தி, வாட்டியெடுத்து பின்னர் தங்கள் தேவைக்கேற்றவாறு கிழித்தெடுத்து பாய், தட்டு, உமல் போன்றவைகளை இழைப்பார்கள். பாய்களுக்கு பல பெயர்கள் உண்டு.

## பாய்களின் பெயர்கள்:

1. அத்திராசி
2. வட்ட அத்திராசி
3. நெரிஞ்சிப் பூ அத்திராசி
4. விடிவெள்ளி அத்திராசி
5. மயிலிறகு அத்திராசி
6. தாரா அடிக்கூட்டம்
7. கருக்குருவிக் கூட்டம்
8. கண்மலர்க் கூட்டம்
9. ஒத்தக்கொடிப் பாய் கூட்டம்
10. வால் வெள்ளிக் கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வீணைப் பொட்டிப்பாய்
12. சீப்புச் கண்டாங்கி
13. மஸ்குட்டிப் புழுப்பாய்
14. பொருதுப்புணி
15. தப்புப் புணி
16. தாராக்கால்
17. தாமரைக்கொடி
18. சித்துப்புணி
19. மைக்கண்
20. முத்துச் சரியன்
21. கண்டாங்கி

இப்பாய்களை இழைத்து பணத்திற்கு விற்று, தங்கள் பொருளாதாரத்தை இவர்கள் சீர்படுத்திக் கொண்டார்கள். இப்பொழுது பாயிழைக்கும் தொழிலோடு சம்பந்தப்பட்ட இம்மக்களின் நாட்டார் பாடல்களைப் பார்ப்போம்.

1. முடக்குப் புணியெடுத்து
மோடியான பாயிழைச்சி
படுக்கைக்குபோட்டிரிக்கன் - என்ர
பத்திரிப்பு ராசாவுக்கு

2. அல்லயில பன்புடுங்கி
ஆவரணப் பாயிழைச்சி
படுக்கைக்கு போட்டிரிக்கன் - என்ர
பச்ச இஞ்சி வாயாருக்கு

3. முத்துச் சரியன்
முழுதுமது கண்டாங்கி
அத்தனையும் பூத்தான் - இப்ப
அவர் படுக்கும் பாயெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பன்னுக்குப் போன
பச்சக்கிளி வட்டயில
மேயிதுகா ராசா - அத
மெல்லப் போய்க் கூட்டிக்காகா

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் பலதரப்பட்ட உடைகளையும், அணிகலன்களையும் உபயோகித்து வந்தார்கள். வறுமைக்கோட்டில் வாழ்ந்த இம்மக்கள் அதிகமாக நூலாடைகளையும், வெள்ளியினால் செய்யப்பட்ட நகைககளையுமே விரும்பி அணிந்தார்கள். நாகரீக வாழ்க்கையின் நிழல்கூடத்தெரியாத இவர்கள் இயற்கையின் சூழலுக்கேற்றவாறு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். எழிலான கிராமங்களில் வாழ்ந்த இம்மக்கள் இயற்கையின் இனிய தாலாட்டில் கண்ணயர்ந்தார்கள். இவர்களிடம் ஒழுக்கமும், உயர்ந்த பண்புகளும், இறைபக்தியுமே நிறைவாக இருந்தன. இவர்களைப் படாடோபங்களும் பகட்டுகளும் என்றும் பாதிக்கவில்லை. இப்பகுதிக் கிராமப் புறங்களில் வாழ்ந்த ஆண்களும், பெண்களும், உடம்பை ஒழுங்காக மறைத்து ஒழுக்கப் பண்போடு வாழ்ந்தார்கள். இதற்கு ஏற்றவாறு இவர்கள் உடைகளை அணிந்தார்கள்.

## பெண்கள் அணிந்த உடைகள்

இவர்கள் கனமான சோமன் வகையினாலான பிடவைகளை நன்றாக உடம்பை மறைத்து உடுத்து தலையில் மொக்காடு (பர்தா) போட்டுக் கொள்வார்கள். இவர்கள் சட்டை அணிய மாட்டார்கள். இதனால் இவர்களின் பிடவையினாலேய தங்கள் மார்பகங்களையும் கெட்டியாக மறைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். இச்சோமன் பிடவைகள் பனிரெண்டு முழம் நீளமுடையதாக இருந்தன. இதனால் இவர்களின் உடலை சிறப்பாக மறைத்துக் கொள்வதற்கு, இப்பிடவை நல்ல போதுமானதாக இருந்தது. இப்பிடவைகள் இன்றும் சில கிராமப் புற மக்களிடமிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிடவைகளின் பெயர்கள்

1. மாடாவணச் சோமன்
2. எள்ளு வண்ணச் சோமன்
3. கடுகு வண்ணச் சோமன்
4. சந்திரபடிச் சோமன்
5. பால் சோமன்
6. மருதமூட்டுச் சோமன்
7. முக்கடுக்குச் சோமன்
8. வெண்பட்டுச் சோமன்
9. மஞ்சள் பட்டுச் சோமன்
10. தோம்புச் சேலை
11. கருக்குப் பணி
12. சுங்கொடி
13. மூங்கில் பட்டு
14. மோகினிப் பட்டு
15. கல்குத்தா
16. வத்தாவி
17. கறுத்தச் சேலை
18. அத்திராசிச் சேலை
19. பஞ்சவண்ணப் பட்டு
20. கம்பாயம்
21. தோப்பு
22. கறுக்குப் பாணி
23. எள்ளு வண்ணச் சோமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பட்டறை அடுக்குச் சோமன்
25. சூத்து வெள்ளப் புடவை
26. பால் வண்ணச் சோமன்
27. மஞ்சள் பட்டுச்சோமன்
28. மூங்கில் பட்டு
29. சந்திரப் படிச்சோமன்

இப்பிடவை வகைகளிடையே பட்டுப் பிடவைகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இப் பட்டுப் பிடவைகளையே இம்மக்கள் கலியாணத்தின்போது மணப் பெண்ணுக்கு உடுப்பாட்டி மணவறையில் வைப்பார்கள். இப்பிடவைகள் பற்றிய சில நாட்டுப் புறப் பாடல்களைப் பார்ப்போம்.

1. மச்சி மனசிக்கு
மதிப்பான பால்சோமன்
அச்சிக்கு வாங்கி வாறன் - நீ
அதுவரைக்கும் பொறுத்திரிகா

2. பொளுபொளுத்த பூச்சட்ட
புள்ளி போட்ட பாவாட
அத்திராசி சீத்தமச்சி - ஒனக்கு
அழகாத்தான் இரிக்கிதுகா.

3. நார்ப்பட்டுச் சோமன்
நல்லா இணங்கிறாப் போல்
பூச்சில்க்கு சட்ட மச்சி - ஒனக்கு
பொருந்திரிக்கி நல்லாத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்கள் அணிந்த உடைகள்

இப்பகுதிகளில் வாழ்ந்த கிராமப்புற முஸ்லிம் ஆண்கள் சாறன் உடுத்து, தோள்பூட்டுச் சட்டையும் அணிந்திருப்பார்கள். சிலர் சாறனும் கையுள்ள பென்னியன் சட்டையும் போடுவார்கள். அதிகமாக இவர்கள் சிறுவாலே அணிந்திருப்பார்கள். வயல்களில் வேலை செய்யும் போதும் வேறு தொழில்களைச் செய்யும் போதும் கட்டாயம் சிறுவால் போட்டிருப்பார்கள். இச்சிறுவால் முளங்கால் வரை நீளமாக இருக்கும். இதை இரு கால்களுக்குள்ளால் போட்டு, இடுப்பில் இவர்கள் போட்டிருக்கும் அரணாக் கொடிக்குள் இதைச் செருகிக் கொள்வார்கள். இவர்களில் சிறுவாலுக்கு மேலால் சாறனை உடுத்திக் கொள்வார்கள். இவர்கள் போட்ட சட்டைகள் தலையால் போடும் சட்டையாகவே இருந்தன. சட்டைகளை ஊசி நூலைக்கொண்டு கைளால் தைத்துப்போட்டுக் கொள்வார்கள். இச்சட்டைகளுக்கு வலது தோள் பக்கம் மூன்று இஞ்சி நீளமாக இடைவெளி விட்டுத் தைத்திருப்பார்கள். சட்டையை தலையால் போட்டு கழுத்தடியில் விடுவார்கள். சட்டையில் தோள் பக்கம் இடப்படும் இடைவெளி சட்டையைத் தலையால் போடுவதற்கு வசதியாக இருப்பதற்காகவே இவ்விடைவெளி விடப்படும்.இந்த இடைவெளியை சேர்த்துக் கட்டுவதற்கு இதில் இரு சீலையால் தைத்த நாடாவும் வைத்துத் தைத்திருப்பார்கள்.

அக்காலத்தில் இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் ஆண்கள் தங்கள் கால்களுக்கு மரத்தால் செய்த மிரிவடிக் கட்டைகளைச் செய்து அணிந்து வந்தார்கள். இம்மிரிவடிக் கட்டைகளைச் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் அண்ணவண்ணா என்னும் மரக் கட்டைகளையே பாவித்தார்கள்.

## மிரிவடிக் கட்டைகளின் பெயர்கள்:

### 1. குமிழ் மிரிவடிக் கட்டை:

இது பாத வடிவில் செய்யப்பட்டு, காலில் உள்ள பெருவிரல்களுக்குள் பொருந்தி நிற்கக் கூடியவாறு மிரிவடிக் கட்டையில் குமிழ் வடிவில் கட்டையும் செய்து பதிக்கப்பட்டிருக்கும். இதுபோல் மிரிவடிக் கட்டையின் உயரத்திற்காக அடியிலும் இரு கட்டைகளும் செய்து பதித்திருப்பார்கள்.

### 2. தோல்வார் மிரிவடிக் கட்டை:

மிரிவடிக் கட்டையை பாத வடிவில் செய்து, அதில் மான், மரத் தோலினால் வார் செய்து இவ்வாரை மிரிவடிக் கட்டையில் கால்கள் பொருந்தக் கூடியவாறு வைத்து ஆணியினால் சேர்த்து அடித்திருப்பார்கள்.

### 3. ஒத்தவார் மிரிவடிக் கட்டை:

இது மிரிவடியின் முன்னுள்ள பகுதியிலுள்ள இரு பக்கங்களையும் தோல் வாரால் சேர்ந்து ஆணியால் அடிக்கப்பட்டிருக்கும். இதில் கால்களை ஒட்டி நடக்கக் கூடியதாக இருக்கும்.

### 4. குதிரைப் பாய்ச்சல் கட்டை:

இந்த மிரிவடியும் பாத வடிவில் செய்து வார் போட்டிருப்பார்கள். இக்கட்டைகளுக்கு இவர்கள் ஆணிகளை அணி அணியாக அடித்து அழகு படுத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் ஆண்கள் பலதரப்பட்ட தலைப்பாகைகளையும், தொப்பிகளையும் அணிந்தார்கள். இத் தலைப்பாக்களையும் தொப்பிகளையும் கலியாணம், கந்தூரி, பெருநாட்காலங்கள், விசேட நிகழ்வுகளின்-போது அணிவார்கள். சிலர் பள்ளிவாசல்களுக்கு ஜும்ஆத் தொழுகைக்கு போகும் நேரங்களில் இவர்கள் தொப்பிகள் அணிந்தும், அதனைச் சுற்றி சீலையால் தலைப்பாகையும், கட்டிப்போடுவார்கள். பொதுவாக இவர்கள் தலையில் தொப்பி எப்பொழுதும் போட்டிருப்பார்கள். இதை இவர்கள் தங்களின் பாரம்பரிய கலாச்சாரம் என்று கருதியே வந்தார்கள்.

### சீலைத் தலைப்பாகை:

இது நீண்ட சீலையால் அல்லது சால்வையால் தலையில் போட்டிருக்கும். தொப்பியைச் சுற்றி வளைத்துக் கட்டுவார்கள். இதைப் பொதுவான தலைப்பாகை என்றும் கூறுவார்கள். அதிகமாக வெள்ளை நிறச் சால்வையினாலேயே இத்தலைப்-பாகையை அவர்கள் சிறப்பாக கட்டிக் கொள்வார்கள்.

### விசிறித் தலைப்பாகை:

இதை விசேட தலைப்பாகை என்று கூறுவார்கள். இத்தலைப்பாகையை கட்டுவதற்கு ஏற்ற மாதிரி, தலைப்பாகை கட்டும் போது, அதை அழகாக மடித்து விசிறி போல் கட்டித் தலையில் அணிந்து கொள்வார்கள். இவ்வகையான தலைப்பாகை இவர்களில் ஒரு சிலரிடம் மட்டுமே இருந்தது. இத் தலைப்பாகை கட்டும் சீலை அதிகமாக சிகப்பு நிறத்தில் சற்றுக் கடினமான சீலையிலேயே அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக மடிப்புக்கள் அமையக் கூடிய விதத்தில் இச்சீலை இருக்கும்.

## தொப்பிகள்

இவர்கள் எப்பொழுதும் தலையில் தொப்பி அணிந்திருப்பார்கள். இம்மக்கள் தொப்பி அணிவதைக் கட்டாயம் என்று கடைப்பிடித்து ஒழுகினார்கள். தொப்பி இல்லாமல் தொழுவதும், பள்ளிக்கு, கந்தூரி, மவ்லூத், பாத்திஹா போன்ற வைபவங்களுக்கு போவதும் பிழையென்று கருதினார்கள். தொப்பி அணியும் பழக்கம் இவர்களின் சமயக் கட்டுப்பாடுகளில் ஒன்றெனக் கருதியே இதைச் செய்தார்கள். தொப்பி அணிவதன் மூலம் தங்களை முஸ்லிம்கள் என்று காட்டிக் கொள்வது எளிதெனக் கருதினார்கள்.

## சீலைத் தொப்பி

இது வெள்ளை, பச்சை, நீலம், சிகப்பு ஆகிய நிறங்களைக் கொண்ட சீலைகளினால் தைத்து தலையில் அணிவார்கள். சிலர் சீத்தைச் சீலையினாலும் தைத்துப் போட்டுக் கொள்வார்கள். முக்கியமாக வெள்ளை நிறச்சீலையால் தைக்கப்பட்ட சீலைத் தொப்பிகளையே விரும்பி அணிவார்கள். இத்தொப்பிகள் பல வடிவங்களில் தைக்கப்பட்டிருக்கும்.

## நூற்தொப்பி

இத்தொப்பி முறுக்கு நூலைக் கொண்டு பின்னித் தலையில் போட்டுக் கொள்வார்கள். சிலர் நிறநூல்களினாலும் தொப்பிகளைப் பின்னி எடுத்துக் கொள்வார்கள். இத்தொப்பியைப் பின்னல் தொப்பி என்றும் கூறுவார்கள். இத்தொப்பிகளை அதிகமாக பெண்களே பின்னிக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கித் தொப்பி

இத்தொப்பி சிவப்பு நிறமுடையதாக இருக்கும். துருக்கி தேசத்திலிருந்து இத்தொப்பி கீழைத்தேச நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். இம்மக்கள் திருமணத்தின்போது மாப்பிளைக்கு இத்தொப்பியை அணிவார்கள். அக்காலத்தில் திருமண மாப்பிளை இந்திய பளயகாட் சாறன் உடுத்து, சட்டை அணிந்து, தலையில் துருக்கித் தொப்பி போட்டுக் கொள்வார்.

## சம்மான் தொப்பி

இத்தொப்பி இந்தியாவிலிருந்து வணிக நோக்கத்திற்காக இலங்கை வந்த இந்திய முஸ்லிம் வணிகர்களினால், இங்கு அறிமுகப்படுத்தப்பட்டதாகக் கூறுவார்கள். இத்தொப்பி கறுப்பு, நீல நிற வெல்வெற் சீலையினால் தைக்கப்பட்டது. இத்தொப்பியை சம்மான்காரன் தொப்பியென்று அழைப்பார்கள்.

## வார்கள்

இப்பகுதியில் வாழ்ந்த நாட்டுப் புற முஸ்லிம் ஆண்கள் சாறனை உடுத்து அதன்மேல் இடுப்பைச் சுற்றி வார்கள் போடுவார்கள். இவர்கள் உடுக்கும் சாறன் கழன்று விடாமல் இருக்கவும், உடுத்த சாறன் கெட்டியாக இடுப்போடு இருக்கவும் இவ்வார்கள் இவர்களுக்குத் துணை புரிந்தன. அவ்வார்களின் பெயர்கள் பின்வருமாறு. இவ்வார்கள் இந்தியா, சீனா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்தப்பக்கட்டு வார்

இவ்வார் கம்பளிச் சீலையால் தைக்கப்பட்டு இடுப்பைச் சுற்றிக் கட்டுவதற்கு ஏற்றவாறு கொழுக்கிகளும் பொருத்தப்பட்டிருக்கும். இவர்கள், பணம் வேறு முக்கியமான பொருட்களை பத்திரமாக வைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு தோலினால் பக்கற் ஒன்றும் வாரில் வைத்துத் தைக்கப்பட்டிருக்கும். இவ்வார்கள் அதிகமாக கறுத்த கம்பளி சீலையினாலேயே செய்திருப்பார்கள்.

## இரட்டைப் பக்கட்டு வார்

இதுவும் மேற்சொன்ன ஒத்தப்பக்கட்டு வாரைப் போன்று, இரு பக்கட்டுகள் வாரின் வலப்பக்கமும், இடப்பக்கமும் வைத்து தைக்கப்பட்டிருக்கும், இவ்வார் கறுப்பு நிறத்தில் அல்லது பச்சை நிறத்தில் தைக்கப்பட்டிருக்கும்.

## மெரினா வார்

இவ்வார் சற்று வேலைப்பாடுகள் கூடினதாகவும், அழகாகவும் கம்பளிச் சீலையால் தைக்கப்பட்டு, வலது பக்கமும் இடது பக்கமும் இரு பக்கட்டுகளையும் கொண்டதாகவும் இருக்கும். இதை இடுப்புக்கு ஏற்றவாறு கூட்டவும் குறைக்கவும் வசதியாக இரண்டு கம்பிகளாலான கொழுக்கிகளும் அமைத்திருப்பார்கள்.

## பூச்சுவார்

இவ்வார் நிறைய வேலைப்பாடுகள் கொண்டதாக இருக்கும். இதை மாப்பிள்ளை வார் என்றும் சொல்வார்கள். பொதுவாக புதுமாப்பிள்ளைகள் சாறனுக்கு மேலால் இந்த வாரையே போட்டு இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சால்வை

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் ஆண்கள், தோளில் எப்பொழுதும் சால்வை போட்டிருப்பார்கள். சிலர் சால்வை போடாமல் சிறு துவாய்களை தோளில் போட்டுக் கொள்வார்கள். சால்வை நீளமாகவும் விரிவாகவும் இருக்கும். துவாய் சிறிதாகவும், கொட்டானாகவும் இருக்கும். சால்வைகள் பொதுவாக வெள்ளை நிறத்தில் நெய்யப்பட்டிருக்கும். துவாய்கள் பல நிறங்களில் நெய்யப்பட்டிருக்கும். இது இந்தியக் கலாசாரத்திலிருந்து வந்ததாகக் கூறுவார்கள்.

## குட்டாப்பட்டுச் சால்வை

இது பட்டு நூலினால் பின்னப்பட்டிருக்கும். இதில் பல வர்ணங்கள் உள்ளதாக பின்னப்பட்டு உடம்பை மறைக்கக் கூடிய அளவிற்கு பெரிதாகவும் அழகாகவும் இருக்கும். இச்சால்வையை அதிகமாக திருமண மாப்பிளைகளுக்கு அணிவிப்பார்கள்.

## நூற்சால்வை

இது பொதுவாக எல்லோராலும் பாவிக்கப்படும் சால்வையாகும். இச்சால்வை பருத்தி நூலினால் பின்னப்பட்டிருக்கும். இச்சால்வையினால் எல்லோரும் உடம்பை போர்த்திக் கொள்வார்கள். சிலர் கழுத்தைச் சுற்றிப்போடுவார்கள். இன்னும் சிலர் தோளில் நீளமாகப் போட்டுக் கொள்வார்கள்.

## பெண்களின் நகைகள்

பொருளாதார வளம் கொழித்து சிறப்புற்றிருந்த நாட்டுப்புற முஸ்லிம் பெண்களின் பாரம்பரிய நகை நட்டுக்கள் பல வகைப்பட்டவைகளாக இருந்தன. இவைகள் யாவும் வெள்ளியினால் அழகாகவும், பலதரப்பட்ட வடிவங்களிலும் செய்யப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் இப்பகுதிகளிலுள்ள கிராமங்களில் நகை செய்யும் தட்டான்கள் வீடுகளில் கம்மாலை வைத்திருந்து தேவையான நகைகளைச் செய்து கொடுத்தார்கள். சிலர் தங்கத்தினாலும் நகைகள் செய்து அணிந்தார்கள்.

## பெண்கள் கழுத்தில் அணியும் நகைகள்

1. உட்கட்டு அல்லது தாவத்துக்கொடி - - மணிகளாலானது
2. சவுக்கமணி - மணிகளாலானது
3. கீரமணி - மணிகளாலானது
4. மணிக்கோர்வை - மணிகளாலானது
5. சரடு - பதக்கம் உள்ளது
6. கொடிப்பூ அல்லது காசு மாலை - பவுண்களால் சேர்த்து கொடிபோல் செய்யப்பட்டது.
7. வைரமணிக்கோர்வை
8. தாலிக்கொடி

## பெண்கள் காதில் அணியும் நகைகள்

1. காதுப்பூ
2. அல்லுக்குத்து
3. வாளி
4. சிமிக்கி
5. அரசிலைப்பூ அல்லது கொத்து மல்லிப்பூ
6. குடைத்தொங்கு
7. தட்டுவாளி
8. கொப்பு வாளி அல்லது கொச்சுக்காய் வாளி
9. மரவட்டை அல்லது கம்பி அல்லுக்குத்து
10. அரசிலை அல்லுக்குத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் கைகளில் அணியும் நகைகள்

1. பூட்டுக் காப்பு - ஒரு அகலமான காப்பு
2. முகப்பணிக்காப்பு - ஒரு அகலமான காப்பு
3. பூட்டுத்துறப்புக் காப்பு - ஒரு அகலமான காப்பு
4. கொலிசக் காப்பு - பல காப்புகள் இணைந்தது
5. பட்டணத்துக் காப்பு - அகலமான காப்பு
6. சரிக்காப்பு - பல காப்புகள் இணைந்தது
7. கொம்புக்காப்பு - பெரிய காப்பு
8. உருட்டன் காப்பு - பெரிய காப்பு
9. கைக்கட்டு - இது முழங்கை புறத்தில் அணிவது
10. தாவத்துக்கொடி - முழங்கை புறத்தில் அணிவது

## பெண்கள் கைகால் விரல்களில் அணியும் நகைகள்

1. கால்மோதிரம் - கால்விரல்கள் அணிவது
2. கொலிசு - கணுக்காலில் அணிவது
3. தண்டை - கணுக்காலில் அணிவது
4. கால்காப்பு - சிலம்பு வடிவானது
5. கறணை - சங்கிலி வடிவானது
6. அரும்பு மோதிரம் - மோதிரத்தில் அரும்பு வைத்து செய்யப்பட்டது
7. கை மோதிரம் - கை விரல்களில் அணிவது
8. அடுக்கு மோதிரம் - பல மோதிரம் ஒன்றாகச் சேர்ந்தது.

மோதிரங்களை ஆண்களும் தங்களுடைய விரல்களில் கல் வைத்துக் கட்டியும் போடுவார்கள். இதைக் கல் மோதிரம் என்று சொல்வார்கள்.

நாட்டுப்புற முஸ்லிம் பெண்கள் தங்கள் கொண்டைகளைச் சீவி முடித்து அதில் அழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டைக் குத்திகளை கொண்டை கலையாமல் குத்துவார்கள் இவைகள் பின்வருமாறு;

**1. கொண்டைக் குத்தி :**

இது ஊசி வடிவில், மேலுக்கு அகலமான பாதம் கொண்டதாக இருக்கும்.

**2. கொண்டைப் பூ:**

மேலுக்கு அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்டு, கீழுக்கு நீண்ட ஊசி வடிவில் அமைந்திருக்கும். இதைக் கொண்டையில் குத்தினால், அது அழகான பூ வொன்று குத்தியதைப் போல் காட்சியளிக்கும்.

**3. கொண்டை மாலை:**

இது எட்டடுக்குள்ள பூ போல் இருக்கும். மேலுக்கு ஒவ்வொரு பூவும் சங்கிலியால் இணைக்கப்பட்டிருக்கும். இதைக் கொண்டையில் குத்தினால் அது பல பூக்கள் ஒன்றாகச் சேர்ந்திருப்பது போல் காட்சியளிக்கும்.

**4. திருகு பூ:** கொண்டையில் அணிவார்கள்

**5. மாலைக் கொண்டைக்குத்தி :**

சங்கிலி வடிவில் உள்ளது.

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் குழந்தைகளுக்கும் பல வகைப்பட்ட நகைகளைச் செய்து போட்டார்கள். இதில் பெண் பிள்ளைகளுக்கு வேறு நகைகளும் ஆண்பிள்ளை-களுக்கு வேறு நகையும் செய்து போட்டு அழகு பார்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்பிள்ளைகளுக்குரிய நகைகள்

### 1. அரைமூடி சலங்கை:

இந்நகையை நடந்து திரியிம் பெண் பிள்ளைகளின் இடுப்பில் கட்டுவார்கள். இந்நகை அரணாற் கொடியில், பெண் பிள்ளையின் பெண்மையை மறைக்கக்கூடிய அரச இலை வடிவிலுள்ள வெள்ளித்-தகட்டுடன் சில சலங்கைகளும் இதில் சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கும். அரச இலை வடிவிலுள்ள வெள்ளித்தகட்டில் அழகான அரும்பு வேலைகள் செய்திருப்பார்கள். ஓடியாடித் திரியிம் பெண் பிள்ளைகள் இந்நகையை போட்டிருப்பார்கள். இப்பிள்ளைகள் ஓடி வரும்போடு இந்நகையில் இணைந்திருக்கும் சலங்கை குலுங்கி ஓசையெழுப்பி வரும். உண்மையில் பிள்ளைகளின் பெண்மையை மறைக்கும் நோக்கத்திற்காக வேண்டியே இந்நகையைச் செய்து போட்டார்கள்.

### தம்பித் துணையன்

குழந்தைப்பருவத்தில் உள்ள ஆண் பிள்ளைகள் ஓடியாடித் திரியும் பருவத்தில் இந்நகையைச் செய்து போடுவார்கள். பிள்ளையின் ஆண் உடம்பு போன்ற உருவத்தில் வெள்ளியினால் உருவாக்கப்பட்ட இரண்டு அங்குல நீளமான தம்பித்துணையோடு சில அரக்கூடு, மாங்காய் வடிவான வெள்ளிக் கட்டிகளும் இந்நகையில் சேர்ந்திருக்கும்.

### காறை

இந்நகையை ஆண் பிள்ளைகளுக்கு செய்து போடுவார்கள். ஆண் பிள்ளைகளின் கழுத்தை வளைத்து இந்நகையைப் போட்டிருப்பார்கள். இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகையில் சிறுபதக்கமும் செய்து போட்டிருப்பார்கள். இந்நகை கிரேக்க. ரோம நாகரீகத்தின் தாக்கத்தினால் வந்ததாகக் கூறப்படுகிறது.

## சங்கிலி

வெள்ளியினால் இதைச் செய்து, ஆண் பெண் பிள்ளைகளுக்குப் போடுவார்கள். காலப்போக்கில் வயது வந்தவர்களும் இந்நகையைப் போட்டார்கள்.

கிழக்கிலங்கையில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் குடிமனைகளில் மண்பாத்திரங்களையும் வெண் கலத்தினால் செய்த பாத்திரங்களையுமே உணவு சமைப்பதற்கும் மற்ற வேலைகளுக்கும் உபயோகித்து வந்தார்கள். வீடுகளிலும், சேனைகளிலும் சோறு கறி சமைப்பதற்கும் மற்றும் வேலைகளுக்கும் களிமண்ணினால் செய்த சட்டி பானைகளையே உபயோகித்தார்கள்.

## மண் பாத்திரங்கள்

1. சட்டி - கறி சமைக்கும் பாத்திரம்
2. பானை - சோறு சமைக்கும் பாத்திரம்
3. குரச்சி - மரக்கறி வெட்டி அல்லது மீன் கழுவும் பாத்திரம்
4. முடாப்பானை - பெரிய பானை
5. அரிக்கிமிலாய் - அரிசி அரிக்கும் பாத்திரம்
6. உலைமூடி - கறிச்சட்டி சோற்றுப்பானையை மூடும் மூடி
7. உறட்டி ஓடு - மாவினால் உறட்டி சுடும் மண்ஒடு
8. குடம் - தண்ணீர் நிரப்பி வைக்கும் பாத்திரம்
9. பால்முட்டி - எருமைப்பால் கறந்து வைக்கும் பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்கலப் பொருட்கள்

1. வட்டா - வெற்றிலை பாக்கு வைத்துப் பரிமாறும் பாத்திரம்
2. அரசிலை வட்டா - வீட்டில் வெற்றிலை பாக்கு வைத்துப் பரிமாறும் பாத்திரம்
3. படிக்கம் - வெற்றிலை சப்பித் துப்புவதற்கு பாவிப்பார்கள்
4. சேவரக்கால் - திருமண நாளில் மணவறையில் மாப்பிளை பெண் இருப்பதற்கு பாவிப்பார்கள்
5. குத்துவிளக்கு - தேங்காய் எண்ணெயில் பற்றும் பெரிய விளக்கு
6. தூக்குவிளக்கு - வீட்டு வளையில் தூக்கி வைக்கும் சிறுவிளக்கு
7. செம்பு - தண்ணீர் எடுத்துக் குடிக்கும் பாத்திரம்
8. செம்புக் குடம் - பெரிய குடம்
9. குடுகுடா - வயது வந்தவர்கள் வெற்றிலை பாக்கைப்போட்டு இடிக்கும் உரல்

இம்மக்களின் வாழ்வியல் பற்றிச் சிறப்பாகப் பேசும் சில நாட்டார் பாடல்களைப் பார்க்கலாம். இப்பாடல்கள் மூலம் இவர்கள் அணிந்த உடைகள், நகைநட்டுக்கள், வெண்கலப் பாத்திரங்கள் என்பன பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

1. வட்டாப் படிக்கம்
வளச்சிரிந்து என்ன செய்ய
எங்கிட அலங்காரமான வட்டா - இப்ப
அடகிரிக்காம் சீமையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பூசின செம்பே என்ர
புழுதிபடா வெங்கிலமே
ஆசைக்கிளியே மச்சி - ஒன்ன
ஆருவெச்சி ஆளுவாரோ?

3. வெள்ள வெலுட்டும்
விரல் நெறய மோதிரமும்
எங்கும் பொழுபொழுப்பு
எங்கு மச்சான் வாற செப்பம்

4. பந்தல் விளக்க
பனியடிச்சி நூத்ததுபோல்
என்ர மனச மச்சான் - நீ
ஏன் கசக்கிப் போட்டாய்கா?

5. காப்பெங்கே மச்சியுந்தன்
காதிலிடும் தோடுமெங்கே
மால பதங்கமெங்கே - உன்ர
மான் வெரட்டிப் பார்வயெங்கே?

6. மருதமெண்டி போட - எங்கிட
மயில் வருமாம் எண்டு செல்லி
விளக்கு கொழுத்தி நாங்க - இஞ்ச
விடியுமட்டம் காத்திருந்தம்

7. சலங்கை குலுங்கிவர
தங்கமகள் ஓடி வந்து
கேத்துத் திறக்க - எனக்கொரு
கிருப செய்ரா வல்லவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வட்டாப் படிக்கம்
வளச்சிரிந்து என்ன செய்ய ஒன்ட
செம்பக் கிளி வாயாலே - நீ
சிரிச்சிரிந்தாப் போதாதோ...

9. அரிக்கிமிலாயில்
அரிசள்ளிப் போடயில
சகிக்கிதில்ல என் மனசி - என்ர
தங்கமச்சான் வாறதெப்போ?

10. பச்சவடச் சிறுவாலும்
படம்போட்ட வெள்ளியனும்
அச்சுட்டாப் போலிக்கு - என்ர
அழகு தொர மச்சானுக்கு

11. குத்து விளக்கெரிய
குமரன் குறுஆன் ஓத
பாலன் விளயாட எனக்கொரு
பாக்கியம்தா ஆண்டவனே

12. கலிமா விரலும் ஒங்கிட
கல்பதித்த மோதிரமும்
நித்திரக் கண்ணிலயிம் - என்ர
நெஞ்சில் வந்து வாட்டுதுகா...

## திருமணமும் சம்பிரதாயங்களும்

கிழக்குப் பிராந்திய நாட்டுப் புற முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் தனித்துவம் பெற்று விளங்குவதைக் காணலாம். புவியல் அடிப்படையில் இவர்களின் சில திருமண சம்பிரதாயங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களின் சம்பிரதாயங்களோடு ஒன்றிணைந்து இருந்தாலும் இவர்களின் மதத்தின் செல்வாக்கு, இவர்களிடையே மேலோங்கி நிற்பதைக் காணலாம். கலியாண வைபவங்களிற் கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாடு-களிலிருந்து இவ்வுண்மையை அறியலாம். கிராமத்து பெண்களிடையே எவ்வளவு தூரம் மதம் ஆதிக்கம் பெற்றிருந்தன என்பதை அவர்களிடையே இருந்த சடங்குகள், குடிமுறை என்பன புடம் போட்டுக் காட்டுகின்றன.

அக்காலத்தில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்களிடையே சமயப் பெரியார்களின் செல்வாக்கு மிகக் கூடுதலாக மேலோங்கி இருந்தன. இவர்களே மக்களிடையே மத அறிவைப் புகட்டினர். மதச் சடங்குகளையும் முன்னின்று நடாத்தினார்கள். இதுபோல் இவர்களிடையே நடைபெறும் விவாக விடயத்திலும், இவர்கள் மத்தியிலிருந்த ஆலிம்கள், மௌலவிமார்கள் முக்கிய பங்கினைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர். திருமணச் சடங்குகளை நடாத்தி வைத்தல், இவர்கள் வீடுகளில் நடைபெறும் மௌலூத், பாத்திஹா, கந்தூரி போன்ற நிகழ்வுகளுக்குத் தலைமை தங்கி கிரிகைகளை நிறைவேற்றுதல் போன்றவைகளையும் செய்து வந்தனர். சொல்லப் போனால் நாட்டுப்புற முஸ்லிம்களின் சகல விடயங்களிலும் இவர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

## திருமணப் பேச்சும் நாட் குறித்தலும்

இவர்கள் மத்தியில் திருமணப் பேச்சு முக்கிய இடம் பெற்றிருந்தது. இவர்களின் பிள்ளைகளுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் முடிப்பதற்கு முன் இவர்களின் சொந்தங்கள், மதப் பெரியார்கள், ஊர்ப் பெரியார்கள், பள்ளிவாசல் மோதின் லெவ்வைகளை அழைத்துத் திருமணம் பற்றிப் பேசுவார்கள். இப்பேச்சுவார்த்தைகளின் போது பெண் வீட்டார்களும், மாப்பிள்ளை வீட்டார்களும் அவர்களின் நெருங்கிய சொந்தங்களோடு மாப்பிள்ளை வீட்டாரின் வீட்டில் கூடி இருப்பார்கள். இவர்களிடையே திருமணப் பேச்சு முடிந்ததும், திருமணத்திற்குரிய ஒழுங்குகளைச் செய்வார்கள், பேச்சு முடிவுற்று அர்த்தமானதும் பெண் வீட்டார் மாப்பிளை வீட்டாருக்கு செப்பு அனுப்புவார்கள்.

## செப்பு அனுப்புதல்

அக்காலத்தில் இவர்கள் மத்தியில் பணியாரம், வளையல், சோவி, சீனிமா, புல்லாடை போன்ற பலகாரங்களே பாவனையில் இருந்தன. இப்பலகாரங்களை பெண் வீட்டார் சுட்டு அவைகளை பனை ஓலைப் பெட்டிகளில் வைத்து, வெள்ளைச் சீலையால் கட்டி எடுத்துக் கொண்டு மாப்பிளை வீட்டிற்கு போவார்கள். இதையே செப்புக் கொண்டு போவது என்று கூறுவார்கள். பெண் வீட்டார் தங்கள் உறவினர்களோடு இப்பலகாரப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போய் மாப்பிளை வீட்டாரிடம் கொடுத்து விட்டு, திருமணத்தை உறுதியாக்கிவிட்டு வருவார்கள். இதன் பின்னர் மாப்பிளை வீட்டார் பெண் வீட்டார் கொண்டு போன பலகாரப் பெட்டிகளில் பலகாரம் பெண்ணுக்கு உடுபிடவைகள் மற்றும் சாமான்களும் வாங்கி வைத்துக் கொண்டு தங்கள் உறவினர்களோடு போய் பெண் வீட்டில் கொடுப்பார்கள். இதன் பின்னர் இரு பகுதியினரும், ஆலீம், லெவ்வை, ஊர்பெரியார்கள் எல்லோருடைய சம்மதத்தோடும் திருமணத்தைப் பேசி முடிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிளை கூட்டிப்போதல்

மாப்பிள்ளை வீட்டில் சமயச் சடங்குகள் எல்லாம் முடிந்து, ஒழுங்காக காவின் முடிந்த பின்னர், எல்லோரும் தாலி கட்டுவதற்காக மாப்பிள்ளையை பெண் வீட்டிற்கு ஊர்வலமாகக் கூட்டிக் கொண்டு போவார்கள். பெரும்பாலும் வழக்கமாக இரவு நேரங்களிலேயே மாப்பிளையைக் கூட்டிக் கொண்டு போவார்கள். அக்காலத்தில் திருமண வீடுகளில் பறையன் சேவிக்க எடுத்திருப்பார்கள். பறையன் முன்னுக்கு அடித்து செல்ல மருதோண்றி, எண்ணெய், பரசம் போன்ற திருமணப் பொருட்களை இரு பகுதியினரும் எடுத்து செல்வார்கள். மாப்பிளை வீட்டிற்கும், பெண் வீட்டிற்கு போகும் போதும் பெண்களுக்கு முன்னே பறையன் சேவித்துக் கொண்டு செல்வது வழக்கமாக இருந்து வந்தது.

திருமண மாப்பிளையை பெண் வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போகும்போது, முன்னுக்கு பறையன் சேவித்துக் கொண்டு போவான், இதன் பின்னால் ஆலிம்கள் மரைக்கார்மார், ஊர்ப்பெரியார்கள், உறவினர்கள் போவார்கள். இவர்கள் எல்லோரும் சுபுஹான மவ்லூத் ஓதிக் கொண்டு போவது வழக்கம். இந்த ஊர்வலத்தின் நடுவில் புதுமாப்பிளை கம்பீரமாக நடந்து வருவார். இவருக்குப் பக்கத்தில் பெண்ணின் சகோதரன் மாப்பிளைக்கு குடை பிடித்துக் கொண்டு வாருவான். இவன் பிடிக்கும் இக்குடையின் மேல் வெள்ளைச்சீலை போடப்பட்டிருக்கும்.

மாப்பிளையோடு மாப்பிளையின் உம்மா, சகோதரிகளுடன், மாமிமார், சாச்சி எல்லோரும் பரசப் பெட்டியுடன் ஊர்வலத்தின் முன்னுக்கு போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் போகும்போது, குரவையொலி எழுப்பிக் கொண்டு போவார்கள். இப் பரசப் பெட்டியை இடையில் பெண் வீட்டிலிருந்து பெண்கள் வந்து, கைமாற்றிக் கொள்வது வழக்கம். இறுதியில் மாப்பிளையின் ஊர்வலம் பெண்வீட்டை அடைந்ததும் அங்கே போடப்பட்டிருக்கும் பந்தலில் வைத்து, மாப்பிளையை மறித்து அண்ணாவி அல்லது புலவர் ஒருவர் மாப்பிள்ளை வாழ்த்துப் பா பாடுவார். அக்காலத்தில் மாப்பிளை வீட்டிலும் பெண் வீட்டிலும், ஒழுகாப்புரை கட்டியிருப்பார்கள். இத்தோடு வளவில் பந்தல் போட்டிருப்பார்கள். இப்பந்தலை மேலுக்கு அலங்காரமான பிடவைகளைக் கட்டி தென்னங்-குருத்தோலைகளினால் சோடித்திருப்பார்கள். இப்பந்தல்களுக்கு வண்ணானே பிடவை கட்டுவது வழக்கம். இப்பொழுது, இம்மக்களால் பாடப்பட்ட மாப்பிள்ளை வாழ்த்துப் பாடல்களைப் பார்ப்போம்.

## மாப்பிள்ளை வாழ்த்து

(1) சீருற்ற சிகராசி
சிங்கமென வருகின்ற
சீர்பெற்ற மகாராஜ போஜர்க்கு நிகரான
செல்வமாம் மகாராஜா நீயே...!
பார்மிக்க பேர்மிக்க நீர்பெற்ற யோகமது
பகரபெரிய ராஜயோக...
பங்கயர்க் கிளிகளோடு
மங்கை மடமாதரும்
பலபேரும் உன்னைக் கண்டு மகிழவே!
ஏறிட்ட கலியாண கண்ணா - உலகில்
எளியோர்க்கீந்து உலகில்
என்றும் பேர் பட்டமும் பெற்றிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கையாய் தொப்பியும், சட்டையும் தரவேண்டும்
பெரியோர்கள் வாழ்த்தும் குணசீலனே!
மகிழ்வோடு வாழ்த்தும்
புலவனை ஆதரித்து வாழ்வில்
புகழடைய வேண்டும் கனதி பிரதாபனே...
இந்த நாடும் வயலும் மலையும்
மரகத மணிகளும் மாலையும்
நல்ல மரகத மாலையும் பெற்று
கச்சணி முலையாள், களித்திடும் சிங்கமே!
களிப்போடு வா தங்கமே.
உற்றார்க்கு உதவிடும் உதுமாலெவ்வை பெற்ற
அள்ளிக் கொடுக்கின்ற அண்ணலே!
அழகனே! அன்பனே! வா...
அடிமுடி தாளம், வெடில்கள்
கிடுகிடுவெனப் பறிய
கிடுகிடுவெனப் பறிய
படவாணம், குடவாணம், கம்பர் நிலவாணம் சுடவே
நல்ல நிலவாணம், எலிவாணம் சுடவே
கட கட நவமணி சொரிய
கலியாணம் நிறைவேறவே - நல்ல
கலியாணம் நிறைவேறவே
ஆசன பொற்கொடி மீதிலிருக்கும்
அருள் புகழ் நாயகமே - எங்கள்
அருள் புகழ் நாயகமே - பெரும்
குறைசிக் குலக் கொழுந்தே...! பெரும்
கொரவைகள் ஒலித்திட கலியாணம் நடந்தேற
வாழ்த்திட வாருங்கள் வள்ளலரே....
வந்து பாருங்கள் நைனாரே....
தங்கமும் வெள்ளியும்
தட்டுகளில் வெச்சி
தந்திடு நைனாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கையைச் செய்திடு நைனாரே
பங்கயர் மாதரை பரிசாகத் தந்திட்டம்
பாக்கியம் பெற்று வாழ்வாய்!
சிங்கமே! உனக்கினு
சீரான வாழ்வுதான்...
நேராக எழுந்து நட - உலகில்
நிறைவான வாழ்வு பெறவே...

(2.) வண்டரளைந்திட சங்கு விளைந்திட
வடிவான வலம் புரியோ..
இந்த வண்ணக் களரியில்
தம்பட்ட மேளம், சல்லாரி குரவைகள்
தடபுடலாய் ஒலிக்க
எங்கள் மாப்பிளைச் சிங்கமே, மன்னவரே!
நீங்கள் மகிழ்வோடு வந்தமருங்கள்...
ஆலிமு, லெவ்வை, மரைக்காமார், மோதின்
அன்போடு புடைசூழ வந்து
இந்தப் பந்தலில் உன்னை
பாராட்டி வாழ்த்திடவே...
சந்தன அத்தர்
ஜவாதுகள் மணத்திட
பங்கயக் கன்னியை
பாரில் அணைத்திடுவாய்
பல இன்பங்கள் பெற்றிடுவாய்!
கூட்டம் குலவையும்
ஆலாத்தி பெண்களும்
கட்டியம் பாடி வர - மன்னா
கட்டியம் பாடி வர...
படுமுடுத்தாளம் கிடுகிடுவெனவே
நல்ல பார வெடிப்பறிய...!
நல்ல பார வெடிப்பறிய..!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பரிவாணம், நிலவாணம்
நல்ல குடவாணம் சுடவே!
நல்ல குடவாணம் சுடவே!!
நடந்து போ ராசாவே
நல்ல புகழோடு வாழவே!
நல்ல புகழோடு வாழவே!!

## சுன்னத்துக் கலியாணம் (கத்னா)

பொதுவாக முஸ்லிம்கள் தங்களுடைய ஆண் பிள்ளைகளுக்கு சுன்னத்து செய்வதை ஒரு மார்க்கக் கடமையாகக் கடைப்பிடித்து ஒழுகி வந்தார்கள். இவ்வழக்கம் கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் வாழ்வியலில் ஒரு சிறப்பு நிகழ்வாக நடைபெற்று வந்தன. இம்மக்களின் இல்லங்களில் சுமார் ஏழு நாட்கள் தொடர்ந்து இந்நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வு முன்பிருந்தே இந்நிகழ்வுக்குரிய ஒழுங்குகள் நடைபெறும். சுன்னத்து வைக்கப்போகும் சிறுவனின் வீட்டில் உற்றார் உறவினர்கள் இனபந்துக்கள் எல்லோரும் கூடி நெல்லுக்குற்றுதல், வேலிகள் அடைத்தல், வீடுகள் மெழுகுதல், ஒழுகாப்புரை கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்வார்கள். சொல்லப் போனால் ஒரு மாதம் இவ்வீடு பெரும் கலகலப்பாகவே இருக்கும்.

சுன்னத்து வைக்கும் மாப்பிள்ளைக்கு புது உடுப்புகள் அணிவித்து, பூணாரங்களும் தொப்பியும் மாலையும் போட்டு வண்டில்களில் ஏற்றி ஊர் சுற்றி வருவார்கள். இப்படி இவர்கள் ஊர்சுற்றி வரும்போது, இங்குள்ள பள்ளிவாசல்களில் மாப்பிள்ளையை இறக்கி துவாப் பிரார்த்தனைகள் செய்து பள்ளி உண்டியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கையும் போடுவார்கள்.

ஊர் சுற்றி வந்ததும் மாப்பிள்ளைக்கு சுன்னத்து செய்வார்கள். இச் சுன்னத்தை கைதேர்ந்த ஒஸ்தாமார்கள் செய்வார்கள். சுன்னத்து செய்யும் முன் மாப்பிள்ளைக்கு பெண்கள் ஆலாத்தி எடுத்து சிறப்பிப்பார்கள். குரவையெல்லாம் விட்டுக் குதுகலிப்பார்கள்.

சுன்னத்து வீட்டில் ஏழு நாட்களுக்குத் தொடர்ந்து பாட்டுக் கச்சேரிகள் நடைபெறும். வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்து பாட்டுக் கச்சேரி செய்வார்கள். பாவாமார்கள் றபான் கொட்டி பதமும் பாட்டும் படிப்பார்கள். இவை எல்லாம் சுன்னத்து வீட்டில் கட்டப்பட்டிருக்கும் ஒழுகாப்புரையின் உள்ளேயே நடக்கும். பாட்டுக் கச்சேரிகளும், கவிபாடுதல், பாவாக்கள் றபான் கொட்டிப் பாடுதல் எல்லாம் இரவு நேரங்களிலே நடைபெறும். ஏழு நாட்களுக்கு உற்றார் உறவினர் எல்லாருக்கும் இங்கு சாப்பாடு குறைவில்லாமல் கிடைக்கும்.

## பட்டக் கல்யாணம்

நாட்டுப்புற முஸ்லிம்களிடையே பட்டக் கல்யாணம் பண்ணும் நிகழ்வு இவர்களின் கலாசாரத்தில் பின்னிப் பிணைந்திருந்தது. ஒரு குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளை ஒருவர் குர்ஆன் மத்ரசாவில் ஓதிப் படித்து ஆலிமாகப் பட்டம் பெற்று வந்தால் அவருக்கு கிராமத்திலுள்ளவர்கள் சேர்ந்து அவரைக் கௌரவித்து அவருக்கு பட்டக் கலியாணம் பண்ணிச் சிறப்பிப்பார்கள். பட்டக் கலியாணம் பண்ணும் வீட்டில், அழகாகப் பந்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு, அதைத் தென்னங் குருத்தோலைகளால் சோடித்திருப்பார்கள். பந்தலின் மேலுக்கு பிடவை கட்டி அழகுபடுத்தியிருப்பார்கள். மேலும் யாரும் கிராமத்தில் கல்லூடுகள் கட்டினாலும் கட்டிய வீட்டுக்காரர்களுக்கு அவர்களின் உறவினர்கள் சேர்ந்து பட்டக் கலியாணம் பண்ணிக் கௌரவிப்பார்கள். பட்டக் கலியாணத்தில் பட்டக்கலியாணம் யாருக்குப் பண்ணுகின்றார்களோ அவருக்கு காசி, சாறன், சால்வை போன்ற பொருட்களை அவர்களின் உறவினர்கள் அன்பளிப்புச் செய்து சங்கை செய்வது வழக்கம்.

இன்னும், கிராமங்களில் நோன்பு காலங்களில் இரவில் திறாவியாத் தொழுவிக்கும் மௌலவிமார்களுக்கும், பகல் நேரங்களில் ஹதிதிக் களரியில் மார்க்கப் பிரசாரங்கள் சொல்லும் ஆலிம்களுக்கும் முப்பது நோன்பும் முடிந்தவுடன் பட்டக் கலியாணம் பண்ணி அன்பளிப்புகள் செய்வார்கள்.

## பாரம்பரிய நிகழ்வுகள்

### தலைப்பாத்திஹா ஓதல்

நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் குடும்பத்திலுள்ள பெண்களில் யாராவது ஒருவர் கருவுற்று, அப்பெண் பிள்ளைப் பெறுகின்ற காலம் வந்ததும் பாத்திமா நாயகியின் பேரால் தலைப்பாத்திஹா ஓதுவார்கள். கருவுற்ற பெண்ணின் பிள்ளைப் பேறு சுகமாகவும், பிரச்சனைகள் இன்றியும் நிறைவேறுவதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வதையே தலைப்பாத்திஹா ஓதுதல் என்பார்கள். இப்பகுதியில் வாழ்ந்த மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் சாகிப் என்ற பெரியாரால் இத்தலைபாத்திஹா ஆக்கப்பட்டது. இதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி சிரத்தையுடன் ஓதுவதால் மகப் பேற்றினை எதிர்பார்த்து இருக்கும் பெண்ணுக்கு சுகப்பிரசவம் இடம்பெறுமென்று இவர்கள் கூடிய நம்பிக்கை வைத்திருந்தனர். கருவுற்ற பெண்ணின் பெற்றோர்கள் தலைப்பாத்திஹா ஓதும்போது உற்றார் உறவினர்களை-யெல்லாம் கூப்பிட்டு, விருந்து உபசாரங்கள் செய்து, இவ்வைபவத்தை ஒரு விழாப் போன்றே நடாத்துவார்கள்.

## சாணைக்கூறை போடுதல்

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப் புற முஸ்லிம்கள் மத்தியில் சாணக்கூறை போடும் வழக்கமும் இருந்தது. இப்பழக்கம் இவர்களின் கலாசாரத்தின் ஒரு பகுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. ஒரு தாய்க்குப் பிறந்த பிள்ளைகளான சகோதர சகோதரிகளுக்கிடையிலேயே இச்சாணக்கூறை போடும் வழக்கம் அதிகமாக இருந்ததாக கூறப்படுகிறது. ஒரு குடும்பத்தில் சகோதரன் ஒருவனுக்கு பெண் குழந்தையொன்று பிறந்தால் அவனின் சகோதரி போய், அவளின் மகனுக்கு அக்குழந்தையை, மணமகளாக உற்றார் உறவினர்களின் முன்னிலையில் நிச்சயம் செய்வதையே சாணைக்கூறை போடுதல் எனப்படும். இதைப்போன்றே ஒரு குடும்பத்தில் சகோதரிக்கு பெண் குழந்தையொன்று பிறந்தால், அப்பெண்ணின் சகோதரனின் மனைவி போய் தன் மகனுக்கு அப்பிள்ளையை மணமகளாக எல்லோர் மத்தியிலும் நிச்சயம் செய்வாள். இப்படி இவர்கள் நிச்சயம் செய்யும் போது பிறந்த குழந்தைக்கு பட்டுச் சீலையால் சட்டைகள் தைத்துக் கொண்டு போடுவது வழக்கமாக இருந்து வந்தது. இப்படிச் சாணைக்கூறை போட்ட பிள்ளைகள் வளர்ந்து பருவமடைந்த பின்னர், இவர்களுக்கு நிச்சயிக்கப்பட்டவாறு திருமணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி வைப்பார்கள். இக்காலத்தில் பொதுவாக சொந்தங்களுக்குள்ளேயே திருமணங்கள் நடந்தன. உறவுகள் அற்றுப் போய்விடக் கூடாது என்பதற்காக குடும்பத்திலுள்ள சகோதரியின் மகளுக்கும் சகோதரனின் மகனுக்கும் இடையில் திருமணங்கள் நடந்தன. இதைப்போன்று சகோதரனின் மகனுக்கும் சகோதரியின் மகளுக்கும் இடையில் திருமணங்கள் நடந்தன. இவர்கள் மத்தியில் மச்சான் மச்சி உறவு புனிதமாகப் பேணப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கத்தம் ஓதுதல்

முக்கியமாக இப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களில் யாராவது ஒருவர் மரணித்து விட்டால் இறந்தவரின் குடும்பம் அவருக்கு இறைவனிடம் நன்மை வேண்டிக் கத்தம் ஓதுவார்கள். இப்பழக்கம் பரம்பரை பரம்பரையாக இவர்களிடையே இருந்து வந்தது. ஒருவர் மரணித்து மூன்று நாட்கள் சென்றால் மூன்றாம் கத்தமும், ஏழு நாட்கள் சென்றால் ஏழாம் கத்தமும் நாற்பது நாட்கள் சென்றால் நாற்பதாம் கத்தமும், ஒருவருடம் சென்றால் வருடக் கத்தமும் ஓதுவார்கள். மரணித்தவரின் குடும்பத்தினர் சோறு கறியெல்லாம் சமைத்து ஊரில் உள்ள பள்ளிவாசல்களில் உள்ள லெவ்வை, மோதீன், ஆலிம்களை அழைத்து வந்து சிறப்பாக கத்தம் ஓதுவார்கள். இக்கத்தத்திற்கு உற்றார், உறவினர், அயலவர்கள் எல்லோரையும் அழைத்தே செய்வார்கள். மேலும் பணம் படைத்தவர்களில் யாராவது ஒருவர் மரணித்தால் அவருக்கு இறைவனிடம் நன்மை வேண்டி பெரிய கத்தம் ஓதுவார்கள். இக்கத்தம் மரணித்தவரின் வீட்டில் வெள்ளை கட்டி ஊரில் உள்ள ஆலிம்களை அழைத்து திருக்குர்ஆனை முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுவார்கள். பின்னர் ஓதியவர்களுக்கு விருந்து கொடுத்து அன்பளிப்பும் செய்வார்கள்.

இத்தோடு அவுலியாக்கள் பேரில் நேர்ச்சை வைத்தும் கத்தம் ஓதுவார்கள். இவர்கள் அலியார்ர கத்தம், முகைதீன் ஆண்டவர்ர கத்தம், மீராசாகிபு ஆண்டவர்ர கத்தம் என பலதரப்பட்ட கத்தங்களையும் ஓதி வந்தனர். அக்காலத்தில் இவர்களிடையே வாழ்ந்து வந்த மதப் பெரியார்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இம்மக்களைத் தங்கள் ஆளுமைக்கு உட்படுத்தி, இப்படிப்பட்ட செய்கைகளை செய்வதற்கு தூண்டி வந்துள்ளமையே காரணமெனலாம்.

இன்னும், ஒருவர் மரணித்து அவரை அடக்கம் செய்த பின்னர், அன்று இரவு அவரின் வீட்டில் இருட்டறைக் கத்தம் ஓதுவார்கள். இதற்கு அரிசிமாவினால் றொட்டி சுட்டு, வாழைப்பழமும் வைத்து, மரணித்தவரை அடக்கம் செய்த மோதின் லெவ்வை இருவரையும் அழைத்து இக்கத்தத்தை ஓதுவார்கள். இவை யாவும் அறியாமையின் பிரதி பிம்பங்களாக இம்மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கந்தூரி**

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்களிடையே கந்தூரி கொடுத்தல் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள பள்ளிவாசல்களில் வருடா வருடம், சோறு, கறி சமைத்து, ஊரிலுள்ள மக்களுக்கு கந்தூரி கொடுக்கப்படும். கிராமங்களில் உள்ள பள்ளிகளை நிர்வகித்து வரும் மரைக்காயர்மார்களும், ஊரிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார்கள், போடிமார்கள் எல்லோரும் சேர்ந்து ஊர் மக்களிடமிருந்து அரிசி, தேங்காய், காசி அறவிட்டு இக் கந்தூரியைக் கொடுப்பார்கள். இக்கந்தூரி கொடுக்கும் தினம் ஊர் மக்களால் பெரும் விழாவாகவே கொண்டாடப்படும். கந்தூரி கொடுக்கும் பள்ளிவாசலைச் சுற்றி சிறு சிறு மிட்டாய்க் கடைகள், காப்புச் சீப்பு கண்ணாடி விற்கும் கடைகள், தேனீர்க் கடைகள் நிறைந்திருக்கும், மக்கள் இரவு நேரங்களில் வந்து, இக்கடைகளில் மிட்டாய் பிற சாமான்களையும் வாங்கிக் கொண்டு போவார்கள். பகலில் கந்தூரி கொடுத்து முடிந்தவுடன் சுமார் இரவு ஒன்பது மணியளவில் வாண வேடிக்கைகள் தொடங்கி இரவு விடியவிடிய நடக்கும். பொதுவாக இக்கந்தூரிகள் முகைதீன் ஆண்டவர் பேரிலும், மற்றும் பெருமானார் பெயரிலுமே நடைபெறும்.

இப்பொழுது, கந்தூரி பற்றிய நாட்டுப்புற பாடலொன்றைப் பார்ப்போம்.

சீர் தங்கும் சாய்ந்தமருதூரிலே
செல்வம் பெருகும் தெற்குத் தெருவிலே
நேர் தங்கும் கந்தூரி நடாத்தியே
செய்கை நிகழ்ந்துவன் கேட்டருள்வீர்களே.
காரார் குடைக் குலத்தின் செல்வந்தர்
தம்பி காரியப்பரின் புதல்வனார்
மீராலெவ்வைப் போடி வன்னிமை
இந்த மேதினில் பிறந்தாளும் வேந்தனே!
காரண நெறிமுறை நடாத்தும் கோன்
பூரண மதிமுக வாகனார்
எங்கள் பூபதி வன்னிமை யோகனார்
வட்டவிதானை உதுமாவெல்வை
வட்டவிதானை மீராவெவ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டதிசை யெங்கும் போற்றும்
இப்றாலெவ்வை மோந்திர வேந்தனும்
மற்றும் தலைமை மரைக்கார் போடிமார்
உள்ளபுகழ் லெவ்வை மோதினும்
மற்றும் ஊரவர்களும் ஒன்று கூடியே
வள்ளல் முகையதீன் பேரிலே
வருடக் கந்தூரி நடாத்திட
விள்ளிலடங்காத வரியுடன்
சாதம் மொத்தமும் ஆக்கியே குவித்தனர்.
ஆடு, மாடு, அத்திரி முயலும்
நல்ல அழகிய மான் மரை சேவலும்
காடை, கவுதாரி இவையெல்லாம்
நல்ல கறி சமைத்தார்கள் பொரித்தார்களே
பாலும் தயிரும் பழவர்க்கமும்
நல்ல பலகார பல வகைகளும்
கோலமுடன் ஏற்றிப் பந்தலில்
வைத்துக் கொடுத்திட பந்தி வைத்தார்களே
மகரதோர பந்தலில் மகிமையுடன் மக்களை
இருத்தியே பகிர்ந்தனர்.
விருந்தை இருந்திருந்தினர்.
நல்ல பதினெட்டு பாக்கியம் சுரக்கவே
ஆகாய வாணம் சென்று ஏறவே
நல்ல சக்கர வாணம் சேரவே
தீவட்டி குரவைகள் அதிரவே
மய்யதீன் ஆண்டவர் கந்தூரி
மங்களமாகவே முடிந்தே.

**ஆக்கம் : தோம்புதோர் புலவர்**
**பாடிக் காட்டியவர்: மர்ஹூம் எம்.ஏ.எம். இப்றாலெவ்வை**
**நன்றி - சாய்ந்தமருது வரலாறு வெளியீடு 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டைக் கந்தூரி

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் அவர்கள் வயல்களில் செய்த வேளாண்மை விளைந்ததும், ஒவ்வொரு கண்டங்களிலும் நிலச் சொந்தக்காரர்களாக உள்ள போடிமார்கள் ஏக்கர் வாரியாக பணம் அரிசி சேர்த்து வயல்களில் உள்ள தென்னங் காலைகளில் பாற்சோறு சமைத்து இப்பகுதிகளில் வாழும் எல்லோரையும் அழைத்து கந்தூரி கொடுப்பார்கள். சில வயற் சொந்தக்காரர்கள் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய வயல்களில் வைக்கப்பட்ட சூடுகள் அடித்து முடியும் கடைசி நாளில் பால்புக்கை ஆக்கி மக்களுக்கு கொடுப்பார்கள்.

## மழைக் கந்தூரி

சில விவசாயிகள் வானம் பார்த்தான் பூமிகளில் மழையை நம்பி வேளாண்மை செய்திருப்பார்கள். இப்படிச் செய்யப்பட்ட வேளாண்மைகள் மழையின்றி, வரட்சியால் அழியும் நிலைக்கு வரும்போது இவர்கள், ஊரில் உள்ள ஆலிம்களை வட்டைக்குள் அழைத்து வந்து, மழை பைத் ஓதி மௌலூதும், சதக்கத்துல்லாவின் குத்பாவும் ஓதுவார்கள். இதன் பின்னர், சோறு, கறி ஆக்கி மக்களுக்கெல்லாம் கந்தூரி கொடுப்பார்கள்.

## பெருநாட் கொண்டாட்டங்கள்

இங்கு வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாள் வைபவங்களை மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வார்கள். இக்காலங்களில் கிராமங்களில் ஊஞ்சல்கள் போட்டு, இரவு நேரங்களில் பொல்லடி, பாட்டுக் கச்சேரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்திக் கொண்டாடுவார்கள். இப்பெருநாட் கொண்டாட்டங்கள் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு நடைபெறும்.

## ஊஞ்சல் வகைகள்

### கிறுக்கு ஊஞ்சல்

ஒரு பெரிய வைரமான மரத்தை மண்ணில் ஆழமாகத் தோண்டி நாட்டுவார்கள். பின்னர் அதன் உச்சியைக் கூராக்கி இக்கூரின் மேல் வைரமான கம்பு ஒன்றில் நடுவில் ஓட்டையிட்டு இரு பக்கங்களுக்கும் சமனாக அக்கம்பை வைத்து இருபக்கங்களிலும் பலகைகளை கயிற்றில் கட்டித் தொங்க விடுவார்கள். இத்தொங்கவிடப்பட்ட பலகைகளில் சமனான பாரமுள்ள இருவர் ஏறி இருக்க, ஒருவர் ஊஞ்சலைக் கைகளால் கிறிக்கி கிறிக்கி ஆட்டிக் கொண்டிருப்பார்.

### பலகை ஊஞ்சல்

திருக்கொண்டை அல்லது வயிரமான இரு தென்னை மரங்களைச் சேர்த்து கப்புக் கால்கள் கட்டப்பட்டு அதன் மேல் உறுதியான வளை போடப்படும். இதன் பின்னர் இவ்வளையில் கயிற்றால் அல்லது சங்கிலியால் ஊஞ்சல் பலகை போடப்படும். இப்பலகை முதிரை மரத்தினால் அழகாக சீவியெடுத்து கயிறு அல்லது சங்கிலி பொருந்தி நிற்கக்கூடியதாக கவ்விகள் வைத்து செய்வார்கள். இந்த ஊஞ்சல் பலகை நிலத்திலிருந்து ஐந்து அடி உயரத்திற்கு இருக்கக்கூடியதாக போடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொட்டில் ஊஞ்சல்

பெரிய தூண்களில் மரத்தால் ஆன சிறகுகள் பொருத்தப்படும். பொருத்தப்பட்ட மரச் சிறகுகளில் இரும்புக் கொழுக்கிகள் அடிக்கப்பட்டு அதில் சாய்மணைக் கதிரைகள் கொழுகப்படும். இரும்பு ஆணிகளால் உறுதியாக கொழுகி விடப்படும். பொருத்தப்பட்ட கதிரைகளில் ஆட்கள் இருப்பார்கள். இதன் பின்னர் சிறகுகளில் கொழுகி விடப்பட்ட கதிரைகள் மேலுக்கும் கீழுக்கும் போய்வரக் கூடியதாக பொறி மூலம் இயக்கப்படும். இதுவே தொட்டில் ஊஞ்சல் எனப்படும்.

## மெத்தை வீடு

பெருநாட் காலங்களில் இப்பகுதியில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் அழகான மெத்தை வீடு கட்டுவார்கள். இவ்வீடு, தென்னங்குற்றிகளை பத்தடி நீளமாக வெட்டியெடுத்து அவைகளை நிலத்தில் குழிகள் தோண்டிப் பதிப்பார்கள். இதன் பின்னர், அத்தென்னங் குற்றிகளுக்கு மேலால் பலகைகள் போட்டு அடுக்கி, அவைகளை ஆணிகளால் அறுக்கையாக அடித்துக் கொள்வார்கள். இப்பொழுது இது பெரிய மேடைபோன்று இருக்கும். இம்மேடையின் மேல் வைக்கோலைத் தூவிச் சாக்குகளால் மூடி மறைப்பார்கள். இதன் பின்னர் அழகான வார்ணப் பாய்களைக் கொண்டு விரித்து அழகுபடுத்துவார்கள். இதன் பிறகு மேடையின் மேல் கம்புகளால் வீடு போன்று கூரை போடுவார்கள். கூரை போட்ட பின்னர், மெத்தை வீட்டின் மூன்று பக்கங்களையும், மேலுள்ள கூரைப் பகுதியையும் பல நிறச் சேலைகளால் மூடிக் கட்டுவார்கள். இப்பொழுது மேடையை வளைத்துக் கட்டப்பட்ட கிடுகுகளும், கூரையும் வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமல் மறைக்கப்பட்டு அழகிய வண்ண வீடாகத் தெரியும். இவ்வீட்டை மேலும் பல நிற கடதாசிகளைக் கொண்டு சோடிப்பார்கள்.

அக்காலத்தில் மெத்தை வீடு சோடிப்பதற்கென்று கைதேர்ந்த ஆட்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் இருந்தார்கள். பெருநாட் காலங்களில் இவ்வீடுகளில் இரவு நேரங்களில் பாட்டுக் கச்சேரிகள், நாடகங்கள் என்பன தொடர்ந்து ஏழு நாட்களுக்கு நடக்கும். கிராம மக்கள் வந்து உட்கார்ந்து பார்க்கக்கூடியவாறு, மெத்தை வீட்டை வளைத்து கடற்கரையிலிருந்து குருத்து மணல் ஏற்றிப் போட்டிருப்பார்கள்.

**மீலாத் விழா**

பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தின விழாவையே மீலாத் விழா என்பார்கள். நாட்டுப்புற முஸ்லிம்கள் மீலாத் விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வார்கள். மீலாத் விழாக் காலங்களில் கிராமங்களில் உள்ள பள்ளிவாயல்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டு, பெருமானாரின் பெயரில் மௌலீது வைபவம் நடைபெறும். இது முடிந்த பின்னர் உலமாப் பெருமக்களால், பெருமானின் சிறப்புக்கள் பற்றியும் அவர்களின் வழிமுறைகள் பற்றியும், நடத்தைகள் பற்றியும் விரிவாக நள்ளிரவு வரை மார்க்கப் பிரசங்கம் நடைபெறும். இத்தோடு ஊரில் பெரிய பந்தல்கள் போட்டு வெளியூர் உள்ளூர் மௌலவிமார்களைக் கொண்டு மார்க்கப் பிரசங்கங்களும் நடைபெறுவதுடன் குர்ஆன் மத்ரசாக்களில் ஓதும் சிறார்களின் ஊர்வலங்களும் இடம்பெறும் சிறார்கள் கைகளில் கொடிகளை ஏந்தி நபி பெருமானாரின் மேல் சலவாத்துச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வார்கள். இவர்களின் ஊர்வலத்தை மத்ரசாக்களில் ஓதிக் கொடுக்கும் ஆலிம் அல்லது லெவ்வை வழிநடாத்திச் செல்வார்.

## புஹாரி மஜ்லிஸ்

இப்பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் வருடந்தோறும் ஸஹீஹுல் புகாரி கிரந்தம் மௌலவிமார்களால் ஓதப்படும். வருடத்தில் ஜமாதுல் ஆகிர் மாதம் கடைசி இரு தினங்களும், ரஜப் மாதம் முழுவதும், ஷஹ்பான் மாதம் மூன்று தினங்களுமாக 35 நாட்களுக்கு இவ்வுஹாரி மஜ்லிஸ் ஓதப்படும். புஹாரி கிரந்தத்தை மௌலவிமார்கள் ஓதி அதன் கருத்துக்களை பொதுமக்களுக்கு விளக்குவார்கள். புஹாரி ஓதும் காலங்களில் ஊர்ப் பொதுமக்கள் நேர்த்திக்கடன்களாக பாற்சோறு, இடியப்பம் என்பன செய்து கொண்டு போய் பள்ளியில் கொடுப்பார்கள். இவைகளை புஹாரி ஓதும் மௌலவிமார்களுக்கு பள்ளி நிர்வாகத்தினர் அன்பளிப்பாகக் கொடுப்பார்கள். மேலும் இந்த மஜ்லிஸுக்கு செல்லும் பொதுமக்களுக்கும் இதில் வழங்குவார்கள். கிராமப் புறங்களில் இவ்வைபவமும் ஒரு விழாவைப்போன்றே இருக்கும்.

## நிய்யத்து ஆக்குதல்

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் வயல்களில் செய்த வேளாண்மையின் அறுவடை முடிந்த பின்னர் அதிலிருந்து வரும் முதல் நெல்லைக் குத்தி, அரிசியை எடுத்து பால்புக்கை ஆக்கி, மௌலவிமார்களை கூட்டி வந்து பாத்திஹா ஓதுவார்கள். இவர்கள் பால்புக்கை ஆக்கும்போது அதில் எருமைப்பால் சேர்த்து சீனியும் போட்டு ஆக்குவார்கள். இப்படிப் பால்புக்கை ஆக்கி பாத்திஹா ஓதும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள், அயலவர்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்து செய்வார்கள். இதைப்போன்றே இவர்கள் தங்களின் நோய், துன்பங்கள் தீர்வதற்கு இறைவனிடமும், இறைநேசர்களிடம் நேர்சை செய்திருப்பார்கள். இவர்களின் நோய் துன்பங்கள், தீர்ந்தால் பால் புக்கை ஆக்கியும் பாற்சோறு ஆக்கியும் பாத்திஹா ஓதுவார்கள். இதைப்போன்றே புதுவீடு கட்டிக் குடிபுகுதல், பிள்ளைப் பேற்றினை நினைத்து நேர்த்தி செய்தல் போன்றவைகளுக்காகவும் நிய்யத்து ஆக்கி பாத்திஹா ஓதுவார்கள்.

## சூனியம்

கிழக்குப் பிராந்தியத்தில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் பேய், சூனியம், கண்ணூறு கழிப்பு, மடைவைத்தல் போன்றவைகளுக்கு அடிமையாகி இருந்தனர். இவர்கள் தங்களுடைய வைத்திய தேவைகளுக்கு பரிசாரிமார்களையும், வைத்தியர்க-ளையும் முழுமையாக நம்பி இருந்தார்கள். நம்பிக்கையும் சடங்குமான மாந்திரீகம், வசியம், பேயோட்டல், தாய்மாருக்குப் பார்த்தல். தண்ணீர் ஓதிக் கொடுத்தல், அஸ்மா எழுதி, அரக்கூடுகளில் அடைத்து, கழுத்திலும், கைகளிலும், இடுப்பிலும் போடுதல், இஸ்மு எழுதிக் குடித்தல், ஜின்வாசிலாத்துக்கு செய்தல், சூனியம் செய்தல் போன்றவற்றையெல்லாம் நம்பிக்கையின் அடிப்படையில் செய்து வந்தனர். இப்பகுதிகளில் வாழ்ந்த இவர்கள் இயற்கை வைத்தியத்திற்கு முன்னுரிமை அளித்தாலும், அதிகமானவர்கள் பேய், சூனியத்திற்கு கூடுதலான ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஊரோடிப் பேய், கரையாக்கன் பேய், கபுறாளிகளின் குற்றம், சூனியம் என்று பல விதமான நம்பிக்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் இம்மக்களின் வாழ்வு இருந்தது.

## பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்கள்

### மட்டைப் பந்து

கிராமிய மக்கள் தங்கள் பொழுது போக்கிற்காக மட்டைப் பந்து என்னும் விளையாட்டை ஆடி வந்தார்கள். இவ்விளையாட்டை ஆண்களே ஆடுவார்கள். திறந்த வெளிகளில் ஆண்கள் சேர்ந்து இரண்டு குழுக்களாகப் பிரிந்து நின்று விளையாடுவார்கள். தென்னை ஓலையின் அடிமட்டையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட மட்டையும் பழைய சீலைத்துண்டுகள் அல்லது உமிகளை உள்ளுக்கு வைத்து பந்து போன்று ஆக்கிய பந்தையும் கொண்டு மட்டைப் பந்தை விளையாடுவார்கள். 10-15 அடி நீளமும் 4-5 அடி அகலமும் கொண்ட வட்ட வடிவான கோட்டை பூமியில் வரைந்து, ஒரு முனையில் பந்து வீசுபவனும் மறுமுனையில் மட்டையைக் கொண்டு பந்தை அடிப்பவனும் நின்று விளையாடுவார்கள். அடிக்கும் பந்து கீறின கோட்டுக்குள் விழுந்தால் பந்தை அடிப்பவன் ஆட்டம் இழப்பான். பந்தை அடிப்பவன் வீசிய பந்தை வேகமாகத் தூரத்திற்கு அடித்து விட்டு கோட்டைச் சுற்றி ஓடி, தான் நின்ற இடத்திற்கு மீண்டும் வந்தால் அடித்தவனுக்கு வெற்றி கிடைக்கும். இவ்வெற்றியைப் 'பழம்' என்று சப்தமிடுவான். இதற்கிடையில் பந்தை வீசியவன் வேகமாக ஓடிச்சென்று பந்தை பொறுக்கிக் கொண்டு வந்து அவன் நின்ற இடத்திற்கு வந்து நின்றால், அல்லது பந்தை அடித்து விட்டு ஓடுபவனின் உடம்பில் அப்பந்தை எறிந்தால் அடித்தவன் தோல்வியடைவான். இவனுக்கு பழமில்லை என்று சப்தமிடுவார்கள். இப்படி எறிபட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டமிழந்தவனுக்கு பதிலாக இன்னொருவன் வந்து ஆடுவான். இவ்விளையாட்டே இன்று சிறு மாற்றங்கள் செய்து 'எல்லே' என்ற பெயரில் விளையாடப்படுகிறது. இன்னும் இன்று உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்று ஆடப்படும். 'கிரிக்கட்'டின் ஆரம்பமே இம்மட்டைப் பந்து விளையாட்டின் மூலமே வந்துள்ளதை யாரும் மறக்க முடியாது.

### கட்டப்பந்து

ஒரு பெரிய செங்கல்லை அல்லது அது போன்ற ஒரு மரக்குற்றியைச் செங்குத்தாக நிறுத்தி அதன் மேல் சிறுசிறு உடைந்த மட்பாண்டத் துண்டுகளை அடுக்கி வைப்பார்கள். அடுக்கி வைக்கப்பட்ட கட்டை அல்லது செங்கல்லின் இரு பக்கங்களாக நின்று விளையாடுவார்கள். ஒரு குறிப்பிட்ட தூரத்தில் இவர்கள் நிற்பார்கள். இவ்விளையாட்டில் ஆண்களே பங்கு கொள்வார்கள். இவர்களில் ஒருவன் சீலையால் சுற்றப்பட்ட பந்தை செங்கல்லின் மீது எறிவான். எதிரணியில் நிற்பவர்கள் பந்தைத் தாவிப் பிடித்தால், எறிந்தவன் ஆட்டம் இழப்பான். பந்து கற்கள் அடுக்கி வைக்கப்பட்ட கல்லில் பட்டு, அதன் மேல் அடுக்கி வைக்கப்பட்ட ஓட்டுத் துண்டுகள் சிதறிப் போனால், சிதறிய சிறு துண்டுகளை குற்றியில் முன்பு இருந்தது போல் எதிரணிக் காரர்கள் அடுக்குவார்கள். அப்பொழுது, சிறுதுண்டுக் கற்களை அடுக்கும் வரையிலும் கல்லுக்கு பந்தால் எறிந்து விழுத்தாட்டிய எதிரணிக்காரர்கள், கற்களை அடுக்குபவரின் முதுகில் எறிந்து கொண்டே இருப்பார்கள். கல்லை அடுக்குபவர் எதிரணிக்காரர்களின் பந்துக்கு அங்குமிங்கும் மறுக்கி மறுக்கி கற்களை அடுக்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வார் விளையாட்டு

பத்துக்கு மேற்பட்ட ஆண்கள் இரு குழுக்களாகப் பிரிந்து நின்று விளையாடுவார்கள். இக்குழுக்களுக்கிடையில் 50, 60 அடித்தூரம் இடைவெளி இருக்கும். இரு குழுக்களும் எதிர் எதிராக முகம்நோக்கி நிற்பார்கள். ஒரு அணியில் யாராவது ஒருவனின் கையைப் பிடித்து 'வார்' என்ற சொல்லி விட்டு, தனது அணிக்கு ஓடி வருவான். ஓடிவருபவனை எதிர் அணியில் உள்ள ஒருவன் துரத்தி வந்து அவனுடைய முதுகில் அடித்தால், அடிபட்டவன் ஆட்டம் இழப்பான். ஆனால் துரத்தி வருபவனை அடிக்க விடாமல் மற்ற அணியிலிருந்து ஒருவன் ஓடி வந்து அடிக்க விடாமல் தடுத்து, மீண்டும் அவனைத் துரத்துவான். இப்படி இரு குழுவினரும் மாறி மாறி துரத்திக் கொண்டே இருப்பார்கள். இப்படி இரு குழுவிலுள்ள எல்லோரும் ஆட்டம் இழக்கும் வரை விளையாட்டுத் தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்த விளையாட்டு நல்ல பரந்த வெளியான இடங்களிலேயே நடைபெறும்.

### நொண்டியடித்தல்

ஒரு பெரிய வட்டமான கோட்டை பூமியில் வரைந்து அதற்குள் ஒரு அணியினர் நிற்பார்கள். மறு அணியினர் கோட்டுக்கு வெளியில் நிற்பார்கள். வெளியில் நிற்கும் அணியிலிருந்து ஒருவன் ஒரு காலை மடித்துக் கொண்டு வட்டத்துக்குள் நிற்பவர்களை நொண்டி நொண்டிப்போய் விரசி விரசித் தொடுவான். இவனுடைய கை பட்டவன் ஆட்டமிழப்பான். இதேபோல் நொண்டி அடித்துக் கொண்டிருப்பவன் அவன் காலை விட்டாலும் அல்லது விழுந்தாலும் ஆட்டம் இழப்பான். வட்டத்தின் உள்ளே நிற்பவர்கள் நொண்டியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபடாமல் அங்கும் இங்கும் மறுக்கி ஓடிக்கொண்டிருப்பார்கள். வெளியிலிருந்து நொண்டி அடித்து வருபவர்கள் எல்லோரும் ஆட்டம் இழந்தால், வட்டத்தின் உள்ளே இருப்பவர்கள் வெளியில் சென்று நொண்டி அடித்து வருவார்கள்.

## மாங்கொட்டை தெத்துதல்

நீள் சதுரமான ஒரு கோட்டை வரைந்து அதை 7 அல்லது எட்டு பகுதிகளாகப் பிரித்து பின்னர் ஒருவன் மாங்கொட்டையை முதலாம் சதுரக் கோட்டுக்குள் போட்டு அதை நொண்டி நொண்டிப் போய் அந்த மாங்கொட்டை உள்ள கோட்டுக்குள் மேல் பாய்ந்து போய் மாங்கொட்டையை ஒவ்வொரு கோட்டுக்குள்ளும் தள்ளிக் கொண்டு போவான். தள்ளிக்கொண்டு போகிறவனின் கால் சதுரக்கோட்டின் கோட்டில் படாமல் கொட்டையை வெளியில் ஒத்தித் தள்ளினால், அவன் விளையாட்டில் வெற்றி பெறுவான்.

## உத்தியடித்தல் அல்லது கிட்டிப்புள்ளு அடித்தல்

இவ்விளையாட்டில் ஒரு நீண்ட தடியினால், நிலத்தில் ஒரு சிறு குழிதோண்டி அக்குழியின் மேல் சிறுதடியை (கிட்டி) வைத்து புள்ளால் (நீண்ட தடியால்) உந்திக் கிளப்பி எறிவான். இவ்விளையாட்டும் இரு பிரிவினராகப் பிரிந்து விளையாடுவார்கள். கடைசியில் வென்றவர்கள் தோற்ற அணியினரிடம் பாட்டம் கேட்பார்கள்.

## நாயும் புலியும்

வட்டமான கோட்டுக்குள் கொஞ்சப்பேர் நிற்பார்கள். இவர்களை வெளியில் நிற்கும் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டுக்குள் சென்று பிடிக்க முயற்சிப்பான். உள்ளுக்கு நிற்பவர்கள். இவனைத் தடுத்து பிடித்தால் ஆட்டம் இழப்பான். இதே போல் வெளியில் நிற்பவர்கள் எல்லோரும் பிடிபட்டால். அந்தக் குழு தோல்வியடையும்.

## சங்கிலி ஆட்டம்

சிலர் கைகளை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு வட்டமாக நிற்பார்கள். இவ்வட்டத்துள் ஒருவன் நிற்பான். இவனைப் பசு என்று கூறுவார்கள். வெளியிலிருந்து உள்ளே நிற்கும் பசுவைப் பிடிக்க ஒருவன் சங்கிலியை உடைத்து பாய்வான். சங்கிலியை உடைக்க முயல்பவனை, கோட்டை வளைத்து நிற்பவர்கள் விடமாட்டார்கள். கடைசியில் சங்கிலியை உடைத்து உள்ளே பாய்ந்து பசுவைப் பிடித்தால் வெற்றி பெறுவான்.

## சட்டிக்கோடு

இவ்விளையாட்டை அதிகமாக பெண் பிள்ளைகளே விளையாடுவார்கள். நிலத்தில் சதுரக்கோடுகளைக் கீறி அக்கோடுகளுக்குள், சிறு கல்லைப்போட்டு விட்டு, அக்கல்லை நொண்டி நொண்டிப் போய் எடுப்பார்கள். இப்படி எடுக்கும் போது இவர்களின் கால் தவறுதலாக சதுரக் கோட்டில் பட்டுவிட்டால், நொண்டிப் போனவர் ஆட்டம் இழப்பார்.

## கிளித்தட்டு விளையாடல்

நிலாக்காலத்தில் பரந்த வெட்டை வெளியில் ஆண்கள் இரு குழுக்களாகப் பிரிந்து விளையாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பிராந்தியத்தில் வாழ்ந்த முஸ்லிம்களின் மண்வளச் சொற்கள்

இப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் அதிகமாக அரபுச் சொற்களைக் கலந்தே பேசினார்கள். இவர்களின் பேச்சு மொழியில் அரபுச் சொற்கள் அதிகளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் அவர்கள் வாழ்ந்த ஊர்கள், கிராமங்களுக்குள் தனித்துவமான மண்வளச் சொற்களையே அன்றாடம் பேசினார்கள். இப் பண்பினை இன்றும் ஊர்களில் காணலாம். ஒவ்வொரு கிராமங்களுக்கும் ஏற்ற சொற்களை நாங்கள் இன்றும் பிரித்தறியலாம். அப்படியான சில மண் வளச்சொற்களையும், அவைகளின் கருத்துக்களையும் இப்பொழுது பார்க்கலாம்.

## முஸ்லிம்களின் மண்வளச் சொற்கள்

| | | |
|---|---|---|
| படியளக்க | - | உணவு கொடுக்க |
| சதிமானம் | - | துரோகம் |
| ஆவது | - | உருவாவது |
| ஆர | - | யாரை? |
| ஏலாது | - | முடியாது |
| குடி | - | பரம்பரையின் வழி / மக்கள் குழுமம் |
| ஊட்ட | - | வீட்டில் |
| ஊட்டுக்க | - | வீட்டுக்குள் |
| எப்பயிம் | - | எப்பொழுதும் |
| பொண்டில் | - | பெண்சாதி |
| ஆம | - | ஆமை |
| சுர்ற | - | சுடுவது |
| சென்னா | - | சொன்னால் |
| உடாம | - | விடாமல் |
| உள்ளதுமொரு | - | ஒரே ஒரு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சின்னத்து | - | விருத்தசேதனம் |
| தவுட்டுக்கு | - | தவிட்டுக்கு |
| அழுகிதாம் | - | அழுகிறதாம் |
| அழக்குள்ள | - | அழும்போது |
| அடிக்கிறயாம் | - | அடிக்கிறதாம் |
| எடுப்புணி | - | உதவாக்கரை/கழிசறை |
| ஆனை | - | யானை |
| அடுப்படி | - | அடுப்பங்கரை |
| முட | - | கஷ்டம்/ நோய் |
| வாற | - | வாறது/வருகிறது |
| அத்தகுடி | - | கஷ்டப்பட்டவர்கள் |
| எண்டாலும் | - | என்றாலும் |
| சினபிதுங்க | - | சினை வெளிவர |
| புடிக்கணும் | - | பிடிக்க வேண்டும் |
| போக்கிணம் கெட்டவன் | - | மரியாதையில்லாதவன் |
| பாக்காட்டியும் | - | பார்க்காவிட்டாலும் |
| பாக்கணும் | - | பார்க்க வேண்டும் |
| கொழம்பினா | - | குழம்பினால் |
| பொண்ணாம் | - | பெண்ணாம் |
| ஏத்திறவன் | - | ஏற்றுக்கின்றவன் |
| ஏழ | - | ஏழை / ஏமாளி |
| முற | - | முறை/ உறவு |
| பொறகால | - | பின்தொடர்ந்து |
| போகப்போடா | - | போகக்கூடாது |
| சேத்திக்கு | - | விருப்பத்திற்கு |
| செஞ்ச | - | செய்த |
| பாக்கப்போடா | - | பார்க்கக்கூடாது |
| வெளஞ்சது | - | விளைந்தது |
| சாப்பிடக்கிள | - | சாப்பிடும்போது |
| ஒத்தது | - | ஒரே மாதிரியானது |
| வள்ள | - | நாய் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சாளவாய் | - | வாயால் வழியும் வீணி |
| பாயிதாம் | - | பாய்கிறதாம் / ஓடுகிறதாம் |
| வாளி | - | மிரளுதல் / மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து ஓடுதல் |
| பேசிற | - | பேசுகின்ற |
| எச்சிவாய் | - | மலவாய் |
| ஆணம் | - | சமைத்த கறிக்குழம்பு |
| கொழுக்கல்ல | - | கொழுக்கவில்லை / சதைபிடிக்கவில்லை |
| எண்டானம் | - | என்று சொன்னானாம் |
| பொறப்பு | - | பிறப்பு |
| மூட்ட | - | மூட்டைப்பூச்சி |
| அளுப்பாடு | - | வழி |
| கன்டுக்குட்டி | - | கன்றுக்குட்டி |
| நக்குவாரம் | - | நக்கிக் குடித்தல்/ பிச்சைக்காரத்தனம் |
| அரும | - | மதிப்பு/பெறுமதி |
| கன்பொஞ்சாதி | - | விதவை |
| பீக்காடு | - | அழுக்குக் குவிந்து கிடக்கும் இடம் |
| ஊரா கோழி | - | பிறருடைய கோழி |
| இருக்கிறல்ல | - | இருப்பதில்லை |
| வெள்ளாம | - | வேளாண்மை/விவசாயம் |
| ஊடு | - | வீடு |
| அல்லயல்காரன் | - | அடுத்த வீட்டுக்காரன் |
| அரவாசி | - | அரைப்பங்கு |
| விரால் | - | வயிற்றில் கோடுகள் உள்ள குளத்தில் உள்ள பெரிய மீன் |
| கொறட்ட மீன் | - | விரால் மீனைப்போன்ற ஒருவகைக் குளத்து மீன் |
| பெயித்தாம் | - | போய்விட்டதாம் |
| சட்டியோட | - | சட்டியோடு |
| பிலால் | - | புலால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நாத்தம் | - | நாற்றம் |
| பரிசாரி | - | பரிகாரி/ வைத்தியர் |
| நடக்காராம் | - | நடக்கிறாராம் |
| மிருவடி | - | மரத்தால் செய்யப்பட்ட தடிப்பமான காலணி |
| வித்தய | - | வித்தையை |
| சாணை | - | பிறப்போடு வந்தது/ பிறக்கும் பொழுதுள்ளது |
| வயித்துப்புள்ள | - | வயிற்றில் வளரும் குழந்தை |
| இப்ப | - | இப்பொழுது |
| பதக்கட | - | கழிபட்ட நெல்/ பதர் |
| பாரவொலி | - | மதிப்புள்ள இறைநேசர் |
| புள்ள | - | பிள்ளை |
| சோட்ட | - | விருப்பம் ஆசை |
| தச | - | தசை/ இருதயம் |
| இரணம் | - | சோறு/ உணவு |
| எதாலையிம் | - | எந்தச் சக்தியாலும் |
| அட்டத்து | - | பக்கத்து/ கிட்டவுள்ளது |
| செல்லு | - | சொல்லு |
| பிச்சி | - | பிரித்து/பிய்த்து |
| தட்டு வேலி | - | கிடுகு ஓலைகளைக் கொண்டு அழகாகக் கட்டப்பட்ட வேலி |
| வில | - | விலை |
| தின்டானாம் | - | சாப்பிட்டானாம் |
| உரிஞ்சி போட்டு | - | அவிழ்த்து விட்டு |
| பீ | - | மலம் |
| சேட்ட | - | பகடி |
| பிச்ச | - | இரத்தல் |
| புடி | - | பிடி |
| திங்க | - | சாப்பிடுவதற்கு |
| வாண்டாலென்ன | - | வாழ்ந்தாலென்ன |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நக்குத் தண்ணி | - | குறைவான நீர்/ நாக்கினால் நக்கிக் குடித்தல் |
| தொறமுகம் | - | துறைமுகம் |
| காட்டப்புடா | - | காட்டக்கூடாது |
| ஏத்தின | - | ஏற்றிய |
| வித்தது | - | விற்றது |
| மல | - | மலை |
| கத்த | - | படித்த/ அறிந்த |
| நசல் | - | வியாதி |
| அங்கால | - | அடுத்த பக்கம் |
| அயப்பு | - | மறதி |
| ஒழுப்பம் | - | கொஞ்சம் |
| கக்கிசம் | - | கஸ்டம் |
| விசகளம் | - | செய்தி |
| தாயதி | - | பரம்பரை |

**வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட உறவுகள்/ பொருட்கள்**

| | | |
|---|---|---|
| புருஷன் | - | கணவன் |
| பொண்டாட்டி, பொண்டி | - | மனைவி |
| செம்பு, நங்கணம் | - | மனைவி (உவமை) |
| காக்கா பொண்டி | - | காக்காவின் மனைவி |
| தம்பிர பொண்டி | - | தம்பியின் மனைவி |
| மச்சி | - | மைத்துனி |
| பெரியம்பி/ மூத்தம்பி | - | மூத்தமகன் |
| இளையம்பி/ சின்னத்தம்பி | - | இளைய மகன் |
| மாமனார் | - | மனைவியின் தந்தை |
| மாமா | - | தாயின் சகோதரன் |
| ஊடு, ஊட்ட | - | வீடு, வீட்டுக்கு |
| அவிய | - | அவர்கள் |
| இவிய | - | இவர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அவ | - அந்தப் பெண் |
| இவ | - இந்தப் பெண் |
| ராத்தா | - மூத்த சகோதரி |
| காக்கா | - மூத்த சகோதரன் |
| பொம்பிள | - பெண்பிள்ளை |
| ஆம்பிள | - ஆண்பிள்ளை |
| கொமர் | - குமரி |
| உள்ளுடு | - ஒரு வீட்டின் பிரதான உள்ளறை, படுக்கையறை |
| ஆலஊடு | - உள்வீட்டுக்கு பக்கத்து அறை |
| சாப்பு | - வீட்டின் ஒரு பக்கத்தில் உள்ள நீண்ட அறை |
| மண்டபம் | - வீட்டின் முன்பக்கமாக அமைந்த நீண்ட அறை |
| ஒத்தாப்பு | - வீட்டின் முன்பக்கம் அமைந்த அடைக்கப்படாத தற்காலி அறை |
| தாவரம் | - தாழ்வாரம் |
| எறவானம், எறப்பு | - சுவருக்கு வெளியே உள்ள கூரையின் அடிப்பக்கம் |
| தோட்டுப்பாய் | - நீளமான, பெரிய பாய் |
| தட்டுவேலி | - அலங்கார வேலைப்பாட்டுடன் கிடுகினால் கட்டப்பட்ட வேலி |
| ஒடல | - வீடு வளவை வளைத்து வேலி கட்டிய பின்னர் வழியை மூடிக்குறுக்கே போடப்பட்டி ருக்கும் பெரிய கம்புகள் |
| பொழக்கடை | - (புறக்கடை) வீட்டின் பின்புறமாக உள்ள பகுதி |
| பொழக்கடைக்குப் போறன் | - மலங்கழிக்கப் போகிறேன் |
| கொளத்த போறன் | - மலங்கழிக்கப் போகிறேன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாலாணம் | - | தேங்காய்ப்பாலில் தயாரித்த பாற்கறி |
| அரச்சாணம் | - | செத்தல் மிளகாய்த்தூள், மசாலாத்தூள் கலந்து தயாரிக்கும் உறைப்புக்கறி |
| கடையல் | - | அடுப்பில் வைத்து கடைந்து எடுக்கும் கறி |
| தட்டுமொளகாணம் | - | நோயால் பீடிக்கப்பட்டவருக்கு சிறிய வரால், சுங்கான் மீன்களையோ அல்லது கருவாடுகளையோ கொண்டு வெள்ளைப்பூடு, பச்ச மிளகாய், மிளகு, ஏலம், உலுவா இம்மசாலாப் பொருள்களை அம்மியில் தட்டி சமைக்கும் கறி தட்டுமிளகாணம் எனப்படும் |
| எரணம் (ரிஸ்கு) | - | உணவு |
| அருவாமண | - | அரிவாள்மனை |
| தெரண்ட | - | திரணை |
| சுண்டல் | - | சுண்டி சமைக்கும் சறி |
| சம்பார் | - | உரலில் இடித்து சமைக்கும் கறி |
| துஆ அச்சிரம் | - | அஸ்மா |
| பால்வழம் | - | இறந்த பிள்ளைகளின் பேரில் கரைத்துக் கொடுக்கும் பாலும் பழமும் கலந்த இனிப்புப் பானம் |
| காவற்காரன் | - | வீட்டு நாய் |
| ஏகாலி, கட்டாடி | - | வண்ணான் |
| மாரப்பு | - | அழுக்குச் சீலைகளை ஒன்று சேர்த்துக் கட்டிய கட்டு, வண்ணான் தோழில் சுமந்து செல்வான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சவடம் - புடைவை

சோமன் - வர்ண வேலைப்பாடு கொண்ட பெண்கள் சந்திசப்பட்டுச் சோமன் உடுக்கும் தடித்த சேலை, கோவணம்

கரையல் - தயிர், பால், பழம் இவற்றைச் சோற்றுடன் கலந்து கையால் பிசைந்து எடுக்கும் உணவு

ஆலாத்தி - திருமணத்தன்று மச்சி முறையானவர்கள் மருதோன்றி போடுவதற்கு அலங்கரிக்கப்பட்ட ஆரத்தியைக் கொண்டு செல்வர்.

கண்ணூறு - கண்திருஷ்டி

தூள் பட்டை - மூக்குத்தூள் வைக்கக்கூடிய காய்ந்த வாழை மடலால் ஆக்கப்பட்டது.

பொம்புளப்பிள்ளை - பெண் குழந்தை

ஆம்பிளப்பிள்ளை - ஆண்குழந்தை, இளைஞன்

வாலிபன், இளந்தாரி - இளைஞன்

மூத்தம்மா - பாட்டி

பெத்தா - கிழவி

மூத்தப்பா - பாட்டன்

அப்பச்சி - கிழவன்

பாவா - பக்கீர்

வட்டா - வெற்றிலைத்தட்டம் (காலுள்ளது)

கிள்ளவடு - சுண்ணாம்பு டப்பா

போயிலைச் செப்பு - புகையிலை டப்பா

படிக்கம் - எச்சில் துப்பும் பாத்திரம்

பாக்கெட்டி - பாக்குவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கைப்பு | - | வெற்றிலைச் சுவையைக் கூட்டுவதற்கு உபயோகிக்கப்படும் வாசனைப் பொருள் |
| வட்டில் | - | நோயாளிகள் சிறுநீர் கழிக்க உபயோகிக்கும் பாத்திரம் |
| சேவரக்கால் | - | குழந்தைகள் உட்காரக்கூடியது. காலும் தட்டையான முகமுடையது. |
| கொரச்சி | - | வட்டமுகமும், சிறு காலும் உள்ள அகன்ற பாத்திரம் |
| அரிக்கிமில | - | அரிசி களையும் பாத்திரம் |
| அத்திமில | - | கொரச்சியின் சிறுவடிவம் |
| ஒலமூடி | - | உலைமூடி |
| ஓடு | - | மாவறுப்பதற்கும் உறொட்டி சுடுவதற்கும் உபயோகமாகும் அகன்ற பாத்திரம் |
| றெக்காவி | - | சிறிய பாத்திரம் |
| கத்திக்கம்பு | - | மரத்திலுள்ளதைப் பறிப்பதற்கு உபயோகப்படும் கத்தியுடன் கூடிய கம்பு |
| அரிவாக்கத்தி | - | சொண்டும் நீண்ட கைப்பிடியும் உள்ள கத்தி |
| பிசாக்கத்தி | - | அரிவாக்கத்தியை விடச் சிறியது |
| செம்பு | - | செம்பினால் செய்யப்பட்ட சிறிய குடம் |
| கடப்பு | - | தலைவாயல் |
| வாசல் | - | முற்றம் |
| சீப்புவர்ணம் | - | முற்றம் கூட்டும்போது ஈர்க்குத்தடியால் நிலத்தில் போடும் கோலம் |
| அடி! | - | நாயை விரட்டும் சொல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருவடி, மிருவடிக்கட்டை - கால்களில் போடும் மரத்தாற் செய்யப்பட்டது
குல்லாச்சட்டை - உடலுக்குப் பொருந்தாத தொளதொளப்பான நீண்ட சட்டை
சிறுவால் - முழுங்கால் தொடக்கம் இடுப்புவரை மறைக்கக்கூடிய ஆண்களுக்கான உள்ளாடை (சர்வால் - அரபுப்பதம்)
ஏனம் - பாத்திரம்
தெரவு - துரவு
தண்ணிச்சோறு - இராச்சாப்பாட்டுக்குப் பின் மிஞ்சிய சோற்றுப் பானையில் தண்ணீரை ஊற்றி வைத்து காலையில் அதனுடன் தேங்காய்ப்பாலையும், வெங்காயம், மிளகாய் இவற்றைச் சிறிதளவு கலந்து பிசைந்து உண்ணும் சோறு
ஈருழுவ - இரண்டு பக்கமும் நடிக்கிறவன் விலாங்கு மீனைப்போன்றவன்.
ஒறட்டிக்கு மாக்கொளைக்கிற - நண்பனைப்போல் நடித்து குடும்பத்தைக் குலைக்கும் நயவஞ்சகரின் செயல்
சுன்னத்துச் செய்தல் - கத்னா செய்தல்
பெரியபுள்ள ஆகுதல்/
பெரியமனிசி ஆகுதல் - பூப்பெய்தல்/ ஆளாகுதல்/ சாமாத்தியமாகுதல்
புள்ளத்தாச்சி - கர்ப்பிணி
குஞ்சுங்கூரானும் - சின்னஞ்சிறிய குழந்தைகள்
பன்னிக்குடம் - கருவில் குழந்தையைச் சூழவுள்ள நீர்ப்பை
கூவாக்கட்டு - கூகைக்கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிச்சல், வயிற்றுக்கடுப்பு - சீதபேதி
ஈக்குச்சதை - விலாஎலும்பின் இறைச்சி
புட்டாணம் - புட்டம்
குண்டி - வயிறு
சீவன் வங்கொலையில் போச்சி - மரணவேதனை
வேசை, வேசி, தேவிடியாள், தட்டுவாணி - விலைமாதர்
குஞ்சிச்சோறு - சிறிய பிள்ளைகள், சின்னச்சின்ன பானை சட்டிகளில் சோறு, கறி ஆக்கிக் குதூகலமாகச் சாப்பிடும் உணவு
தண்ணிவாத்தல் - குளித்தல்
கொளறுதல் - அழுதல்
பரிசாரி - பரிகாரி
ஆஸ்வத்திரி - வைத்தியசாலை
குடிச்சுப்போட்டு - குடித்து விட்டு
மம்பெட்டி - மண்வெட்டி
கோடாலி - கோடரி
தும்புவாருவக் கட்டு - தும்புத்தடி
ஈக்குவாருவக் கட்டு - ஈரக்குத்தடி
ஓமல் (உமல்) - பன்னால் முடையப்பட்டது. பொருள்களை வைத்துக் கட்டக்கூடிய ஒரு பை எனலாம்.
கடகம் - ஒரு வகைக் கொடியினால் முடையப்பட்ட வாயகன்ற பெட்டி
பொட்டகம் (பெட்டகம்) - அரும் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய மரத்தாலான பெரிய பெட்டி
தைலாப்பெட்டி - சிறிய பொருள்களை வைக்கக்கூடிய சிறிய (பெட்டகம்) பெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தட்டு | - | பன்னால், பனையோலையால் இழைக்கப்பட்ட துவளக்கூடியதும் தட்டையாதும் |
| ஓலைப்பெட்டி | - | வட்டமான அகன்ற வாயுடைய ஓலையால் இழைக்கப்பட்டது. |
| அடித்தளமட்டை | - | தென்னோலையில் வெட்டப்பட்ட அடிப்பகுதி |
| செரட்ட | - | சுரட்டை |
| உரிமட்டை | - | தேங்காயை உரித்தெடுக்கும் மட்டை |
| கண்பொஞ்சாதி | - | விதவை |
| களிசன் | - | காற்சட்டை |
| கொசுவம் | - | உடுக்கும் சேலையை மடிக்கும் மடிப்பு |
| கண்டாரவாலட்டி | - | எல்லாருக்கும் தாளம் போடுபவர் |
| புழுகன் | - | பொய்யன் |
| கட்டுமட்டா | - | திட்டவட்டமாக |
| பேக்கையன் | - | மடையன் |
| லந்தன் | - | பேக்கையன் |
| கோள்குண்டணி | - | கோள் சொல்லல் |
| ஒரு படிமானம் | - | மசாலம் |
| வடுவா | - | ஒரு ஏச்சுச்சொல் |
| வட்டுவா | - | எடுத்துச் செல்லக்கூடியதும் சுருக்கி விரிக்கக் கூடியதுமான ஒரு வெற்றிலைப்பை |
| கமிசை | - | சட்டை |
| குத்து விளக்கு | - | குத்துவிளக்கு |
| அரிக்கன்லாம்பு | - | லாந்தர் |
| தகட்டு விளக்கு | - | பாதம் உள்ள தட்டாலான திரிவிளக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்தல் விளக்கு, குப்பி விளக்கு - குப்பி விளக்கு
போனகிராப் - கிராமபோண்
கச்ச - கோவணம், கௌபீனம்
பாயசவு - பாய்கள் அடுக்கு றாக்கை

## ஆபரணங்கள்

பூணாரம் - நகை
காப்பு - வளையல்
கொம்புக்காப்பு - வளைக்கப்பட்டதும், குழல் வடிவானதும், பூட்டி விரிக்கக்கூடியதும், முகப்பில் பொம்பு வடிவமாய் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிக் காப்பு
தண்டை - மேற்படி வடிவமைப்புக் கொண்டது பருமனானது கரண்டைக் காலில் அணிவது
பட்டணக் காப்பு - ஒரு செ.மீ.அகலமான தங்கக் கட்டியால் செய்யப்பட்ட அலங்கார மற்ற பூட்டித் திறக்கக்கூடிய காப்பு
அட்டியல், சரடு - கழுத்தோடு ஒட்டிய பொன்னகை
கரணை, கொலுசு- கரண்டைக்காலில் அணியும் நகை
மூக்குத்தி - மூக்கின் நுனியில் அணியும் நகை
அல்லுக்குத்து - காதுச்சோணையைத் துளைத்து அணியும் வெள்ளி நகை
வாளி - காதின் மேற்சோணையில் அணியும் வெள்ளி நகை
காதுப்பூ - காதின் கீழ்ச்சோணையில் அணியும் மாதுளம்பூ வடிவமான நகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னி - காதுச்சோணையின் அடிப்பாகத்தில் ஒட்டினாற்போல் அணியும் நகை

மாலை, பதக்கம்- கழுத்தில் அணிவது

மோதிரம் - கைவிரலில் அணிவது

கொடி - தாலிக்கொடி

காதுக்குடும்பி - காதுக்குறும்பியை எடுக்கும் கம்பியால் ஆக்கப்பட்ட கருவி

அரமுடி (அரைமுடி)- பெண் குழந்தைகளின் பெண்ணுறுப்பை மறைப்பதற்கு அரச இலைவடிவிலான வெள்ளி நகை, அரைஞாணில் தொங்கவிடக் கூடியது.

தம்பித்தொணையன்-(துணையன்) ஆண் குழந்தைகளின் ஆணுறுப்புக்கு துணையாக அரைஞாணில் தொங்கவிடும் நகை

கொண்டக்குத்தி - சீவி முடித்த கொண்டை குலையாமல் குத்தும் ஊசி

அரக்கூடு - இதனுள் அஸ்மாக்களை வைத்து இடுப்பில், கழுத்தில் கட்டுவர்.

## பலகாரங்கள்

பணியாரம் - பலகாரம்

எண்ணெய்ப் பணியாரம் - சீனிப்பாகுடன் மாவைக் குழைத்து சிறிது சிறிதாக எண்ணெய்யில் பொரித்து எடுப்பது

குழல் பணியாரம் - அரிசி மாவைக் குழைத்து குழல் வடிவாய் உருட்டி எண்ணெயில் பொரித்து எடுப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீப்புப் பணியாரம் - இடி உரலில் அச்சுக்களை இட்டுப் பீச்சி எண்ணெயில் பொரித்து எடுப்பது

பயித்தம் பணியாரம் - இடித்த பயற்றம் பருப்புடன் சீனிப்பாகு, மா முதலியவற்றைக் குழைத்து உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் பொரித்து எடுப்பது

சோகி - அரிசிமாவைக் குழைத்து சோகி வடிவில் செய்து எண்ணெயில் பொரித்துப் பின் பாகிலிடுவது

குலுக்கச்சிப் பணியாரம் - கம்பியில் தொங்குகின்ற அச்சுகளை குழைத்த மாவில் பதித்தெடுத்து எண்ணெயில் பொரித்தெடுப்பது

வண்டப்பம் - மாவுடன் சீனியைக் கலந்து குழைத்து சிறு சிறு கோப்பை வடிவான அச்சுக்களில் வார்த்து வண்டில் அவித்து எடுப்பது

வாரப்பம் - வாழைப்பழம், மா, சீனி முதலியவற்றை வைத்து பிசைந்து சிறிது சிறிதாக வட்டமாகத் தட்டி எண்ணெயில் பொரித்து எடுப்பது

கொழுக்கட்டை- வண்டில் அவித்தெடுக்கும் ஒரு தீவனமாகும். பாகிற்போட்ட தேங்காய்ப்பூ பயறு என்பவற்றை உள்ளீடாகக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாலப்பம் | - | சிறிதளவு சட்டியில் வார்த்து அடுப்பில் வைத்து சுட்டெடுக்கும் போது தேங்காய்ப்பாலை சிறிதளவு அதன் மேல் ஊற்றி எடுப்பது |
| இடியப்பம் | - | குழைத்த மாவை இடி உரலில் இட்டு பீச்சி வண்டில் அவித்து எடுப்பது |
| புட்டு (பிட்டு) | - | மூங்கிற் குழலில் மாவையும் தேங்காய்ப்பூவையும் மாறிமாறித் தூவி ஆவியில் அவித்து எடுப்பது |
| புக்கை | - | சீனி கலந்த பாலில் பச்சரிசியை அவித்து எடுப்பது |
| நிய்யத்து | - | நேர்த்திக் கடனை நிறைவேற்று-முகமாக சமைத்த புக்கை |
| ஆபத்து ரொட்டி | - | ஆபத்துக்கள், தீமைகள் ஏற்படாமல் பிசைந்த மாவால் ஓட்டில் சுட்டு ஏழைகளுக்குப் பகிரும் உறொட்டி |
| தொதல் | - | பெரிய தாச்சியில் சீனியைத் தீய்த்து தேங்காய்ப்பால், மா என்பவற்றைக் கலந்து கிண்டி எடுப்பது, கறுப்பு நிறம், |
| மஸ்கத் | - | சீனியைத் தீய்க்காமல் மேற்கண்டவாறு கிண்டி எடுப்பது |
| வண்டு | - | ஒரு பானையின் அரைவாசிக்குத் தண்ணீரை எடுத்து அப்பானையின் வாயைத் துணியால் கட்டி மூடி அடுப்பில் கொதிக்க வைக்கும்-போது ஆவி பறந்தால் அது வண்டு எனப்படும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயக் கிரிகைகள்

தலைப்பாத்திஹா ஓதல்- கர்ப்பிணிப் பெண்களுக்காக அன்பியாக்கள் அவ்லியாக்களின் வசீலாக்கொண்டு அல்லாஹ்-விடத்தில் கேட்கப்படும் பிரார்த்தனை விருந்துடன் கூடியது.

மௌலூது ஓதல் - பெருமானார் (ஸல்), முஹித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி (ரழி) நாகூர் மீராசாஹிப் ஆண்டகை ஆகியோரின் பெயரில் ஓதப்படும் அவர்களுடைய சிறப்பை உள்ளக்கிய அறபுப் பாடலும் (பைத்) உரைகளும் உள்ள மௌலீது

கத்தம் ஓதுதல் - 3ஆம், 7ஆம், 40ஆம் நாள்களில் இறந்தவர்ளின் ஆத்ம சாந்திக்காக சூறா யாசீன் ஓதி பிரார்த்தனை புரிதல், விருந்துடன் கூடியது.

புர்தா ஓதுதல் - நோயாளியின் நோய் தீர ஓதப்படும் புர்தா ஷரீப்

ஸலவாத்துன் நாரிஓதுதல் - பெருமானார் மீது ஓதப்படுகின்ற ஸலாத்துந்நாரிய்யா என்னும் ஷலவாத்து, நாட்டங்கள் நிறைவேற இச் சலவாத்தை 4440 முறை ஓதுவர்.

பத்று ஸஹாபாக்கள் மீது மௌலீது ஓதுதல் - நாட்டம் நிறைவேற பத்று ஸஹாபாக்களின் பெயரில் பத்று மௌலீது ஓதுதல்

நாரிசா - மேற்படி நிகழ்வுகளில் பங்கு கொண்டவர்களுக்கு அளிக்கப்-படும் இனிப்புக்கள் விருந்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தூரி கொடுத்தல் - முஹித்தீன் அப்துல் காதர் ஜெய்லானி அவர்கள் பெயரில் ஊர்மக்களுக்கு கொடுக்கப்படும் பெரும் அன்னதானம். தரிக்கத்துவாதிகளும் தத்தமது வைபவங்களில் இவ்வாறு செய்வர்.

## இஸ்லாமிய மாதங்கள்

| | | |
|---|---|---|
| ஆசுறாப் பொலிமாதம் | - | முஹர்ரம் |
| நெய்னார் மொடகடந்த மாதம் | - | ஸபர் |
| தலக்கந்தூரி மாதம் | - | ரபியுல் அவ்வல் |
| கடக்கந்தூரி மாதம் | - | ரபியுல் ஃதானி |
| காதர் கந்தூரி மாதம் | - | ஜமாதில் அவ்வல் |
| மீரா கந்தூரி மாதம் | - | ஜமாதில் ஃதானி |
| தோவத்து மாதம் | - | ரஜப் |
| விராத்து மாதம் | - | ஷஃபான் |
| நோன்பு மாதம் | - | ரமழான் |
| பெருநாள் மாதம் | - | ஷவ்வால் |
| இடையித்தமாதம் | - | துல்கஃதா |
| ஹஜ்ஜு மாதம் | - | துல்ஹஜ் |

## இவர்களின் பொதுவான தமிழ், அறபுச் சொற்கள்

சுறுக்கா, விசையாய், கெதியா - விரைவாக

கணகாட்டு - கஸ்டம்

கரைச்சல், கக்கிசம் - சோதனை, பிள்ளைகளாலும் பிறராலும் உண்டாகும் தொந்தரவு

மாசாலம் - மாயாஜாலம், பசப்புதல், பாசாங்கு

கிறுகுதல் - திரும்புதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கிறுகிறுப்பு | - | தலைச்சுற்று |
| மறுகா | - | பின்னர் |
| ஒசக்க | - | உயர |
| பணிய | - | கீழே |
| வெலா, சள்ளை | - | விலாப்பக்கம் |
| சக்கு | - | சந்தேகம் |
| மண்ணாங்கட்டி | - | மண்ணால் உண்டான மண்கட்டி, அற்பம் |
| உசும்பு | - | அசைதல் |
| ஊசாட்டம் | - | தோற்றுதல் |
| காதவழி | - | கூப்பிடுதூரம் |
| கைசேதம் | - | கையறுநிலை |
| எடுத்துக்கிட்டு | - | எடுத்துக்கொண்டு |
| அவனுக்குக்கிட்ட | - | அவனிடம் |
| ஒழுங்க | - | மணல்பாதை |
| அதர் | - | வழி |
| கொழம்புதல் | - | சீர்குலைதல் |
| பொண்புடித்தல் | - | பரத்தையர்களிடம் செல்லல் |
| நக்குவாரம் | - | உழைக்காமல் செல்லும் இடங்களில் வாங்கிச் சாப்பிடும் இழிவான பழக்கம் |
| வட்டுறப்பு | - | சிற்றற |
| புணாட்டு | - | பனாட்டு |
| வில்லுக்கத்தி | - | மடித்து விரிக்கக் கூடிய சிறிய கத்தி |
| கரப்பு | - | மெல்லிய தடிகளால் கட்டப்பட்ட மீன்களைச் சிறைப்பிடிக்கும் கருவி |
| அத்தாங்கு | - | மீன்பிடிக்கும் வலையாலான கருவி |
| கொண்டோடி | - | அத்தாங்கை விடப் பெரியது |
| சொர, சுர | - | சுரக்காயின் உள்ளீட்டை எடுத்து விட்டு பிடித்த மீனைப் போடும் ஒரு கூடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பிலால் | - அறுத்த மீனைக் கழுவிய தண்ணீரும் கழிவுப் பொருள்களும் |
| பிலால் | - மீன் |
| முளிவிசகளம் | - கைவிசேடம் |
| கசபோக்கிரி | - கீழ்மகன் |
| பயிஸ்கோப்பு | - சினிமா |
| அரை | - இடுப்பு |
| அரைக்கான் | - இடுப்பில் கட்டக்கூடிய நூலால் பின்னப்பட்ட காசுப்பை |
| அரையாப்பு திரட்டியிருக்கு | - தொடை எலும்பும் விலா எலும்பும் சேருமிடத்தில் உண்டான திரட்சியான வீக்கம் |
| சொணங்குதல் | - பிந்துதல் |
| கப்பு | - மரக்கிளை |
| கொள்ளையா | - மிக அதிகமாக |
| ஒள்ளுப்பம் | - மிகக் குறைவாக |
| துடினம், துண்டா | - கட்டுக்கடங்காத பிள்ளைகள் கொடுக்கும் கஸ்டம் |
| சாந்தமாமா | - சந்திரன் |
| எழுவான் | - கிழக்கு |
| படுவான் | - மேற்கு |
| படுக்கப்போறன் | - நித்திரை செய்யப்போகிறேன் |
| அவனோட படுக்கப்போனயா நீ | - ஒரு பெண்ணைப் பார்த்தும் கேட்டால் அவள் குறிப்பிட்ட ஒருவனோடு தகாத உறவு வக்கப் போனவள் என்பதாகும் |
| கொட்டான் | - உயரம் குறைந்தது |
| நெடிசி | - நீளமானது |
| முட்டாசி | - மிட்டாய் |
| சுரி | - சேறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிச்சாட்டியம் - ஒழுங்காய் இருந்தவற்றைச் சிதைத்தல்
கௌம்புதல் - வெளிக்கிடுதல்
வெள்ளாப்பு, இருட்டோட, விடியக்கொள - அதிகாலை
கொம்புதல் - ஏகுதல்
கொளறுதல் - அழுதல்
மசண்டை - மாலைநேரம்
மத்தியானம் - நண்பகல்
ஓங்காளம் - ஓங்களித்தல்
சத்தி - வாந்தி
ராவு, ராத்திரி - இரவு, இராத்திரி
இருட்டு - இருள்
நடுச்சாமம் - நடுநிசி
சாமம் - இரவின் நாலிலொரு பங்கு
சாமான் - பொருள்கள்
சும்மா - கருத்தில்லாமல் (சும்மா வந்தேன் இடைச்சொல்)
பள்ளிக்கூடம் - பாடசாலை
படிக்கிற பள்ளிக்கூடம்
ஓதப்பள்ளிக்கொடம் - குர்ஆன் மத்ரஸா
வசியம் - வயப்படுத்துதல்
துப்பரவா - சுத்தமா, முற்றுமுழுதாக
கருகப்பெல - கறிவேப்பலை
குறுக்கால, மறுக்கால - அடிக்கடி
இஞ்சால - இந்தப் பக்கம்
அங்கால - அந்தப் பக்கம்
காப்பணம் - 25 சதம்
எட்டுப்பணம் - 50 சதம்
முக்காரூபா - 75 சதம்
ஒரு பவுண் - பத்துரூபா
குறுக்குக் கோழி - முட்டை இட்டபிறகு அடைகாக்காத கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைவாய் நக்கி - தம்மிடமிருந்த சொத்துக்கள் அத்தனையும் இழந்து விட்டுத் தவிக்கும் நிலை

கூட்டு வண்டி - கூடு கட்டிய மாட்டுவண்டி பெண்கள் மறைந்து பிரயாணம் பண்ணக்கூடியது.

கசையடிக்கிற - வண்டிச்சில்லின் அச்சுக்கு கசை (கிறீஸ்) போடாமல் காய்ந்த நிலையில் செல்லும்போது சில்லு இருபக்கமும் அசையும் போது ஏற்படும் கிறீச்சென்ற சத்தம்

பொல்லாவலாய் - அதிக துன்பம்

ஹைவான் - மிருகக் குணமுடையவன்

சள்ளு - சிக்கல் - இடர்

மொக்கன் - அறிவில் குறைந்தவன்

பலாய், முசிபத்து - வறுமைநிலை, துன்பம்

தட்டத்தனிய - தன்னந்தனிய

கசவாரம் - இழிவானவன், இழிவானவள்

அறப்படிச்சவன் - பொருந்தாத செயல்களைச் செய்பவன்

ஹவால் - பேராசை

தெகரம்போற - பட்டினி கிடந்தவன் உணவு உண்டவுடன் உடலில் ஏற்படும் மாற்றம்

றாஹத்து - ஆறுதல்

குவ்வத்து - உடலுறவு கொள்ளக்கூடிய ஆண்மைத் தன்மை

கழிசற - சழிசடை

கோப்பிசம் - கூரை

மாங்கு - வீட்டுக் கூரைக்கு உபயோகப்படுத்துவதற்கு காட்டிலிருந்து பெறப்படும் கம்பு (கைமரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சாரம் | - உயரமான சுவர்களைக் கட்டுவதற்கு மேஸ்திரி நின்று வேலை செய்யக்கூடிய உயரம் |
| கமலத்தட்டு | - குழைக்கப்பட்ட சீமந்துக் கலவையை வைக்கக்கூடிய தட்டு |
| மல்லம் | - வீட்டினுள்ளே பொருத்தப்பட்ட பலகை |
| லாக்கை | - வீட்டுப் பொருட்களை வைக்கக் கூடிய தட்டுகள் கொண்ட தளபாடம் |
| பிராக்கு | - பராக்கு |
| நோய்நொம்பலம் | - நோய்வாய்ப்படுதல் |
| பறவை பக்கிசம் | - பறவைகள் |
| கமுகம்புள்ள | - இளங்கமுக மரம் |
| கமுகம்புறாள | - கமுகஞ் சலாகை |
| கோப்பத்தை | - கமுக ஓலையின் அடிப்பாகம், கட்டுச்சோறு எடுத்துச் செல்வதற்கு இதை உபயோகிப்பர் |
| தென்னம்புள்ள | - தென்னங்கன்று |
| அசி | - ஐது |
| அசிலப்பார் | - ஒழுக்கக்கேடான குணம் |
| முண்டியல் | - நெம்புகோல் |
| குண்டாளம் | - உட்குழிவு |
| பல்லக்குக் கதை | - பெருமைக்கதை |
| பாகு | - சீர், சீனிப்பாகு |
| கலாதி | - மிக்க அழகு |
| விண்ணன் | - கெட்டிக்காரன் |
| கருக்கல் | - இருள் தோன்றுவதன் ஆரம்பநிலை |
| வெட்டாப்பு | - கனத்த மழைக்குப் பிறகு எறிக்கும் வெயில் சீரான காலநிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பவ்வல் | - | மழை இருட்டு |
| பதம் | - | பாட்டு, தன்மை (மாம்பழம், தின்னும் பருவத்தில் உள்ளது) |
| உச்சாப்பு | - | உற்சாகம் |
| வாலாயம் | - | கைவந்த கலை |
| ஓராட்டு | - | தாலாட்டு |
| ஒப்பாரி | - | வாயிலும் வயிற்றிலும் அடித்து சத்தம்போட்டு அழுதல் |
| துக்குணியும் | - | கொஞ்சமேனும் |
| தோது | - | வாய்ப்பு |
| பம்பல், மடிவெடித்தல் | - | அதிகம், அதிக விளைச்சல் |
| மாட்டாங்கித்தனம் | - | முட்டாள்தனம் |
| உசார் | - | ஜாக்கிரதை |
| ஓடாவி | - | தச்சன் |
| சட்டாம்பி | - | வகுப்புத்தலைவன் |
| வேலிபாய்தல் | - | பெண்ணுடன் தொடர்புகொள்ள பிறரறியாமல் அவள் வீட்டு வேலியைத் தாண்டி ஏறி உட்செல்வது |
| தளப்பத்து | - | தளப்பத்து மரத்தின் ஓலை மழைக்கு குடையாகப் பிடிக்கக்கூடியது |
| தத்தாரி | - | தறிகெட்டவள் |
| பெறப்பான்பாசை | - | ஒருவருடைய பிறப்பிலிருந்து வந்த தன்மை (மாறாதது) |
| காவின் | - | திருமண பதிவும், வைபவமும் |
| தலாக்கு | - | கணவன் செய்யும் விவாகரத்து |
| பஸகு | - | மனைவி செய்யும் விவாகரத்து |
| தொறட்டுக்காரன் | - | முரண்டு பிடிப்பவன் |
| வெப்புசாரம் | - | அழுகையை அடக்கி விம்மும் நிலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறாதத்து - இயல்பான தன்மை, வழக்கம்
மொங்கான் - நிலத்தை இடித்து இறுக்குவதற்கு உபயோகிக்கப்படும் ஒரு கருவி
சூது - சூது விளையாட்டு
தோம் - சூது விளையாடும் இடத்துக்கு வாங்கப்படும் கூலி
கடதாசி வெளாடுதல் - தாள் கூட்டம் விளையாடுதல்
வீச்சுக்கம்பு - துலா
துலாக்கால் - துலாவைத் தாங்கி நிற்கின்ற கவர் உள்ள கால்
பட்டை - துலாவில் தொங்குகின்ற வாளி
கொரங்கொட்டி - துலாவை ஆடாமல் அசையாமல் அச்சில் இறுக்கமாக பிடித்திருப்பது
பத்திக்கை - துலாவுடன் பொருத்தப்படும் பட்டை கட்டும் கம்பு
மாந்திப்போச்சி - அருகிப்போயிற்று
சேத்திக்குச் செய்தல் - ஆணையோ அல்லது பெண்ணையோ வயப்படுத்தச் செய்யும் சூனியம்
ஒண்ணா - இயலா
முஸ்பாத்தி - மகிழச்சிகரமான பொழுதுபோக்கு
லைபுகேடு - ஒழுங்கின்மை
ராத்திர - ஒரு சம்பவத்தையோ, ஒரு பிழையையோ அடிக்கடி சொல்லிக் காட்டுவது
வசை - ஒருவருடைய குற்றத்தைச் சொல்லி மல்லுக்கிழுப்பது
ஆல்வாட்டுதல் - ஈரப்பதன் உள்ள பொருட்களை வெயிலில் சிறிது காயவிடுதல்
பீத்தல் - கழிச்சல், ஓட்டை
அட்டாதுட்டி - அட்டகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப் பார்த்தல் - துப்புரவு செய்தல்
தட்டுமுட்டுச் சாமான் - வீட்டுக்குத் தேவையான சிறுசிறு பொருள்கள்
சூத்தப்பல் - சூத்தைப்பல்
முசுறன் - கோபக்காரன்
நாசிவன், அம்பட்டன் - நாவிதன்
நுகம் - மாட்டுவண்டியில் மாடு கட்டுமிடம்
கவணை - வீட்டில் மாட்டின் உறைவிடம்
குத்துக்கால் - சில்லின் கால்கள்
மூக்கணை - மாட்டின் மூக்கில் உள்ள கயிறு
முட்டு - வண்டியை நிறுத்துவதற்கு வண்டியின் கீழுள்ள தடி
வேர்க்குரு - வியர்க்குரு
அரப்பு - தலையில் வைப்பதற்கு மூலிகை அரைத்த குழம்பு
ஒத்தணம் - ஒற்றடம்
நலம்போற - நாம்பன் மாட்டின் ஆண்மைத் தன்மையை இல்லாமல் செய்வதற்கு அதன் விதையை கிட்டிக்கொண்டு நசிப்பது
பொறுதிக்கேக்கிற, மன்னிப்புக்கேக்கிற - மன்னிப்புக் கேட்டல்
முட்டுக்காய் - இளநீர்
குரும்பட்டி - தேங்காயின் மிகச் சிறிய பருவ இள வடிவம்
றங்குப்பெட்டி - தகரத்தால் செய்யப்பட்ட பெட்டி
தைலாப்பெட்டி - மரத்தால் செய்யப்பட்ட சிறிய பெட்டி
கிரிகோலம் - அலங்கோலம்
சடைவு/சடைதல் - சோர்வு
விக்கினம் - கஷ்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயந்தரம் - பிற்பகல்
கல்லாப்பெட்டி - வியாபாரிகள் காசு போடும் பெட்டி

## இவர்களின் விளையாட்டுக்கள்

புள்ளுக்குட்டி
மட்டப்பந்து
தெத்துக்கோடு
போள விளையாட்டு
புள்ளியடிக்கட்டை
நாயும் புலியும்
கிறிக்குஞ்சில்
உத்துஞ்சில்
வார் விளையாட்டு
புள்ளப்பெத்து விளையாடுதல்
கண்ணாமூச்சி விளையாட்டு
ஒழித்து விளையாடல்
ஈச்சங்கொட்டை விளையாட்டு
ஒற்றையா? ரெட்டையா?
புலியும் பசுவும்
தொட்டோடும் விளையாட்டு (புலி விளையாட்டு)

## வயலும் வயல் சார்ந்தவைகளும்

வட்டை - வயல்
வரவ - வயலொன்றில் வரம்புகளால் மறித்துக் கட்டப்பட்ட துண்டு நிலம்
போட்டாவரவ - பெரியவரவை
போட்டா வரம்பு - போட்டா வரவையை சுற்றியிருக்கின்ற அகலமான நீளமான வரம்பு
அதர் - வழி
கடப்பொலி - நன்கு தூற்றாத நெற்குவியல்
தலப்பொலி - நன்கு தூற்றிய நெற்குவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தி - அரிவாள்
தீ நா - நெருப்பு
வக்கட - வரவையில் உள்ள நீரை வெளியேற்றுவதற்கு வரம்பின் அடியில் மட்டும் வெட்டும் பாய்ச்சல் வழி
தேமாறு - வரவையில் தண்ணீர் நிரம்பாமல் வழிந்தோடுவதற்கு வரம்பில் சிறிது ஆழத்துக்கு வெட்டும் பாய்ச்சல் வழி
நட்டும - நண்டு, எலி தவளை, முதலிய சிறிய பிராணிகளால் வரம்பில் போடப்படும் துளை
பொர - புரை
பறண் - பரண்
வேலிக்காவல் - வயலைச் சுற்றியுள்ள வேலியைக் காவல் காப்பது
வட்டவிதான - வட்டையை நிருவாகிப்பவர்
அதியாரி - வட்டை விதானையின் உதவியாளர்
சுமந்திரம் - வட்டை விதானைக்கும் அதிகாரிக்கும் கொடுக்கும் கூலி
துளாவ - வளமற்ற ஒரு பெரு நிலப்பரப்பு
கன்னட்டி - மிகச் சிறிய வரவை
வெள்ளாமை வெட்டுற - அருவி வெட்டுதல்
உப்பட்டி - இரண்டு கைகளாலும் அள்ளக் கூடிய அளவு கொண்ட கதிர்கள்
கட்டு - பல உப்பட்டிகள் மார்பளவு அடுக்கப்பட்டு கயிற்றினால் கட்டப்பட்ட கதிர்க்கட்டு
சூடு - வெட்டப்பட்ட நெற்கதிர்களை ஓரிடத்தில் சுரட்டை வடிவில் குவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவட்டி - சூடு வைக்குமிடம்

கத்தை - சூட்டை வேய்வதற்கு கட்டப்படும் இரண்டு பிடியளவு நெற்கதிர்கள்

சூடு போடுதல்- நெல்லையும் வைக்கோலையும் வேறாக்கல்

பொலி - சூடு போட்ட நெல்

அவணம் - முப்பது மரைக்கால் கொள்ளளவு

மரைக்கால் - நெல் அளக்கும் முகத்தலளவை

கொத்து - 6 கொத்து ஒரு மரைக்கால்

சண்ட - அரைக்கொத்து

காக்கொத்து - அரைச் சுண்டு

சொறங்க - நாலுவிரற் கடையளவு

வேலைக்காரன் கம்பு - சூட்டை இழுப்பதற்கு உதவும் கொக்கிக் கம்பு

பதர் - உள்ளீடு இல்லாத நெல்

பதக்கடை - அரை வயிறு, கால் வயிறு, பதர், கூழன் எல்லாம் கலந்த நெற்கழிவு

அவரி - பொலி தூர்ப்பதற்கு உபயோகிக் கப்படும் மூன்று கால்களைக் கொண்ட முக்காலி

புரன் - சாகுபடி செய்யாமல் கிடைக்கும் நிலம்

நில எடுப்பு - வயலின் முதலாவது உழவு

ரெண்டாமடி, ரெட்டிக்கிற - இரண்டாவது உழவு

விதைப்பு - விதைத்தல்

பலகடித்தல் - சதுப்பு நிலத்தில் பலகை பூட்டப்பட்ட கலப்பையில் மாட்டைப் பூட்டிச் சமப்படுத்தல்

கங்களவு தண்ணீ - இளம் பயிருக்கு அதன் உயரம் வர பாய்ச்சப்படும் தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஒட்டு | - | அறுவடை செய்தபின் எஞ்சிய நிலத்துடன் ஒட்டியிருக்கும் நெற்பயிர் |
| தாள் | - | நெற்பயிரின் ஓலை |
| தாக்கத்தி | - | நெல்லை அறுவடைசெய்யும் வளைந்த கத்தி |
| வந்தை | - | முளைதிறன் அற்ற நெல் |
| மூக்கு | - | முளை நெல்லின் ஆரம்பக் கட்டம் |
| மடி | - | மழையால், நோயால் பாதிகப்பட்ட நெல் |
| அட்டாளை | - | மர உச்சியில் கட்டப்பட்டிருக்கும் பரண் |
| கொடல | - | கதிர் கர்ப்பமான நிலை |
| கோவங்காப் பருவம் | - | நெல் முற்றிப்பழுத்த பொன்னிறம் |
| குத்தகை | - | ஒருவருடைய காணியை இன்னொருவர் எடுத்துச் செய்யும் போது உரிமையாளருக்கு கொடுக்கும் பணம் |
| ஒத்தி | - | ஒருவரிடம் தனது காணியை ஈடுவைத்து அவரிடம் ஒரு தொகைப் பணம் பெற்றதன் பின் அவர் வாங்கிய காசை மீளக்கொடுக்கும் வரை வட்டியோ, குத்தகையோ இல்லாமல் செய்வது |
| முல்லைக்காரன் | - | போடிமாரின் காணிகள் அனைத்தையும் மேற்பார்வை செய்பவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெற்செய்கை சம்பந்தமான விவசாய குழூஉக்குறிகள்

| | |
|---|---|
| மரக்குந்தி | - குரங்கு |
| கொழஞ்சான் | - கறி |
| ஆடி | - கச்சை |
| ஒட்டி | - சிறுவால் |
| வெட்டுவாயன் | - மண்வெட்டி |
| பொலிக்கொடி | - வைக்கோல்புரி |
| குஞ்சுவாயன் | - வாயொடுங்கிய கைப்பெட்டி |
| பிரிஞ்சான் | - வைக்கோல் |
| நெடுமுழவன் | - கயிறு |
| கலங்கல் | - தண்ணீர் |
| வலிச்சான் | - உறொட்டி |
| வெண்சோடன் | - தேங்காய் |
| மின்னி, மின்னி கட்டுதல் | - நித்திரை |
| நெடுமின்னி | - மரணம் |
| வருணன் பேஞ்சான் | - மழை |
| கூழைக்கையான் | - பேய் பிசாசு |
| அடைக்கலஞ்சல்லி | - பெண் |
| கடல்கரும்பு | - மீன் |
| கைக்காச்சி பெருவெளிச்சம | - நெருப்பு |
| ஒட்டுவாயன், கோணியல் | - சாக்கு |
| போர் | - கதிர்க்குவியல் |
| கரைஞ்சான் | - வாழைப்பழம் |
| கூரைக்கோடு | - வீடு |
| பெருவாயன், வளவன் | - ஓலைப்பெட்டி |
| கருங்காய் | - பாக்கு |
| புகைஞ்ான் | - புகையிலை |
| பெருவெள்ளி | - வெளிச்சம் |
| பத்தினி | - விறகு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பூரணி | - மங்கை |
| கருமால் | - யானை |
| செம்மாள் | - வெற்றிலை |
| அதட்டி | - பிரம்பு |
| சறுக்கால் | - வண்டி |
| வாரிக்காலன் | - சூடுமிதிக்கும் மாடு |

## கிழக்குப் பிராந்திய முஸ்லிம்களிடையே வழக்கிலிருந்த நாட்டுப்புற அறிவியலும் - நம்பிக்கைகளும்

### நாய் ஊளையிடுவது

சாதாரண நேரத்தில் ஊளையிடுவதை விட அதுவும் அர்த்த ராத்திரியில் நாய் ஊளையிடுவது அபசகுணமாகக் கருதப்படுகின்றது. ஏதோ நடக்கப்போகின்றது, அன்றி யாரோ மரணமடையப் போகின்றார்கள் என்பதே அதன் அர்த்தம். அவ்வாறு உண்மையில் நடந்தும் இருக்கிறது. நாய் ஊளையிடும் பாங்கைக் கொண்டே இதை இவர்கள் அறிவர். நாய்க்கு விசேட உணரும் அறிவு உண்டு என்பது எல்லோராலும் ஏற்றுக் கொண்ட கருத்து. சிலர் இதை மூடநம்பிக்கை என்பர். அதனை அடியோடு ஏற்றுக் கொள்ளாது நாட்டார் அறிவியல். உண்மை என்றே கூறும் நாட்டாரை மூடராக்க விஞ்ஞானத்தால் கூட முடியாது. விஞ்ஞானத்துக்கு வழிவகுத்தது நாட்டார் மெய்ஞ்ஞானமே. அவர்களின் அறிவியலே.

### காகம் கரைதல்

காகம் மனித நேயத்தில் மனிதனை விட உயர்ந்து நிற்கிறது. காகங்கள் கூடி வாழும் திறனும் கிடைக்கும் உணவை தான் மட்டும் உண்ணாது தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றத்தையும் கூட்டி உண்ணும் பண்பும் உள்ளது. இது காக்கை இனத்தின் உயர்ந்த பண்பு. பகல் வேளைகளில் கூட்டமாக ஒருவர் வீட்டைச் சுற்றி விடாது கரைந்து கொண்டிருந்தால், அவ்வீட்டில் யாரோ மரணமடையப் போகின்றார்கள் அன்றி துயர் துன்பம் ஏற்படப்போகிறது என்று உணரப்படும். முன்னர் நிஜமாகவே இப்படி நடைபெற்றிருக்கிறது. இதனை மூடநம்பிக்கை என்றோர் பின்னர் சரியென ஏற்றுக் கொண்டனர்.

பொதுவாக சகல பறவைகளுக்கும் பின் நடக்கப்போவதை முன் உணரும் அதீத சக்தி உண்டு. அண்மையில் சுனாமி வருவதற்கு முன்னதாக பறவைகள் பல காத தூரத்தில் இருந்து பதுகாப்புத்தேடி இங்கு வந்ததாக அறிகின்றோம். விஞ்ஞானமும் இதை ஏற்றுக் கொள்கிறது. வீடுகளில் காகம் கரைந்தது, பின் நடக்கப்போகும் விபரீதத்தை முன்னரே சொல்லிக்காட்டுகின்றன. காகம் எதற்காகக் கரைகிறது என்பதை அறியும் ஆற்றல் நாட்டார் அறிவியலுக்குண்டு என்றே கூறலாம்.

### ஆந்தை ஊமல்

ஆந்தைகள் பகல் வேளைகளிலன்றி இரவிலேயே உலாவும். காட்டுப் பகுதியே இது சஞ்சரிக்கும் இடம். ஆனால் எதிர்பாராதவிதமாக கிராமப்புறங்களுக்குள்ளும் வந்து விடும். அர்த்த ராத்திரியில் உயர்ந்த தென்னை, மாமரங்களில் இருந்து ஊமும். துரத்தினாலும் கூட சுற்றி சுற்றி இந்த இடத்திற்கு வந்து ஊமிக்கொண்டே இருக்கும். இதனை ஊமத்தன்கோழி என்றும் கூறுவர். இதன் ஊமும் ஒலி கேட்பதற்கு பயமாகவே இருக்கும். இதுவும் அர்த்தம் சார்ந்தவையாகவே கொள்ளப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. ஆந்தை கத்திய பின்னர் இயற்கை மரணம், திடீர் விபத்துக்கள் நிஜமாகவே நடந்திருக்கிறது. ஆந்தை அலறினால் நாடே கிலி கொள்ளும்.

கிழக்குப் பிராந்தியத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததனால் தமிழர்களுடைய நம்பிக்கைகளுள் அதிகமானவை முஸ்லிம்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்து விட்டன. தற்போது படித்தவர்கள் பெருகியதாலும் இஸ்லாத்தின் கொள்கைகளைப் பற்றிய தெளிவான அறிவு உண்டானதாலும் இந்த நம்பிக்கைகளில் அதிகமானவை நாளுக்கு நாள் விடுபட்டுப் போய்விட்டன. எது எப்படி இருப்பினும் இம்மக்களின் உடலிலும் உணர்விலும் ஊறிய இந் நம்பிக்கைகள் இன்றும் இருக்கின்றன.

## வறுமையையும் மறதியையும் கொண்டு வரும் நம்பிக்கைகள்

1. நிர்வாணமாக நித்திரை செய்வது
2. அதிகமாக உறங்குவது
3. வெங்காயம், பூண்டு ஆகியவற்றின் தோலை நெருப்பில் போட்டு கரிப்பது
4. பொய் சொல்வது
5. புறா வளர்த்து அதனுடன் விளையாடுவது
6. கட்டுண்ட கிடைத்தண்ணீரிலும் சாம்பலிலும் சிறுநீர் கழிப்பது
7. விபசாரம் செய்வது
8. மனைவியிடம் அதிகமாக உடலுறவு கொள்வது
9. மலசலம் கழித்த பின் துப்புரவு செய்யாமல் இருக்கும்போது உண்பது, குடிப்பது உறங்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இடது கையால் சாப்பிடுவது, குடிப்பது
11. இரவில் வீடு பெருக்குவது
12. உடுத்திருக்கும் உடையினால் வீட்டைப் பெருக்குவது
13. வீட்டில் குப்பை கூழங்களைப் போட்டு வைப்பது.
14. கிளிந்த ஆடைகளை அணிந்து கொண்டே தைப்பது
15. மூட்டை, பேன் ஆகியவற்றை கொல்லாமல் விடுவது
16. உணவை பிறருக்குக் கொடுக்காமல் கஞ்சத்தனம் பண்ணுவது
17. மலசல கூடங்களில் இருந்து கொண்டு பல்துலக்குவது, சாப்பிடுவது
18. ஒடிந்த சீப்பினால் தலை சீவுவது
19. சிலந்தி நூலாம்படை, தூசு ஆகியவற்றை வீட்டில் சுத்தம் செய்யாமல் விட்டு வைப்பது
20. வாசற்படியில் உட்கார்ந்திருப்பது
21. நகங்களைப் பற்களால் கடிப்பது
22. பாலையும், மீனையும் ஒன்றாகப் சேர்த்துச் சாப்பிடுவது
23. தகப்பன் ஆசிரியர்களுக்கு மத்தியில் நடந்து செல்வது
24. பிறருடைய தூரிகையினால் பல்துலக்குது
25. இரண்டு பெண்களுக்கிடையே நடந்து செல்வது

## காகம் கரைதலும் அடி அளத்தலும்

முஸ்லிம்களிடையே அரிசிக்காகம், அண்டங்காகம் என்ற வேற்றுமையில்லை. ஏதாவது ஒரு காகம் வீட்டுக்கு முன்னுள்ள மரத்திலோ வேலியிலோ நின்று தொடராக் கரைந்தால் அடி அளந்து பலன் பார்ப்பார்கள். காகம் கரையும் நேரம் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலை தனது காலடியால் அளந்து கணக்கிடுவர். 10க்கு மேல் 11,12 அடிகள் இருந்தால் 01,02 எனவும் 1/2க்குக் குறைவாக இருந்தால் அதைக் கழித்தலும். 3/4 அடி இருந்தால் அதை ஓர் அடியெனக் கொண்டு கணக்கிட்டு கீழே தரப்பட்டுள்ளவாறு பலன் பார்ப்பர்.

1. ஓரடி காணுமாகில் - உன்னிய கெடுதி சொல்லும்
2. ஈரடி காணுமாகில் - எண்ணியது சித்தியாகும்
3. மூன்றடி காணுமாகில் - முழு மானிடரைக் காண்பாய்
4. நாலடி காணுமாகில் - நல்லதோர் கருமம் காணும்
5. ஐந்தடி காணுமாகில் - பஞ்சமும் பிணியும் நீங்கும்
6. ஆறடி காணுமாகில் - அறிதியாய்ச்சாவு சொல்லும்
7. ஏழடி காணுமாகில் - எண்ணியது சித்தியாகும்
8. எட்டடி காணுமாகில் - திட்டமாய் மரணம் வரும்
9. ஒன்பதடி காணுமாகில் - ஊழிகால நன்மையுண்டாம்
10. பத்தடி காணுமாகில் - பரதேசம் போவானாமே

இஃது இவ்வாறு இருக்க காகம் கரையும் ஒலிக் குறிப்பை வைத்து பதற்றமில்லாமல் கரைந்தால் யாரோ விருந்துக்கு வரப்போகிறார் என்றும் அல்லது வெளியூர் சென்றவர் வீட்டுக்கு வரப்போகிறார் என்று பதற்றத்துடன் கரைந்தால் ஏதாவது ஓர் அனர்த்தம் நடக்கப்போகிறதோ என்றும் நம்புவார்கள்.

## சகுனம் பார்த்தல்

ஒரு பயணம் புறப்படும் போது கால் இடறுதல், தலையில் நிலை தட்டுதல், பின்னால் இருந்து ஒருவர் அழைத்தல், வண்ணான் வெளுத்த மாராப்புடன் எதிர்ப்படுதல், பூனை குறுக்கறுத்தல், நாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊளையிடுதல், மொட்டைத் தலையன், விதவை முக்காடு இல்லாத பெண்கள், அங்கவீனர்கள், அழகற்ற முகமுடையோர், விறகுக்காரன் ஆகியோர் எதிரிலே வருதல் கூடா. அப்படி வந்தால் பயணத்தைத் தொடராமல் திரும்பி வந்து ஆற அமர இருந்து மீண்டும் புறப்படல் வேண்டும். ஒருவர் உண்ணும்போதும் பயணம் புறப்படக்கூடாது என்று நம்புவர்.

## ஆபத்து ரொட்டி

தனது குடும்ப உறுப்பினர் ஒருவர் எதிர்பாராத ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டால் அவரைப் பீடித்திருக்கிற கிறகம் ஆபத்து நீங்குவதற்கு குறித்தவருடைய தலைப்பருமன் அளவுக்கு பிசைந்த மா உருண்டையை எடுத்து 7 ரொட்டிகள் சுட்டு ஏழைகளுக்கோ இயலாதோருக்கோ கொடுத்தால் கிறகம் நீங்கி விடும் என்று நாம்புவார்கள்.

## நிய்யத்துப் புக்கை

நிய்யத்து - நேர்ச்சை புக்கை - புழுக்கல்

தனது நேர்த்திக்கடனைத் தீரப்பதற்கு தேங்காய்பால், பசுப்பால், எருமைப்பால் இவற்றுள் ஏதாவது ஒன்றுடன் வெள்ளரிசியைச் சேர்த்து அவித்து அதன்பின் நன்றாக தித்திக்குமாறு சீனி சேர்த்து ஆக்குவது நிய்யத்துப் புக்கை என்பர். ஆக்கிய புக்கையை தமது உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் கொடுத்து நேர்ச்சையைத் தீர்ப்பர்.

## தாய்மார் (அம்மாள்) பார்வை கொள்ளுதல் (அம்மை)

தாய்மார் பார்வை கொண்டால் அதாவது அம்மை நோய் ஏற்பட்டால் பத்திரம் (வேப்பிலை) அரைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் கண்டவரின் உடல் முழுக்கப் பூசுவர். கொழுக்கட்டை, மோதகம், பணியாரம் என்பவற்றை சுட்டு கடல் நாச்சிமாருக்கு கடலில் கொட்டிக் கழிப்பதுடன் நோயாளியையும் குளிக்க வைப்பர்.

**பால் பழம்**

மரணித்த சிறிய குழந்தைகளுக்காக சிறு பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்து பாலும், வாழைப்பழமும், சீனியும் சேர்த்துத் தயாரித்த பால் பழத்தை இறந்த பிள்ளைகளின் சாந்திக்காக பருகக் கொடுப்பர்.

**பல்லியும் பாம்பும்**

இம்மக்கள் ஒன்றைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது பல்லி கத்தினால் பேசிக்கொண்டிருக்கும் விடயம் உறுதியாக நடக்கக் கூடும் என்று நம்புவார்கள். மட்டுமன்றி பல்லி அடித்தால் 10 நன்மை என்ற பழமொழியும் இவர்களிடத்தில் உண்டு.

நல்ல பாம்பு, சாரைப்பாம்பு போன்றவற்றைக் கண்டால் அப் பாம்மைப் பார்த்து, ''நீ ஜின் ஆக இருந்தால் (ஜின் என்பது மனிதனைப் போன்ற ஒரு படைப்பு. வேண்டிய உருவங்களைப் பெறக்கூடிய அருபமான படைப்பு) இவ்விடத்தை விட்டுப் போய்விடு. போகாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று கூறியதும் அப்பாம்பு சென்று விட்டால், அதை விட்டு விட வேண்டும். இல்லா விட்டால் எந்தப் பாம்பாயினும் அடித்துக் கொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் பார்த்தல்

பால் என்பது ஓர் அரபுச் சொல். "நல்ல வார்த்தை என்பது இதன் பொருள்". பால் பார்ப்பது ஒரு கலை. இக்கலையில் சோதிடம், இராசி, எண்சாத்திரம் ஆகிய கலைகள் அடங்கியிருக்கின்றன. எண் சாத்திரத்தை அப்ஜத்துக் கணக்கு என்று அரபியில் கூறுவர். ஆங்கில எழுத்துக்களுக்கு எண்கள் உள்ளது போல அறபு எழுத்துக்களுக்கு எண்கள் உள்ளன. இரு மொழி எழுத்துக்கள் குறிக்கும் எண்களிடையே பெரிதும் ஒற்றுமையுண்டு. நோய், வறுமை, தொழில், வாழ்க்கை பிரயாணம், முயற்சி போன்ற இன்னோரன்ன விடயங்களில் நலவு கேடு என்பவற்றை பால் மூலம் பார்த்துக் கொள்ளலாம்.

## துஆக் கட்டுதல் (அஸ்மாக் கட்டுதல், அட்சரம் கட்டுதல், தாயத்துக் கட்டுதல்)

பீடைகளிலிருந்து நீங்க துஆ ஓதி இடுப்பில் கட்டுவார்கள். இந்நம்பிக்கை இன்று இம்மக்களிடம் உண்டு.

## மரணம் அடைந்தவரின் பேரில் கத்தம்

ஒரு முஸ்லிம் மரணித்த 3ஆம், 7ஆம், 20ஆம், 40ஆம் நாள்களிலும், ஒரு வருடத்தாலும் அவர் ஆத்மா சாந்தியடைய அவர் பெயரால் கத்தம் (பிரார்த்தனை) செய்து உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் விருந்து படைத்தல்.

## நிலம் எடுத்தல்

வாஸ்த்து சாஸ்திரம் பார்த்து வீடு கட்டுவதற்கு எல்லோராலும் முடியாவிட்டாலும் ஊரிலுள்ள பெரியார்களைக் கொண்டு ஓரளவு சாஸ்த்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையைப் பின்பற்றி நிலமெடுத்து ஒரு புதிய வீட்டைக் கட்டத் தொடங்குவர். இதற்கு "நிலம் எடுத்தல்" என்று அழைப்பர். நிலம் எடுத்ததன் பின்பு அத்திவாரம் வெட்டி அதைக் கட்டத் தொடங்கும் போது வீட்டின் நிலத்தின் மத்தியில் ஒரு சிறு குழி வெட்டி அக்குழிக்குள் தங்க ஆபரணம் அல்லது ஆபரணத்துண்டுகள், நவதானியங்கள் என்பவற்றை வைத்து மூடி விட்டதன் பின்பு அத்திவாரத்தைக் கட்டுவர். இப்படிச் செய்வதால் அவ்வீடு கட்டத் தொடங்கும் நாளிலிருந்து அவ்வீட்டிலுள்ளோர் செல்வச் செழிப்புடன் வாழ்வர் என்றும் வீடு விரைவாக முடிவடையும் என்றும் நம்புவர்.

## கண்ணூறு படுதல் (கண்ணேறு, கண்திருஷ்டி)

கண்ணூறு படுவதை நாம் எல்லோரும் இதை ஏற்றுக் கொண்டுள்ளோம். இதற்கான பரிகாரம் பல உள. அவையாவன.

## காலடி மண்ணும் காய்ந்த மிளகாயும்

1. கண்ணூறு பட்டவரின் காலடி மண்ணை ஒரு சிறங்கையளவு எடுத்தல். அத்துடன் 3 செத்தல் மிளகாயையும், வீட்டுக் கூரையிலோ வேலியிலோ உள்ள இற்றுப்போன ஓலைத்துண்டுகளையும், ஈர்க்குத் துண்டுகளையும் கையில் எடுத்து கையைப் பொத்திக் கொண்டு கண்ணூறு பட்டவரின் தலையை 3 முறை கையால் சுற்றுதல். பின் தலையிலிருந்து அடிவரை வல இடமாக தடவியபின் நெருப்பில் போட்டு பொசுக்குதல். மிளகாய் பொசியும்போது சுற்றி இருப்பவர்களுக்கு புரையேறாவிட்டால் கண்ணூறு பட்டிருக்கிறது என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2. மழுக்காய்ச்சுதல் (மழு - எரி இரும்பு)

மழுங்க (நெருப்பில் தழல்போல்) காய்ச்சிய இரும்பை ஒரு வெறும் மண் சட்டியில் வைத்து கண்ணூறு பட்டவரின் முகத்தின் அருகே கொண்டு சென்று காய்ச்சிய இரும்பில் தண்ணீரை ஊற்ற அதிலிருந்து பிறக்கும் ஆவி அவருடைய முகத்தில் படியுமாறு பிடித்தல் பின் அத்தண்ணீரில் 3 மிடர் பருகக் கொடுத்து எஞ்சிய தண்ணீரால் சர்வாங்கங்களையும் கழுவுதல்.

### 3. ஓதிப்பார்த்தல்

கண்ணூற்றுக்கு ஓதிப்பார்ப்பவரிடம் தண்ணீர் ஓதி நோயாளிக்குக் கொடுத்தல்.

## முடிவுரை

தமிழன்றி வேறெந்த மொழியும் சரளமாகப் பேசமுடியாதவர்களாகவுள்ள கிழக்கிலங்கை முஸ்லிம்களை, ''முஸ்லிம் தமிழர்கள்'' என்று ஏன் அழைக்கக்கூடாது என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. முஸ்லிம்கள் தமிழர்கள்தான் என்று கூறுகின்றவர்கள் உண்மையில் முஸ்லிம்களின் பூர்வீகம், வரலாறு பற்றியும், முஸ்லிம்கள் இப்பிரதேச வாழ்க்கையோடு ஒன்றிணைய வந்த காலச் சூழலையும் அதற்கான பின்னணியையும் விளங்காதவர்களே. தமிழர்களின் பசுமையான நிலங்களை, கபடமாக கவர்ந்து தம்மை அவற்றில் இருக்கச் செய்து கொண்டவர்களே இப்பிராந்தியத்தில் வாழும் பெருந்தொகை முஸ்லிம்கள் என்ற பழிச்சொல் இவர்களின் மீது சுமத்தப்பட்டு வருகிறது. இது அப்பட்டமான விதண்டாவாதமாகும். இப்பிரதேச வரலாற்றில், முஸ்லிம் மக்களின் பூர்வீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகக் கூறப்படாதது போனதே இதற்குக் காரணமாகும். இப்பிராந்தியம் பற்றி எழுதப்பட்ட நூல்களும் முஸ்லிம்கள் பற்றிய தெளிவையும் அவை கொடுக்கவில்லை. உதாரணத்திற்கு 1921ல் முதலியார் S.O.கனகரத்தினம் அவர்கள் ''மட்டக்களப்பு மாவட்டம்'' பற்றிய தகவல்களைத் திரட்ட வந்தபோது முஸ்லிம்கள் இம்மாவட்டத்தில் ஏறத்தாழ நாற்பது (40%) சத விகிதத்தினராக இருந்தனர். ஆனால் அவர்கள் பூர்வீகம், வாழ்க்கைமுறை பற்றி விளங்கிக் கொள்ளக்கூடியளவு குறிப்புக்கள் அங்கில்லாது போனமையே பெருங்குறைபாடேயாகும். இவ்வாறு இங்கு வாழும் முஸ்லிம்களும் தமிழர்களும் மிக நெருக்கமாக நீண்ட காலம் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதே வரலாறு கூறும் உண்மையாகும். முஸ்லிம் மக்கள் பேசும்மொழி, (மண்வளச் சொற்கள்) பேசும்முறை என்பனவும் மரைக்கார் முறை கொண்ட பள்ளிவாசல் நிர்வாகமுறை என்பன தமிழர்களின் வரலாற்றிலிருந்து பிரிக்கமுடியாதபடி இண்டறக் கலந்திருக்கின்றன.

ஆயினும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறு தனித்துவமான பல அம்சங்களை கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இதனால் இப்பிரதேச முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களை முடிந்தளவு கோர்வை பண்ணுவது இன்று அவசியமாகின்றது. இக்கோர்வையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதற்கு இடமுண்டு. ஏனெனில் இப்பிரதேச முஸ்லிம்கள் பற்றிய வரலாற்றுச் சம்பவங்கள் அனுமானமாகவே எழுதப்பட வேண்டியனவாக இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின பூர்வீகம் பற்றிய கருத்துக்களையும், முறையான சான்றுகளையும் கள ஆய்வுகளின் மூலம் தேடியெடுத்து, இம்மக்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களை ஆவணப்படுத்திட அறிஞர்களும், ஆய்வாளர்களும் முயல வேண்டும்.

முக்கியமாக இப்பிராந்தியத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் இப்பணியைச் செய்வதற்கு முன்வந்து, கள ஆய்வு செய்து, இங்கு வாழ்ந்த மக்களின் வரலாற்றை ஆவணப்படுத்தி நூலுருவாக்குவதற்கு உதவுதல் இப்பல்கலைக்-கழகங்களில் தலையாய கடனாகும்.

எப்படிப்பட்ட மண்ணுக்கும் ஒரு வரலாறும் சமூகப் பின்னணியும் கட்டாயம் இருத்தல் வேண்டும். இதைத் தேடியெடுத்து நூலுருவாக்கித் தருவதற்கு பல்கலைக்கழகங்கள் துணிவோடு வருவார்களென்று நம்புகிறேன்.

□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்துமீரான்
முத்தமிழ்க் கடலில்
முதிர்ந்த முத்து.
இலங்கை
இலக்கிய வானத்தின்
தங்கத் தாரகை.
கவிதை, சிறுகதை,
நாடகம், கட்டுரை என்று
இலக்கியத்தின்
சகல துறைகளிலும்
முத்திரை பதித்தவர்.
'கலாபூஷணம்', 'தமிழ்மாமணி',
'இலக்கிய வேந்தர்'
'இலக்கியத் திலகம்' என்ற
பட்டங்களாலும்
கௌரவிக்கப்பட்டவர்.
சட்டத்துறை அறிஞர்
சமூக அக்கறையால்
அரசியல் துறையிலும்
ஆக்கப் பணிகள்
ஆற்றி வருபவர்.
இன்று, எங்களுக்கு
"கிழக்கிலங்கை நாட்டுப்புற
முஸ்லிம்களின் பூர்வீகமும்
வாழ்வும் வாழ்வாதாரங்களும்"
எனும் நூல் மூலமாக
அவருடைய மண்ணின்
மகத்துவத்தை முத்தெடுத்துத்
தந்திருக்கிறார்
முத்துமீரான்.

**கவிக்கோ அப்துல் ரகுமான்**

மீரா உம்மா வெளியீடு
ISBN 978-955-8281-06-2
9 789558 281062
Anna Print - Maruthamunai. 0772256648

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org